

கல்கி
KALKI 3.7.88 ரூ. 2.


'போயே போச்சு!'
'இட்ஸ் கான்!'
'காயப்!'
போயே போச்சு!
AMRUTANJAN
Pain Balm
வலியும் வேதனையும் மாயமாய் மறைகின்றன!
பத்து இயற்கை மூலப்பொருட்களின் இதம் தரும் கலவை- இதுவே அமிர்தாஞ்சன். 90 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களின் பரிபூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானது.
தலைவலி, உடல்வலி, சுளுக்கு — எதுவாக இருந்தாலும் லேசாகத் தேய்த்தாலே போதும். நீங்கள் உணரும் முன்னரே உங்கள் வலியும் வேதனையும் மறைந்தே போய்விடும்!
அமிர்தாஞ்சன்
மீண்டும் புன்னகை மலரச் செய்கிறது — விரைவாக!
அமிர்தாஞ்சன் லிமிடெட்
OBM 824 TM



விமானத்தில் க[illegible]ப் பேட்டி

— கல்கிக்குப் பிரதமர் அளித்த பிரத்தியேக பேட்டி.

பேட்டி கண்டவர்: வாஸந்தி

தேர்தலின் பொருட்டுக் கூட்டுச் சேர்வது நிரந்தர வெற்றியாகாது!

பிரதமமந்திரி ராஜீவ்காந்திக்கு ஓய்ச்சல் ஒழிவில்லாத வேலை என்றால் அவருடைய அலுவலகத்தாருக்கு அதைவிட அதிகப்படியான வேலை! ஒரு மாத காலமாகக் கல்கிக்குப் பேட்டி கொடுக்கத் தீர்மானிக்கப்பட்ட தேதிகள் அவருடைய அவசர அலுவல்களை முன்னிட்டு ஒத்திப் போடப்பட்டுக் கடைசியில் ஜூன் 18 — ஆம் தேதி பிரதமமந்திரி தார்வாருக்கும் கோயமுத்தூருக்கும் சென்று தில்லி திரும்பும் சமயத்தில் விமானத்திலேயே பேட்டி காணலாம் என்று தெரிவித்தார்கள்.

இரவு 8.30—க்கு விமானத்தில் அவருடைய பிரத்தியேக அறைக்குள் நான் சென்ற போது பிரதமர் அப்போதும் ஃபைல்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் பேச ஆரம்பித்ததுமே நம் கவனத்தில் படுவது அவருடைய சரளம். பிரதம மந்திரி என்கிற பந்தா சிறிதும் இல்லாமல் அவர் காட்டும் சிநேகிதம். பேச்சுக்கு இடையில் இயல்பாகச் சுலபமாகச் சிரிக்கிறார். எல்லாக் கேள்விகளுக்கும் அக்கறையுடன் பதில் வருகிறது — அலட்சியமோ, ஜூம்பமோ, பதில்களில் நிச்சயமாக இல்லை. அத்தனை அலுவல்களிடையேயும் நிதானம் தெரிகிறது. சுமார் நாற்பது நிமிடங்கள் பேட்டி நடந்தது. நேரம் இருந்திருந்தால் இன்னும் பேசியிருப்பார் என்று தோன்றிற்று.

கேள்வி: ஒரு தமிழ் பத்திரிகைக்காக உங்களைப் பேட்டி காண்கிறேன் என்கிற காரணத்தால், தமிழ் நாட்டையும் தமிழ் மக்களையும் பாதிக்கும் சில விஷயங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் எண்ணத்துடன் என் கேள்விகள் இருக்கும். தேர்தலை எதிர்நோக்கியிருக்கும் தமிழ் மக்களின் மனத்தில் சில சந்தேகங்கள் இருக்கின்றன. உங்களுடைய பதில்கள் அவற்றை அகற்றும் என்று நம்புகிறேன். சில பொதுவான அபிப்பிராயங்களிலிருந்து ஆரம்பிக்கிறேன்.

ஜவாஹர்லால் நேருவின் காலத்திற்குப் பிறகு பல காலமாக வடக்கிலிருந்து தெற்கு அந்நியப்பட்டது போன்றதொரு பாவனை வளர்ந்து வருகிறது. பல பிராந்தியக் கட்சிகள் வளர்வதற்கு இதுவே காரணம். இப்படிப்பட்ட ஒரு பாவனையைப் பற்றி, திருப்பத்தைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: நம் நாட்டு அமைப்பில் எல்லா விதமான கருத்துக்களுக்கும் இடமுண்டு. மாநிலம், மொழி, தேசியம் ஆகிய அடிப்படையில் ஏற்படும் கருத்துக்களுக்கு இட



மிருக்கத்தான் வேண்டும். ஆனால் பிராந்தியக் கட்சிக் கருத்துக்கள் தேசிய லட்சியத்திற்கும் ஒருமைப்பாட்டிற்கும் முரணாகப் போகாமலிருக்க வேண்டும் என்பது முக்கியம். காங்கிரஸ் கட்சிதான் தேசிய நோக்கு கொண்டது என்று நாங்கள் நினைக்கிறோம். நான் காங்கிரஸ்காரன் என்கிற காரணத்தால் இதைச் சொல்லவில்லை. ஆழ்ந்து நோக்கும் போது சில விஷயங்கள் தெளிவாகின்றன. பல கட்சிகள் பல' காரணங்களுக்காக உருவாகின்றன. ஆனால் அநேகமாக எல்லாமே குறுகிய அரசியல் வெற்றியைக் கருத்தில் கொண்டு ஆரம்பிக்கப்படுகிற காரணத்தால் தேசிய லட்சியங்களை அடிப்படையாகக் கொள்வதற்குப் பதில் பல விஷயங்களில் விட்டுக் கொடுக்கும்படியான நிர்ப்பந்தங்களில் இருக்கின்றன. மாநில அளவில் அரசியல் வெற்றி கிடைத்தால் போதும் என்கிற கருத்தோடு செயல்படுவது ஒரு தாற்காலிக ஆதாயத்தைக் கொடுக்கலாம். ஆனால் காலப் போக்கில் இதனால் மக்களுக்கு நன்மையில்லை என்பது பல மாநிலங்களின் சமீப கால அனுபவங்களிலிருந்து நிரூபணமாகியிருக்கிறது. தமிழ் நாட்டையே எடுத்துக் கொள்ளுங்கள். காங்கிரஸ் ஆட்சிக்குப் பின் வந்த ஆட்சிகளில் தமிழ் நாட்டின் முன்னேற்ற வேகம் எல்லாத் துறைகளிலும் படிப்படியாகக் குறைந்து போனதைக் காணலாம்.

கேள்வி: அந்நியப்படுத்தப்பட்ட பாவனை தெற்கில் இருப்பது மறுக்க முடியாத உண்மை. அதற்கு மறைமுகமான பல காரணங்கள் இருக்கலாம். முதல் காரணம் ஹிந்தி மொழி தங்கள் மேல் திணிக்கப்பட்டு விடுமோ என்கிற பயம் —

பதில்: இதுபற்றி முதலில் எங்கள் கொள்கையைத் தெளிவுபடுத்தி விடுகிறேன். நான் பலமுறை எனது பேச்சுக்களில் கூறியிருக்கிறேன். ஹிந்தியைத் திணிப்பது எந்த வகையிலும் ஹிந்தியைத் தேசிய மொழியாக்குவதில் உதவப் போவதில்லை. அப்படிச் செய்தால் விளைவு எதிர்மாறாகத்தான் போகும். அதனால் ஹிந்தி திணிக்கப்படுகிறது என்கிற குற்றச்சாட்டுக்கோ பயத்திற்கோ இடமில்லை. அந்த எண்ணம் அரசுக்கு இல்லை.

கேள்வி: வேறு பல குறைகளும் உண்டு. உதாரணத்துக்கு, சுற்றுலாத் துறையை எடுத்துக் கொள்ளுங்கள். வட இந்தியாவில் இருக்கும் இடங்களுக்குத்தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தெற்கைப் பற்றி வட இந்தியருக்கு அதிகம் தெரிவதேயில்லை. சுற்றுலாத்துறை கவர்ச்சியான தென்னிந்திய 'பாக்கேஜ் டூர்ஸ்' ஏன் நடத்தக் கூடாது? எந்த மாநிலத்தில் எந்த மொழி பேசப்படுகிறது என்று அப்போதாவது வட இந்தியருக்குத் தெரியவரும்! விந்திய மலைக்குத் தெற்கே பேசப்படும் மொழிகள் எல்லாம் அவர்களுக்கு 'மதராசி' தான்!

பிரதமர் —(சிரிக்கிறார்) அதெல்லாம் ஒரு காலத்தில் இருந்திருக்கலாம்! இப்பொழுது இல்லை. சுற்றுலாவில் வடக்குக்கு எத்தனை முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அத்தனை முக்கியத்துவம் தெற்குக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்துக்குக் கோவளம், மஹாபலிபுரம் தமிழ் நாட்டுக் கோவில்கள், கோவா எல்லாம் முக்கியத்துவம் தரப்படுகிற சுற்றுலா மையங்களாக இருக்கின்றன. நான் பதவிக்கு வந்த பிறகு 85—இல் தேசிய சுற்றுலா இயக்கம்தான் என்னுடைய முக்கியமான பணிகளில் ஒன்றாக அமைந்தது. அதில் நிச்சயமாக முன்னேற்றம் கண்டிருக்கிறோம். சுற்றுலா பெரிய அளவில் விரிவடைந்திருக்கிறது. வடக்கிலிருந்து தெற்குக்கு எவ்வளவு பேர் போனார்கள் என்று தெரியாது. நான் அதை விசாரிக்கிறேன். ஆனால் சுற்றுலாத் துறையில் தெற்கு — வடக்கு பேதமில்லை.

கேள்வி: வடக்கில், ஹரியானாவைத் தவிர வேறு எந்த மாநிலத்திலும் பல்கலைக் கழகங்களில் தென்னிந்திய மொழிகள் கற்பிக்கப்படுவதில்லை. வட இந்தியர்களுக்குத் தென்னிந்திய மொழிகளைக் கற்க ஊக்கமளித்தால், தெற்கில் ஹிந்திக்குக் காண்பிக்கப்படும் எதிர்ப்புக் குறையலாம்.

பதில்: இதைப் பற்றி நாங்களும் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். நான் எல்லா மாநிலத்து முதல் மந்திரிகளிடமும் இதைப் பற்றிப் பேசி வருகிறேன். ஒரு பிரச்னை என்னவென்றால், ஒரு மொழியைக் கற்க அதிகம் மாணவர்கள் முன் வரவில்லையென்றால், அதற்கென்று ஒரு தனித் துறையை ஆரம்பிப்பது விரயமாகும். மாணவர்களிடையே பிற மொழிகளைக் கற்க ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஏதாவது செய்ய வேண்டும்.

கேள்வி: தொழில் துறையிலும் ஒதுக்கப்பட்டது போன்ற சூழ்நிலை இருக்கிறது.

சமீபத்தில் நடந்த காங்கிரஸ் மகாநாடே தி.மு.க., அ.தி.மு.க. ஆட்சிகளில் தமிழ் நாட்டில் தொழில் துறையில் ஏற்பட்டுப் போன தேக்கத்தைப் பற்றிக் குறிப்பிட்டது. மாநில அரசுகளின் அரசியல் சித்தாந்தம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் தேசம் முழுவதிலும் ஏற்றத் தாழ்வற்ற சீரான தொழில் வளர்ச்சி இருக்கிறதா என்று கவனிக்க வேண்டியது மத்திய அரசின் பொறுப்பில்லையா?

பதில்: கண்டிப்பாக! மத்திய அரசு மிகக் குறைந்த அளவில் தொழிற் துறையில் முதலீடு செய்திருக்கும் மாநிலங்கள் எவை என்று உங்களுக்குத் தெரியுமா? உத்தரப் பிரதேசமும் ராஜஸ்தானும்! மற்ற மாநிலங்களை விட அவை மிகவும் பின்தங்கியிருப்பதே ஒரு பிரச்னையாக இருக்கிறது. காரணம் என்னவென்றால், ஆரம்ப காலத்தில் தென்னிந்திய மாநிலங்கள் வெகு துரிதமாக நிறையத் தொழில் வளர்ச்சியை அடைந்தன. வட இந்திய மாநிலங்களுக்கு இத்தனை வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இதைப் பிறகு சமன்படுத்த வேண்டி வந்தது. மக்கள் தொகையுடன் ஒப்பு நோக்க நடக்கும் மத்திய அரசின் தொழில் துறை முதலீடு பற்றிக் குறிப்பிடுகிறேன். இந்த கணிப்புப்படி உ.பி. குறைவு. அதை விடக் குறைவு ராஜஸ்தான். ஆனால் ஒரு விஷயம் புரிந்து கொள்ள வேண்டும். மத்திய அரசின் முதலீடு ஒரு கிரியா ஊக்கியாகத் திகழ வேண்டும். அதையே தொழில் முன்னேற்றத்துக்கான முடிந்த முடிவான செயல் திட்டமாக எண்ணி விடக் கூடாது. மத்திய அரசின் முதலீட்டைத் தொடர்ந்து மாநிலங்களும் அக்கறை காட்டி அவற்றை விரிவுபடுத்த வேண்டும். ஆனால் எங்கள் அனுபவத்தில் கண்டதைக் கூறுகிறேன். காங்கிரஸ் ஆட்சி இல்லாத மாநிலங்களில் அரசுகள் தொலை நோக்குடன் முன்னேற்றப் பணிகளைக் கவனிப்பதில்லை. சமூக நலத் திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டியதுதான். ஆனால் அந்தத் திட்டங்களுக்கு எங்கிருந்து பணம் வரும் என்று யோசிக்காமல் செயல்படுவது ஆபத்து. தொழில் வளர்ச்சியைப் பெருக்கினால் மற்ற சமூக நலன்கள் இயல்பாகப் பெருகும்; அல்லது பெருக வகை செய்யும் என்ற சிந்தனை இருப்பதாகத் தெரியவில்லை. தொழில் வளர்ச்சி திட்டங்களுக்கும் சமுதாய நலத் திட்டங்களுக்கும் மத்தியில் ஓர் ஆரோக்கியமான இடைநிலை இருக்க வேண்டும். கவர்ச்சியான சமூகப் பணிகளில் மட்டுமே ஈடுபடும் போதுதான் தொழில் வளர்ச்சியில் தேக்கம் ஏற்படுகிறது.

கேள்வி: ஓர் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்த நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

பதில்: தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இன்று கூட டாக்டர் அலெக்ஸாண்டருடன் பேசினேன். தொழில் முன்னேற்றத்திற்காக அவர் அளித்துள்ள சில சலுகைகளும் அமுல்படுத்துகிற திட்டங்களும் நல்ல விளைவுகளை இப்பொழுதே கொடுக்கத் தொடங்கியுள்ளதாகச் சொல்கிறார். வரிகளைக் குறைத்ததில் முடங்கிக் கிடந்த தொழில்கள் பல சுறுசுறுப்படைந்து உற்பத்தி அதிகரித்துப் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படத் தொடங்கியுள்ளது. இன்னும் நிறைய திட்டங்கள் வைத்திருக்கிறார். வெகு விரைவில் தொழிற் துறையில் நல்ல மாற்றம் ஏற்படும். சிறிய ஊர்களின் முன்னேற்றத்திலும் அதிக கவனம் செலுத்தும்படி அவரிடம் சொல்லியிருக்கிறேன். அவர் அதற்கும் திட்டங்கள் வைத்திருப்பதாகத் தெரிகிறது. கூடிய விரைவில் அவை அமுலாக்கப்படும் என்று சொல்கிறார்.

கேள்வி: உங்கள் அன்னை, பிரதமராக இருந்த போது சென்னையின் தண்ணீர் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணும் வகையில் தெற்கு மாநில முதல்வர்களை அழைத்துத் தெலுங்கு கங்கா திட்டத்தை ஆரம்பித்தார். பிறகு மத்திய அரசு அதில் மும்முரமாகச் செயல்படவேயில்லை என்று தோன்றுகிறது.

பதில்: இது உண்மையே இல்லை. முற்றிலும் தவறான செய்தி — நானே எல்லா (தென்னிந்திய) மாநிலத்து முதல் மந்திரிகளுடனும் பலமுறை இதைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கிறேன். ஒரு முறை இரவு இரண்டு மணி வரை ஆந்திர மாநிலத் தலைவருடன் உட்கார்ந்து பேசியிருக்கிறேன். இதில் ஒரே ஒரு பிரச்னைதான். நான் அந்தப் பேச்சு வார்த்தை நடத்திய போது ஓர் இடத்தில் அவர்களது பேச்சு முடங்கி நின்றது. அவர்கள் கொடுத்துள்ள திட்டத்தில் ஒரு சின்ன ஓட்டை இருக்கிறது. அதன் வழியே அவர்கள் அதிகப்படியான நீரை உறிஞ்சிக் கொள்ளப் பார்த்தார்கள். அப்பொழுது நாங்கள் சொன்னோம். ''நீங்கள் இப்படிச் செய்வது சரியில்லை. மற்றவர்களை நீங்கள் ஏமாற்ற முடியாது. உங்களுக்கு நியாயமாக என்ன கிடைக்க வேண்டுமோ அதற்கு நாங்கள் வழி செய்கிறோம்'' என்றோம். இது ஒரு வருஷம் முன்பு. ஆனால் இப்பொழுது அவர்கள் மறுபரிசீலனை செய்வதாக அறிகிறேன். மந்திரி தினேஷ் ஸிங்கை அதைக் கவனிக்கச் சொல்கிறேன். கூடிய விரைவில்



• ''தமிழ் நாட்டில் காங்கிரஸைப் பலப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியம்.''

ஒரு நல்ல முடிவு ஏற்படும் என்று நினைக்கிறேன்.

கேள்வி: சென்னை மக்களின் தண்ணீர் பிரச்னை தீரும் என்கிறீர்கள்!

பதில்: நல்லன நடக்கும் என்று நம்புவோம், பிரார்த்திப்போம், உழைப்போம். நம்பிக்கையில்தான் உலகமே இயங்குகிறது.

கேள்வி: தமிழ் நாட்டுத் தேர்தலைச் சந்திக்க என்ன ராஜதந்திரம் வைத்திருக்கிறீர்கள்? எதிர்க் கட்சிகளைக் குறை கூறிக் கண்டிப்பதே காங்கிரஸ் கட்சியின் போக்காக இருக்கிறது. தெருவில் நடக்கும் பாமரனுக்கு இந்த யுக்தி அலுப்பைத் தருகிறது. யார் தனக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வார்கள் என்பதுதான் அவன் கவலை. காங்கிரஸ் கட்சியின் திட்டம் என்ன? ஏதாவது ஸ்திரமான பொருளாதாரத் திட்டங்கள் வைத்திருக்கிறீர்களா?

பதில்: நான் ஏற்கனவே சொன்னபடி தமிழ் நாட்டுக்கான எங்கள் எண்ணங்களை இப்பொழுதே தமிழ்நாடு ஆளுனர் மூலமாகச் செயல்படுத்தி வருகிறோம். அதற்கு நல்ல வரவேற்பும் உள்ளதைக் காண்கிறோம்...

கேள்வி: இதெல்லாம் உங்களுடைய தேர்தல் 'ஸ்டண்ட்' என்று எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டுகின்றனவே?

பதில்: இது தவறான குற்றச்சாட்டு. முன்னேற்றப் பாதையை வகுப்பது தேர்தல் ஸ்டண்டா? நிர்வாகத்தைச் சுத்தப்படுத்தித் துரிதப்படுத்துவது தேர்தல் ஸ்டண்டா? கடந்த சில மாதங்களில் தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தைப் பாருங்கள்! திட்டமிட்ட ஸ்திரமான செயல்கள் அவை! ஸ்டண்டுக்காகச் செய்வது தாற்காலிகச் செயல்களாக அல்லவா இருக்கும்?

கேள்வி: மறைமலை நகரில் நடந்த காங்கிரஸ் மகாநாடு தமிழ் நாட்டு மக்களிடையே எதிர்பார்த்த அளவு பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்பது பரவலான கருத்து. தமிழ் நாட்டில் காங்கிரஸ் கட்சி மறுபடி ஆட்சிக்கு வர வேண்டும் என்பதில் தீவிரமாக இருந்தால் ஒரு ஆத்ம பரிசோதனை, ஒரு சுய விமர்சன நோக்கு அவசியம். கடந்த இருபது ஆண்டுகளாக சாமானிய மக்களுடன் தொடர்பு கொள்ள காங்கிரஸ் கட்சி எதுவும் செய்யவில்லை. காங்கிரஸ் கட்சியின் அடித்தளத்தை — தொண்டர் படையைப் பலப்படுத்த எதுவும் நடக்கவில்லை. இதனை எப்படி சரிப்படுத்தப் போகிறீர்கள்?

பதில்: ஆமாம், கட்சிக்குள் ஏற்பட்டிருப்பது ரொம்பத் தீவிரமான பிரச்னைதான். அது சமீப காலத்தில் ஏற்பட்ட மாற்றம் இல்லை. காங்கிரஸ் கட்சியில் முதல் பிளவு வந்த போதே ஏற்பட்டு விட்டது. இரண்டாவது பிளவு வந்த போது அதிகரித்தது. நாங்கள் அதை அடி நிலையிலிருந்து சீர்ப்படுத்த மிகத் தீவிரமாக முயன்று வருகிறோம். இது தொடர்பாக நிறையக் கருத்துப் பரிமாற்றங்கள் ஏற்பட கட்சிக் கூட்டங்களை நடத்துகிறோம். கட்சியை ஒழுங்குபடுத்தும், பலப்படுத்தும் வழிகளை ஆராய்ந்து செயல்படுத்தும் பணியிலும் இறங்கியிருக்கிறோம். இந்தக் கருத்துப் பரிமாற்றங்கள் காரணமாக, என்ன குறைகள் அவற்றை எப்படி நிவர்த்தி செய்வது என்பதற்குப் பல யோசனைகள் கிடைத்திருக்கின்றன. எனக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. இந்தத் தீவிர முயற்சியினால் காங்கிரஸ் மீண்டும் அடித்தளத்திலிருந்து ஸ்திரப்படுத்தப்படும் என்று. இப்படி அடித்தளத்தைப் பலப்படுத்த நாங்கள் எடுத்த முயற்சிக்கு, ஏற்கெனவே சில நல்ல விளைவுகள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணத்துக்குத் திரிபுராவில் அசாத்தியமான காரியம் என்று மற்றவர்கள் நினைத்திருக்கையில் நாங்கள் தேர்தலில் வெற்றி பெற்றோம். ஆகையால் கட்சியை அடித்தளத்திலிருந்து பலப்படுத்துவது காரிய சாத்தியமற்றது என்று சொல்வதற்கில்லை. சில இடங்களில் சிறிது கஷ்டமாக இருக்கும். வேறு இடங்களில் அதிக கஷ்டமாக இருக்கும். ஆனால் தீவிரமாக முயன்றால் வெற்றி கிடைக்கும். நாங்கள் இந்தப் பணியைத் துவங்கி விட்டோம். நாங்கள் இதில் (காங்கிரஸை பலப்படுத்தும் பணியில்) வெற்றி பெறுவோம் என்ற முழு நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கேள்வி: தமிழ்நாட்டுத் தேர்தலில் வெற்றி அடைவதை விடத் தமிழ்நாட்டு எம். பிக்களின் (எந்தக் கட்சியாக இருந்தாலும்) ஆதரவைப் பாராளுமன்றத்தில் பெறுவதை அதிக முக்கியமாக நீங்கள் கருதுவதாக ஒரு கருத்து இருக்கிறது. அது உண்மையா?

பதில்: (வியப்புடன் சிரிக்கிறார்) — நோ! இல்லவே இல்லை! நானூறுக்கு மேற்பட்ட எங்கள் அங்கத்தினர்களின் பலம் இருக்கும் போது நாங்கள் எதற்கு இதைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்? ஆனால் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த வேண்டியது மிகவும் முக்கியமான பணியாக நான் நினைக்கிறேன். முக்கியமாகத் தமிழ்நாட்டைப் போன்ற ஒரு மாநிலத்தில்.

கேள்வி: தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியின் தேர்தல் சாணக்கியம் என்ன? வேறு கட்சியுடன் கூட்டு சேரப் போகிறீர்களா? அப்படிச் சேர்ந்தால் காங்கிரஸ் இரண்டாந்தர நிலையிலேயே தொடர்ந்து இருக்கும் என்று நீங்கள் நினைக்கவில்லையா?

பதில்: கூட்டுச் சேருவோமா என்பதைப் பற்றி இவ்வளவு சீக்கிரம் சொல்ல முடியாது. விஷயங்கள் எப்படி முன்னேறுகின்றன அல்லது பின்னடைகின்றன என்று பார்த்துத் தீர்மானிக்க வேண்டும். எந்த அளவுக்குக் காங்கிரஸ் கட்சியைப் பலப்படுத்த முடியும் என்பதைப் பொறுத்திருக்-

கிறது அது. இப்பொழுது நாங்கள் செய்ய வேண்டிய மிக முக்கியமான வேலை கட்சியைப் பலப்படுத்துவது என்று நான் நினைக்கிறேன்.

கேள்வி: நான் கடந்த ஓராண்டு காலமாகத் தமிழ் நாட்டில் வட ஆற்காடு மாவட்டத்துப் பெண் பீடித் தொழிலாளர்களைப் பற்றிய ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டு செய்து வருகிறேன். இதன் காரணமாக நேரடியாக அவர்களது நிலையைக் கண்டறிந்த போது அதிர்ச்சி ஏற்பட்டது. ஏழை மக்களின் துயரங்களுக்கு விடிவே இல்லாதது போல் தோன்றுகிறது. அத்தியாவசியமான தேவைகளான, குடிநீர், குடியிருப்பு, கழிவிடம் ஆகியவை மறுக்கப்படுகின்றன. மத்திய அரசு வகுக்கும் சமூக நல திட்டங்கள் ஏழைகளுக்குப் போய்ச் சேருவதேயில்லை. எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் இந்தத் திட்டங்கள் செயல்படும்படியான முயற்சிகளை நீங்கள் எப்படி எடுக்கப் போகிறீர்கள்?

பதில்: நீங்கள் சொல்வது உண்மைதான். திட்டங்கள் அநேகம் இருந்தாலும் செயலாக்கப்படுவதில்லை. நம்முடைய அரசாங்க நிர்வாக அமைப்பு துருப்பிடித்துப் போயிருக்கிறது. அந்த இயந்திரம் பழுது பார்க்கப்பட வேண்டியது ரொம்பவும் அவசியமான அவசரமான வேலை. இப்பொழுது கூட நான் மாவட்ட கலெக்டர்கள் மாநாட்டில் கலந்து கொண்டு திரும்புவது இந்த எண்ணத்தினால்தான். நாங்கள் வகுக்கும் திட்டங்கள் ஏழைகளுக்குப் போய்ச் சேரும்படியாக எப்படித் திறமையாகத் திட்டங்களைச் செயல்படுத்துவது என்பதைப் பரிசீலிக்கத்தான் இது போன்ற மாநாடுகள் நடத்தப்படுகின்றன. நிச்சயமாக நிர்வாகத்தில் ஒரு மாற்றம் வரும். துரிதமாகவும் அதிகத் திறமையோடும் எங்கள் திட்டங்கள் அமுலாக்கப்பட்டு மக்களுக்குப் போய்ச் சேர வழி பிறக்கும்.

கேள்வி: இலங்கைப் பிரச்னையைப் பற்றி—அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இன்னும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. அமைதி எப்பொழுது வரும் என்று தெரியவில்லை. அங்கிருக்கும் நிலைமையில் ஏதேனும் நல்ல மாறுதல் வரும்படியாக உள்ளதா? இலங்கைப் பிரச்னைக்குத் தீர்வு காணும் வரை தமிழ் நாட்டுத் தேர்தல் ஒத்திப் போடப்படும் என்று ஒரு கருத்து இருக்கிறது. இந்திய அமைதிப் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஒப்பந்தம் ஏற்படப் போவதாகச் செய்திகள் வருகின்றன. இது உண்மையா?

பதில்: உங்களுக்குத் தெரியும்—போராளிகளுடன் தொடர்புகளை நாங்கள் எப்போதுமே துண்டித்து விடவில்லை. கருத்துப் பரிமாறல்கள் சமாதான முயற்சிகள் எல்லாம் தொடர்ந்து இருந்து வந்திருக்கின்றன. எல்.டி.டி.ஈ. விடுதலைப் புலி

களுடன் பேச்சு நடத்துவது மிகவும் கஷ்டமான காரியமாக இருந்து வந்திருக்கிறது. சமீபத்தில் நடந்திருக்கும் பேச்சு சற்று ஆக்கபூர்வமானதாகத் தோன்றுகிறது. நிலைமை ஓரளவுக்கு நிதானத்துக்கு வருவதற்குச் சிறிது பொறுத்திருந்து பார்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். இலங்கைப் பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வு ஏற்படுமென்று எனக்கு நம்பிக்கை இருக்கிறது. அமைதிப் படை கூடிய விரைவில் திருப்பி அழைக்கப்பட்டு சகஜ நிலை ஏற்பட வழி பிறக்கும். சகஜ நிலை என்றால், தேர்தல் நடக்க வேண்டும், அதிகார மாற்றங்கள் ஏற்பட வேண்டும், ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டவை எல்லாம் நிறைவேற வேண்டும். ஈழத் தமிழ் மக்களுக்கு இந்த ஒப்பந்தத்தின் படி, அங்கு இதுவரை வேறு எந்த ஒப்பந்தத்தின் படியும், கோரிக்கையின்படியும் கிடைத்திராத சலுகைகள் கிடைக்கவிருக்கின்றன. அவர்களது கோரிக்கையான Annexure C—யை விட அதிகமான சலுகைகளை இந்த ஒப்பந்தம் தரவிருக்கிறது. இலங்கை அரசும் இந்த ஒப்பந்தத்தின் வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

கேள்வி: ஒப்பந்தம் கையெழுத்தான போது விடுதலைப் புலிகளைத் தவிர மற்ற போராளிக் குழுக்கள் அதற்கு ஒத்துழைக்க இசைந்தன. அப்பொழுது நீங்கள் 'விடுதலைப் புலிகள் ஒரு சின்னக் கும்பல், அவர்கள்தான் ஈழத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்வதற்கில்லை என்றீர்கள்...

பதில்: விடுதலைப் புலிகளும் ஒத்துழைக்க ஒப்புக் கொண்டார்கள் —

கேள்வி: மற்ற போராளிகளைப் போல முழுமையாக இல்லையே?

பதில்: முழுமையாக! முழுமையாக! பூரண ஒத்துழைப்புத் தருவதாகச் சொன்னார்கள்!

கேள்வி: ஆனால் அதை, அவர்கள் பிறகு மறுத்தார்கள்!

பதில்: அதனால்தான் சொல்கிறேன் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்துவது ரொம்பக் கஷ்டம் என்று. அவர்கள் ஒரு முறை சொல்வதைப் போல் இன்னொரு முறை சொல்ல மாட்டார்கள். தாங்கள் சொன்ன சொல் தவறாமல் நடந்து கொள்ள மாட்டார்கள். இதனால்தான் சிரமமாகிப் போகிறது. நானே அவர்களுடன் நீண்ட நேரம் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறேன். ஸ்ரீலங்கா போவதற்கு முன் எல்லாப் போராளிப் பிரிவினருடனும் பேசியிருக்கிறேன். எல்.டி.டி.ஈ.யுடன் நிறைய நேரம் செலவழித்தேன். ஒப்பந்தத்தின் எல்லாவித ஷரத்துக்களையும் விவாதித்தோம். அவர்களுக்கு ஆரம்பத்தில் ஒப்பந்தத்தைப் பற்றிச் சில ஐயங்கள் இருந்தன. நாங்கள் விவரமாக விளக்கிய போது, அவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. 'ஈழம்' ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை என்பதைத் தெளிவாகத் தெரிவித்தோம். ஆனால் வடக்கு கிழக்கு இணைப்புக்கு வழி வகுத்திருப்பதைச் சொன்னோம். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். சாதாரண இணைப்புக்கும் அதிகமான அதிகாரம் வழங்கப்பட இருப்பதை ஒப்புக் கொண்டார்கள். இந்த விவாதங்களுக்குப் பிறகு என்னிடம் அவர்கள் எழுப்பிய ஒரே கேள்வி புனர் வாழ்வு பற்றித்தான். தங்கள் கூட்டத்தவரின் எதிர் காலம் என்ன ஆகும், அவர்களுக்கு வேலை கிடைக்குமா, பண்ணைகளுக்கு என்ன நேரும், பொருளாதார முன்னேற்றத்துக்கு என்ன வழி என்பதைப் பற்றியெல்லாம் கவலை தெரிவித்தார்கள். இதெல்லாம் கடினமான பிரச்னைகள் இல்லை, புனர் வாழ்வுக்கு நாங்கள் உதவுவோம் என்று நாங்கள் உறுதி அளித்தோம். பண உதவி செய்வோம் நேரடியாக இல்லை — இலங்கை அரசு மூலமாக என்றோம்.

கேள்வி: ஆனால் எல்.டி.டி.ஈ.க்கு நீங்கள் நஷ்ட ஈடு பணம் கொடுத்திருப்பதாகத் தெரிகிறதே?

பதில்: அது தனி. ஒப்பந்தத்துடன் சம்பந்தப்பட்டது இல்லை.

கேள்வி: அதை ஏன் முன்பே வெளிப் படுத்தவில்லை?

பதில்: அது அவசியமென்று தோன்றவில்லை. அவர்களுடைய நிலைமையை உணர்ந்து எங்களால் முடிந்த பண உதவியை அவர்களின் புனர் வாழ்வுக்கு அளித்தோம்.

கேள்வி: 'நீங்கள் 'நஷ்ட ஈடு' கொடுக்கச் சம்மதித்த பட்சத்தில், அது அவர்கள் வரி வசூலித்ததை அங்கீகரித்ததைப் போல் ஆகவில்லையா?

பதில்: இல்லை. அது ஒரு கட்டத்திலிருந்து இன்னொரு கட்டத்துக்கு மாற அவர்களுக்கு உதவும் நடவடிக்கை. யதார்த்த உண்மைகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அசாதாரண சூழ்நிலையைச் சமாளிக்க நேரும் போது நாம் அந்த அசாதாரண நிலைமையின் தன்மையைப் புரிந்து கொண்டு, தீர்வு காண முயல வேண்டும். சகஜ நிலைக் காலங்களோடு இதை ஒப்பிடக் கூடாது. அசாதாரண சூழ்நிலையில் சில அசாதாரண நடவடிக்கைகள் தேவைப் படும்.

கேள்வி: அலஹாபாத் தேர்தல் முடிவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

பதில்: (சிரிப்பு) முடிவைப் பற்றி நான் இன்னும் கேள்விப்படவேயில்லையே! (ஜூன் 18—ம் தேதி மாலை. முடிவு இன்னும் வெளியாகா விட்டாலும் வி. பி. சிங்கின் வெற்றி நிதர்சனமாகியிருந்தது)

கேள்வி: அது உண்மையாக இருக்க முடியாது!

பதில்: (மீண்டும் சிரிப்பு) இன்று என்னால் பதில் சொல்ல முடியாது. நாளைக்



* "தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கும் சமுதாய நலத் திட்டங்களுக்கும் மத்தியில் ஓர் ஆரோக்கியமான இடைநிலை வேண்டும்"

குக் கேளுங்கள், சொல்கிறேன். (மறுநாள் பிரதமர் காரியாலயத்திலிருந்து ஃபோன் மூலம் பதில் கிடைத்தது. அது பின்வருமாறு: உ.பி.யில் இதை விட நன்றாகச் செய்திருக்கலாம். தோல்வி ஏற்படக் காரணங்களை ஆராய்ந்து கட்சியைப் பலப்படுத்துவதில் இனி அதிகக் கவனம் செலுத்த வேண்டும். கொள்கைகளுக்கு முக்கியத்துவம் தராமல் தேர்தல் பொருட்டு மட்டுமே எதிர்க் கட்சிகள் கூட்டுச் சேர்ந்து வெற்றி அடைவதில் நிரந்தர வெற்றி இருக்க முடியாது. மக்களுக்கு நல்லவை ஏற்படாது.) ஆனால் மற்ற மாநில முடிவுகளைப் பற்றி எங்களுக்குத் திருப்திதான். குஜராத்தைப் பற்றி சற்று வருத்தம்தான். மற்ற இடங்களில் காங்கிரஸுக்கு வெற்றிதான், தோல்வி இல்லை. இதில் உற்சாகமூட்டும் விஷயம் என்னவென்றால், உப தேர்தல்களில் ஆளும் கட்சி வெற்றி காண்பது கடினம். அதோடு சென்ற ஓராண்டு காலமாக நாங்கள் அனுபவித்திருக்கும் தாக்குதல்களை நினைத்துப் பார்க்கையில் காங்கிரஸ் நன்றாகவே செய்திருக்கிறது என்று சொல்ல வேண்டும்.

கேள்வி: பஞ்சாப் பிரச்னையைப் பற்றி — அங்கு ஓர் அரசியல் தீர்வை எப்படிக் கொண்டு வரப் போகிறீர்கள்? பொற்கோவிலிலிருந்து பயங்கரவாதிகளை வெற்றிகரமாக வெளியேற்றியதற்கு உங்களை முதலில் பாராட்டுகிறேன்.

பதில்: இதில் ஒரு விஷயம் நான் தெளிவுபடுத்த வேண்டும். ஏதோ அந்த Operation Black Thunder மூலமே, பத்துப் பதினைந்து நாள் போதில் அதைச் சாதித்து விட்டோம் என்று ஜனங்கள் நினைப்பதாகத் தெரிகிறது. உண்மையில் இந்த சாதனைக்குப் பின் ஒன்பது பத்து மாதங்களின் கடும் உழைப்பு இருக்கிறது. வெற்றிக்கு அதுதான் காரணம். நல்ல நிர்வாகத்தால் மெல்ல மெல்ல பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்று, எங்களுடன் ஒத்துழைக்க வைத்ததுதான் இந்த வெற்றிக்குக் காரணம். நாங்கள் அதே பாதையைத் தொடர்ந்து கொண்டிருக்கிறோம். பயங்கரவாதத்தை ஒடுக்க மிகத் தீவிரமான முறைகளைக் கையாள்கிறோம். பொற்கோவிலில் இனிமேல் பயங்கரவாதிகளுக்கு இடமில்லை. மிகக் கடுமையான விதிகளை வகுத்திருக்கிறோம். அதைச் செயல்படுத்துவதில் தீவிரமாக இருக்கிறோம்.

கேள்வி: அரசியல் தீர்வு எப்பொழுது வரும்?

பதில்: சகஜ நிலை ஏற்பட்ட பிறகு அதைப் பற்றி யோசிக்க வேண்டும். சகஜ நிலை வருவதற்கான முயற்சிகள்தான் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன.

கேள்வி: ஓராண்டுக்கு மேலாக போஃபோர்ஸ் பற்றியும் நீர்மூழ்கி பேரம் பற்றியும் பத்திரிகைகள் பலத்த கண்டனக் குரல் எழுப்பி வருகின்றன. பல பெயர்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. தஸ்தாவேஜு நிருபணங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. நாடாளுமன்றக் குழு அறிக்கையால் ஜனங்களின் சந்தேகங்களைப் போக்க இயலவில்லை. போஃபோர்ஸ் நம்பிக்கைத் துரோகம் செய்திருக்கிறது என்று அருண் சிங் ஒப்புக் கொண்ட பிறகும் அரசு ஜனங்களைச் சமாதானப்படுத்தும் அளவுக்கு விஷயத்தைத் தெளிவாக்கவில்லை. அரசு உண்மை பேசவில்லை என்று படித்தவர்களிடையே பரவியிருக்கும் இந்த எண்ணத்தை எப்படிப் போக்கப் போகிறீர்கள்?

பதில்: அரசு உண்மையாக இல்லை என்கிற குற்றச்சாட்டே எழ முடியாது. இவ்விஷயத்தில் அரசு ரொம்பவும் மனப்பூர்வமாகத்தான் செயலாற்றி வருகிறது. நீங்கள் (இந்த விவாதத்தின்) ஆரம்பத்திற்குச் சென்று பார்ப்பீர்களானால் ஒவ்வொரு அடியும் நாங்களாக ஆரம்பித்து எடுத்து வைத்ததுதான் என்பது தெரியும். எதிர்க் கட்சிகள் அதிகமாகக் கூச்சல்தான் போட்டன. எத்தனை விதமாக கணக்கற்ற நடவடிக்கைகள் எடுத்தோம் என்று சொல்லி மாளாது. உதாரணத்துக்கு, நாங்கள்தான் National Audit Bureau—வை



அவர்: உங்க மானேஜர் வழக்கத்தை விட அதிகமாக இந்த முறை லஞ்சம் கேட்கிறாரே, ஏன்?

பியூன்: இந்த முறை உங்க ஃபைலை அவர் கையெழுத்துப் போடும் போது ஓவர் டைம் வேலை செய்துக்கிட்டிருந்தாராம்!

— சுந்தர் சுந்தரி.

அறிக்கை கொடுக்கச் சொன்னோம் — ஸ்வீடன் நாட்டு அரசை அறிக்கை கொடுக்கச் சொன்னோம். எதிர்க் கட்சிகள் இதைக் கேட்கச் சொல்லவில்லை. என்னுடைய சொந்த முயற்சியால்தான் இது கேட்கப்பட்டது. என்னுடைய முயற்சியால்தான் நாடாளுமன்ற கூட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டது. எங்களுக்கு வேறு சாத்தியக் கூறுகள் இருந்தன. உச்ச நீதி மன்ற நீதிபதிகளை விசாரணை செய்யச் சொல்லியிருக்கலாம். நாடாளுமன்ற கூட்டுக் குழு என்றால் இன்னும் வெளிப்படையான விவாதம் இருக்கும். எதிர்க் கட்சி எம்.பி.க்களும் பங்கு கொள்ளலாம் என்று நான் நினைத்தேன். ஆனால் எதிர்க் கட்சிக்காரர்கள் அதில் கலந்து கொள்ளாதது பெரிய ஏமாற்றம். அவர்களுடைய பேச்சிலும் தாக்குதல்களிலும் ஏதும் ஆழம் இருக்கவில்லை. எனவே நாடாளுமன்ற விசாரணைக் குழுவின் முடிவு எப்படி இருக்கும் என்பதும் அவர்களுக்கு முன்பே தெரிந்திருக்கும். அதனால் தான் அவர்கள் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவில் பங்கு கொள்ளவில்லை. நாடாளுமன்றக் குழுவின் கண்டுபிடிப்பில் குற்றம் குறை காணக் காரணமே இல்லை.

கேள்வி: நீங்கள் பதவிக்கு வந்த பிறகு, கையெழுத்திடப்பட்ட யுத்த தளவாட ஒப்பந்தங்களில் எந்த அளவுக்கு இடைத் தரகர்களைத் தவிர்ப்பதில் வெற்றி அடைந்திருக்கிறீர்கள்?

பதில்: நாங்கள் அதில் மிகவும் கவனமாக இருந்து வருகிறோம். மிகப் பெரிய ஒப்பந்தங்களில் தயாரிப்பாளர்களுடன் நேரடித் தொடர்பு கொள்வதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். ஆனால் இடைத் தரகர் என்னும் பதத்தைப் பற்றி நிறைய குழப்பம் இருக்கிறது. எல்லா ஒப்பந்தங்களிலும் முக்கியமாகச் சிறிய காண்ட்ராக்டுகளில் தயாரிப்பாளர்களுடன் நேரடித் தொடர்பு கொள்வது சாத்தியமில்லை. அந்தச் சந்தர்ப்பங்களில் தரகர்களை அறவே தவிர்ப்பதும் சாத்தியமில்லை. உதாரணமாக, நீங்கள் பென்ஸில் ரப்பர் வாங்க வேண்டும் என்றால் உற்பத்தியாளரிடம் செல்ல மாட்டீர்கள். கடைகளுக்குச் சென்றுதான் வாங்குவீர்கள். இங்கு கடைக்காரர் இடையில் வரும் ஒருவர்தான். அது போல் இடைத் தரகர்களை ஒரேடியாகத் தவிர்க்க முடியாது.

ஆனால் எல்லாப் பெரிய காண்ட்ராக்ட்களிலும் நாங்கள் உற்பத்தியாளருடன் நேரடியாகத்தான் தொடர்பு கொள்கிறோம். கமிஷனோ, வேறு எதுவுமோ எந்த இந்தியனுக்கும் அவர்கள் (உற்பத்தியாளர்கள்) கொடுக்கக் கூடாது என்று மிகத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறோம். அவர்களுக்கு இங்கே ஏதாவது காரியம் இருக்குமானால் அவர்களுடைய அலுவலகங்கள் எல்லாம் ரிஸர்வ் பாங்க் அனுமதியுடன் பகிரங்கமாகச் செயல்பட வேண்டும். எந்த இரகசிய மூடி மறைத்தலும் கூடாது என்று நிபந்தனைகள் விதிக்கிறோம். ரிஸர்வ் பாங்க்கிற்கு எல்லா விவரங்களையும் அவர்கள் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட தெளிவான நிபந்தனைகளில் எந்தக் குழப்பமோ பிரச்னையோ வராது.

கேள்வி: கடைசிக் கேள்வி. உங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்லுங்கள். நீங்கள் ரொம்பக் கூச்ச சுபாவமுள்ளவர் என்றும் எப்போதும் பின்னணியில் இருப்பதையே விரும்பியவர் என்றும் உங்கள் சிநேகிதர்கள் சொல்கிறார்கள். ஆனால் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் காரணமாக இன்று முன்னணிக்குத் தள்ளப்பட்டிருக்கிறீர்கள். இந்தியாவிலேயே மிக அதிகமான கவனத்தைப் பெற்று மிக அதிகமாக விவாதிக்கப்படுகிற நபராக மாறி விட்டீர்கள்! இந்த நிலை உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?

பதில்: (சிரிப்பு) பிடிக்கிறது, பிடிக்கவில்லை என்று பதில் சொல்வது கடினம். ஒன்று நிச்சயம். இது நமது திறமைக்குச் சோதனை வைக்கிற, பிரச்னைகளைச் சந்தித்துச் சவால்களை ஏற்கச் செய்கிற வேலை. சரியாகக் காரியம் நடந்தால் சந்தோஷமாக இருக்கிறது. ஏமாற்றங்களும் உண்டு. ஏமாற்றமும் திருப்தியும் மாறி மாறி வருவதுதான் உலக இயல்பு என்று நினைக்கிறேன்.

கேள்வி: உங்கள் குடும்பத்துக்கு ஏற்பட்டிருக்கும் பாதிப்பு என்ன?

பதில்: அவர்களுக்குத்தான் ரொம்பக் கஷ்டம். முக்கியமாக மெய்க் காவலர்கள் சூழ நிற்கும் இந்த செக்யூரிடி விஷயத்தினால் ரொம்பப் பாதிப்பு. தவிர, நமது பத்திரிகைகள் வெளியிடும் தவறான செய்திகளும் மனசுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கின்றன. நமது ஜனநாயக அமைப்பில் இதற்குச் சரியான எதிர் நடவடிக்கை கூட எடுக்க முடியாது.....

(விமானம் தில்லி விமான நிலையத்தில் இறங்கி விட்டது. வீடு திரும்பும் போது, ஒரு நண்பரைச் சந்தித்து உரையாடி விட்டு வந்தது போன்ற ஓர் உணர்வு என்னுள் ஏற்பட்டிருக்கிறது.)

புகைப்படங்கள், மேலட்டை வண்ணப் படம்: **சுபா**



தன் ஆலோசனையை டாக்டரே பின்பற்றுகிறார் !


ஒரு டாக்டரின் பணி ஒருபோதும் சுலபமானதல்ல. அடிக்கடி அவசர கேஸ்களை கவனிப்பது; நீண்ட நேரம் வேலை செய்வது, இரவு பகல் பாராமல் நோயாளிகளின் வீடுகளுக்குச் செல்வது... களைப்பு மிக்க பணி.

அதனால்தான் நான் ஹார்லிக்ஸை நம்பியிருக்கிறேன். ஹார்லிக்ஸில் நிரம்பியுள்ள புரதம், வைட்டமின்கள் தாதுப் பொருட்கள், மாவுச் சத்து—ஆகிய முக்கிய இயற்கை ஊட்டச்சத்துக்கள் அதைச் சிறந்த ஆரோக்கிய பானமாக ஆக்குகின்றன.


எனவேதான், ஒரு நாளில் இரு தடவை ஹார்லிக்ஸ் பருகுமாறு எப்போதும் சிபாரிசு செய்கிறேன். நாள் முழுதும் வேலை செய்த களைப்பைப் போக்கிடும் சுவையான தெம்பூட்டும் பானம் அது. எனக்கு நன்றாகத் தெரியும்! ஏனெனில் நானும் அதைப் பருகுகிறேனே!

உலகெங்கும் உள்ள டாக்டர்கள் ஹார்லிக்ஸை ஒரு தெம்பூட்டும் ஆரோக்கிய பானம் என்று நம்புகிறார்கள். அதில் சக்தியும், தெம்பும் நல்ல ஆரோக்கியமும் கொடுக்கும் புரதம், வைட்டமின்கள் தாதுப் பொருட்கள், மாவுச்சத்து, ஆகிய முக்கிய இயற்கை ஊட்டச் சத்துக்கள் நிறைய உள்ளன.

டாக்டர்கள் ஹார்லிக்ஸை சிபாரிசு செய்வதில் வியப்பில்லை. இது குடும்பம் முழுவதற்குமே ஊட்டச்சத்து அளிக்கும் மூலாதாரமான பானம் என்று நிரூபிக்கப்பட்டது.




டாக்டர்களால் நம்பப்படுவது — உலகம் முழுவதும்.




சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்

HTA 5815 TAM


அரசின் மறுப்புகள்.. மழுப்பல்கள்
போஃபர்ஸ் ஊழல் புதிய திருப்பங்கள்
நாடாளுமன்ற கண் துடைப்பு விசாரணை


ரெண்டரை கோடி பணம் எப்படி வந்தது? கண்டு பிடிக்காம விட மாட்டேன்!
ஊழல் நிதி
தேர்தல் நிதி


முதல்வர் பதவி எங்களுக்கு!
அம்பதுக்கு அம்பது!
பேச்சு வார்த்தை
அறுபதுக்கு நாற்பது தான்!
நாற்காலி எங்களுக்குத் தான்!
இ. காங்கிரஸ்
அ.தி.மு.க (ஜெ)



கல்கி

1988 ஜூலை 3
மலர் 46 இதழ் 49
விபவ ஆனி 19



அலகாபாத் அடி! போஃபோர்ஸ் இடி!

பட்ட காலிலேயே படும் என்பது போல் அலகாபாத் தீர்ப்பு வழங்கிய பலத்த அடியைத் தொடர்ந்து, போஃபோர்ஸ் பேரம் தொடர்பாக ஹிந்து பத்திரிகை புதிதாக அம்பலத்துக்குக் கொண்டு வந்துள்ள விஷயங்கள் பயங்கர இடியாகவே பிரதமரைத் தாக்கியிருக்கும்.

அலகாபாத்தில் வி. பி. சிங் வெற்றி பெறாமல் இருக்க என்னென்ன விதமான தகிடுதத்தங்களைச் செய்யலாமோ அத்தனையையும் காங்கிரஸ் கட்சியும் ஆட்சியும் செய்து பார்த்து விட்டன. ஆயினும் எதுவுமே பலனளிக்கவில்லை. வி. பி. சிங் மகத்தான வெற்றி பெற்றுள்ளார். இந்தத் தேர்தலில் போஃபோர்ஸ் பேரமும் நீர்மூழ்கி பேரமும் முக்கியமான பிரச்னைகள் ஆக்கப்பட்டன. ராஜீவ் தலைமையிலான அரசு இந்த விஷயங்களில் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை என்ற அடிப்படையிலேயே எதிர்க் கட்சிகளின் பிரசாரம் நடந்தது. எனவே இது ராஜீவுக்கும் அவர் தலைமையிலான மத்திய அரசுக்கும் எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு என்பதிலும் ஐயமில்லை.

அலகாபாத் தேர்தல் ராஜீவுக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையை விடுத்திருக்கிறது என்று கூறலாம். இனியேனும் அவரும் அவருடைய கட்சியினரும் விழிப்படைந்து மக்களுடைய நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறும் விதமாக நடந்து கொள்ளாவிட்டால் இருக்கும் இடம் தெரியாமல் போய் விடுவார்கள்.

எதிர்க் கட்சிகளின் போக்கும் விரும்பத்தக்கதாக அமையவில்லை. தேர்தல் கூட்டணி அமைத்த இடங்களில் வென்றிருக்கிறார்கள்; கூட்டணி இல்லாத தொகுதிகளில் தோற்றிருக்கிறார்கள்; காங்கிரஸ் வென்றிருக்கிறது. இதைத்தான் என். டி. ஆரும் எடுத்துக் காட்டி, 'எதிர்க் கட்சிகளை ஒன்றுபடுத்தும் எனது முயற்சி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை இடைத் தேர்தல்கள் உணர்த்துகின்றன' என்கிறார். இந்தக் கணிப்பு சரியானது என்றாலும் தேர்தலுக்காக மட்டும் கூட்டணி என்பதும் சரியல்ல. அது ராஜீவையும் காங்கிரஸையும் நீக்கி விட உதவும். ஆனால் அதே நேரத்தில் மத்திய அரசை பலவீனமடையச் செய்யும். இது நாட்டுக்கே ஆபத்தானது. மாறாக, எதிர்க் கட்சிகள் முக்கியமான பல அடிப்படைக் கொள்கைகளில் ஒற்றுமை கண்டு, நாட்டின் முன்னேற்றத்துக்கு அனைவரும் ஏற்கக் கூடிய செயல் திட்டமும் வகுத்து, தங்களுக்குள் ஒரு தலைவரையும் தேர்ந்தெடுத்து மக்கள் முன் நிறுத்தி, பிறகு வோட்டுக் கேட்பதே முறை. இந்த எண்ணம் என். டி. ஆருக்கும் இருக்கிறது என்பதைத் தெலுங்கு தேசக் கட்சிப் பிரசுரம் ஒன்று தெளிவுபடுத்துகிறது. ஆனால் இந்த எண்ணம் செயலானாலொழிய மக்கள் இவர்களை நம்ப மாட்டார்கள். ஒரே கட்சியாக — ஜனதாவாக — இணைந்து ஆட்சி அமைத்த பிறகு இவர்கள் குறுகிய காலத்தில் குடுமி பிடி சண்டையில் இறங்கியதை மக்கள் மறக்கவில்லை. எனவே அலகாபாத் தீர்ப்பு ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல; எதிர்க் கட்சிகளுக்கும் ஒரு படிப்பினை. அதற்கும் மேல் வாக்காளர் பெருமக்களுக்கும் ஓர் எச்சரிக்கை!

அலகாபாத் தீர்ப்பை விடவும் அதிகமாக அண்மையில் ஹிந்து பத்திரிகை அம்பலப்படுத்தியுள்ள போஃபோர்ஸ் பேரம் பற்றிய புதிய விவரங்கள் மத்திய அரசை ஒரு கலக்குக் கலக்கியுள்ளன. எந்தக் குற்றச் சாட்டுக்களை அரசும் நாடாளுமன்றக் கூட்டுக் குழுவும் மறுத்து வந்தனவோ அந்தக் குற்றச்சாட்டுக்கள் மெய்யானவை என நிரூபிக்கப்பட்டுள்ளன. போஃபோர்ஸ் பேரத்தில் கமிஷன் உண்டு எனவும் அது இந்தியர்களுக்குத் தரப்பட்டுள்ளது எனவும் மேல்நாட்டு நிறுவனங்கள் பெயரால் இந்தியர்கள் அதைப் பெற்று மேல்நாட்டு வங்கிகளில் சட்ட விரோதமாகப் போட்டு வைத்திருக்கின்றனர் எனவும் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபணமாகியுள்ளது. 'கமிஷன் அல்ல, பணி முடிக்கப்படுவதற்காகத் தரப்படும் நஷ்ட ஈடு' என்பதெல்லாம் வெறும் வார்த்தை ஜாலம் என்பது தெளிவாக்கப்பட்டு விட்டது. 'இந்திய அரசு போஃபோர்ஸ் தளவாடங்களை வாங்க வேண்டுமானால் யார் யாரை அணுக வேண்டும்? இதில் செல்வாக்கு மிக்கவர்கள் யார்?' என்று கண்டறிவதற்காகவே வின் சத்தாவுக்கு ஏராளமான கமிஷன் தர ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இதையெல்லாம் பார்க்கும் போது ராஜீவ் அரசு ராஜினாமா செய்து விட்டு நாடளாவிய முறையில் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்து மக்களின் நம்பிக்கையைக் கோரிப் பெற முயற்சி செய்வதே நல்லது. இன்னும் சொல்லப் போனால் இந்தப் புதிய சூழ்நிலையில் தமிழக சட்ட மன்றத் தேர்தலை நாடாளுமன்றத் தேர்தலுடன் சேர்த்தே நடத்தலாம்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



* இரண்டரைக் கோடி நிதி!

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழகம் உருப்படும்?

* கா. அப்துல் மஜீத், திருமயம்.

? கலைஞர் முதல்வராக இருந்த போது தான் கோட்டாவை உயர்த்தினார் எனக் கல்கி திருபர் கூறியுள்ளாரே? எம். ஜி. ஆர். அல்லவா உயர்த்தினார்?

! கலைஞர் 25 சதவீதமாக இருந்த கோட்டாவை 32 சதவீதமாக உயர்த்தினார். அதை ஐம்பது சதவீதமாக உயர்த்தினார் எம். ஜி. ஆர்.

* சிவாஜி பாபு, சென்னை — 23.

? 'இனியும் காங்கிரஸ்காரர்களை ஆள விட்டால் அவர்கள் இந்தியாவையே விற்று விடுவார்கள் என்று நெடுஞ்செழியன் கூறியிருக்கிறாரே...?

! அவர்கள் தனியாக விற்றுச் சம்பாதித்து விடப் போகிறார்களே என்பதால்தான் கூட்டுச் சேரத் துடிக்கிறார்களோ என்னவோ!

* ப. ஷேக் அலாவுதீன், திருநெல்விக்காவல்.

? காங்கிரஸ் தனித்து நின்று போட்டியிட்டால் ஜெயிக்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

! 'ஜெயிப்போம்' என்ற நம்பிக்கையோடு தான் போட்டியிட வேண்டும். 'வெற்றி பெறாவிட்டால் சிறந்த எதிர்க்கட்சியாக விளங்கி ஜனநாயகப் பணியாற்றுவோம்' என்ற உறுதி வேண்டும். 'கட்சியை வளர்த்துப் பலப்படுத்துவோம்' என்ற ஆர்வம் வேண்டும். இதைச் செய்தால், இன்றில்லாவிட்டாலும் நாளை காங்கிரஸ் ஜெயிக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. பக்கவாத்தியமாக காங்கிரஸ் விளங்குவதில் எனக்கு நம்பிக்கை இல்லை.

* குரு. வைத்தியநாதன், கோவிந்தபுத்தூர்.

? எம். ஜி. ஆர். ஏற்படுத்திய கட்சி, ஆட்சி எது நிலைக்கும்?

! இரண்டுமே நிலைக்கவில்லையே!

* வி. அருண், கீரமங்கலம்.

? நாவலர் இப்போதெல்லாம் நகைச்சுவையாகக் கூடப் பேச ஆரம்பித்துவிட்டாரே?

! வள்ளுவரைப் படித்தவர் அல்லவா? இடுக்கண் வருவதை உணர்ந்து விட்டார்!

* இ. கமலவாசகன், சென்னை.

? வருகிற தேர்தலில் எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தமிழகம் உருப்படும்?

! தருமத்தின் கட்சி. வேறு எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் அதில் எந்த அளவுக்குத் தருமம் இருக்கிறதோ அந்த அளவுக்குத் தமிழகம் உருப்படும்.

* பூவண்ணன், திருமயம்.

? ஜாதிப் பிரச்னையைப் பெரிதுபடுத்தி மக்களிடையே பிளவை உண்டாக்கும்


* நகைச்சுவையாக...




* அபிப்பிராயம் என்ன?



* கைதிகளுக்கு வோட்டு!



* சொத்துச் சேர்க்காதவர்



நீங்கள் கேட்டவை — தராசு

டாக்டர் ராமதாஸ் பற்றி உங்கள் அபிப் பிராயம் என்ன?

! அரசு, அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள், மட்டுமின்றி நமது அரசியல் சட்டங்களும் ஜாதியைக் கட்டிக் கொண்டு அழும் போது ராமதாஸைப் பற்றி மட்டும் குறை கூறுவானேன்? பூனைக்கு மணி கட்ட யாருக்கும் துணிவில்லையே!

*** எஸ். அரிஅரன், திருநெல்லிக்காவல்.**

? 'தேர்தல் நடத்தப்படத் தவறினால் கோர்ட்டின் ஆலோசனையோடு சட்ட சபையை நான் கூட்டுவேன்' என்று பாண்டியன் கூறியிருப்பது குறித்து...?

! அப்பாடா! 'கோர்ட்டின் ஆலோசனையோடு' என்று சேர்த்துக் கொண்டிருக்கிறாரே, அந்த மட்டில் சந்தோஷம்!

*** ராஜா, சீர்காழி.**

? நெல்சன் மண்டேலாவை விடுதலை செய்யக் கோரி பி. பி. ஸி. இசை விருந்து ஒலிபரப்பியது குறித்து...?

! ஆர்ப்பாட்டங்களும் வன்முறைப் போராட்டங்களும் மலிந்த நமது அரசியலுடன் கிட்டத்தட்ட எண்பதாயிரம் பேர் பங்கு கொண்ட இசை நிகழ்ச்சி அசம்பாவிதம் ஏதுமில்லாமல் நிறைவேறியதை ஒப்பிட்டுப் பாருங்கள். எதிர்ப்பைத் தெரிவிக்கிற நாகரிகப் பண்பு மிக்க முறையைக் கவனியுங்கள். நமது சிறந்த அறிவாளிகளை மட்டுமல்ல, காந்தியத்தையும் ஏற்றுமதி செய்து விட்டோம்!

*** இரா. வளையாபதி, தோட்டக்குறிச்சி.**

? லண்டன் உலகப்பட விழாவுக்குக் "காணி நிலம்" தேர்வு செய்யப்பட்டிருப்பது நமக்குப் பெருமைதானே?

! பெருமைதான். ஆனால் இப்படியெல்லாம் கூட அரசியல்வாதிகள் நடந்து கொள்ள முடியும்' என்று அங்கிருக்கிறவர்களுக்குக் கற்றுக் கொடுத்ததாகிவிடக் கூடாதே என்று கவலையாகவும் இருக்கிறது!

*** கு. கலைச்செல்வன், இராசிபுரம்.**

? 'கைதிகளுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும்' என்கிறாரே, பாண்டியன்?

! வரி செலுத்தாமல் ஏமாற்றியும், கறுப்புப் பணம் பண்ணியும், லஞ்ச ஊழல் செய்தும் கொள்ளையடிப்பவர்கள், சுதந்திரமாகத் திரிந்து வோட்டுரிமை பெற்றுள்ள போது, பாவம், திருடியும், பிக்பாக்கெட் அடித்தும் மாட்டிக் கொண்ட கைதிகள் ஏன் வோட்டுரிமை பெறக் கூடாது?

*** பாபுகுமார், பெங்களூர்.**

? கலைஞரிடம் தேர்தல் நிதியாக இரண்டரைக் கோடி ரூபாய் சேர்ந்திருப்பது ஆச்சர்யப்படத்தக்க செய்திதானே?

! இரண்டரை கோடி என்பது இன்று வியப்புக்குரிய பெரிய விஷயமே அல்ல. இந்தியாவின் முதல் பட்ஜெட்டில் வருவாய் எவ்வளவு? இன்றைய பட்ஜெட்டில் எவ்வளவு? பணப்புழக்கமும் விலைவாசிகளும் அப்படி உயர்ந்துள்ளன. மைய அரசின் பொருளாதாரக் கொள்கைகளே இதற்குக் காரணம்.

*** வி. குருராஜன், விருத்தாசலம்.**

? சமீபத்தில் தங்களை வருத்தமடையச் செய்த விஷயம்?

! குழந்தைகளைப் பள்ளியில் சேர்க்க நன்கொடை தரமுடியாததால் தற்கொலை செய்து கொண்ட தந்தை பற்றிய செய்திதான். வரதட்சிணைக் கொடுமையை விஞ்சி விடும் போலிருக்கிறது நன்கொடைக் கொடுமை!

*** எஸ். தங்கராஜு, சென்னை — 35.**

? எம். கல்யாணசுந்தரம் மறைவு குறித்து?

! காங்கிரஸ்காரராக விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுத் தொழிற்சங்கத் தலைவராகிக் கம்யூனிஸ்ட்டாக மாறியவர், ஒரு லட்சிய நோக்கில் சமீபத்தில் அந்தக் கட்சியிலிருந்தும் வெளியேறினார். கடைசி வரை தேசியவாதியாக விளங்கிய அவர், பார்க்கவும் பழகவும் எளிமையானவர். ஆனால் அசாதாரண நெஞ்சுறுதி கொண்டவர். அது, அவரைக் கடைசி வரை தூய்மையானராகவும், சொத்துச் சேர்க்காதவராகவுமே வைத்திருந்தது. இப்படிப்பட்டவரை இந்தத் தலைமுறையில் காண முடியாது.

*** ரூ. 15 பரிசு பெறுபவர்:**

ராஜா,
97, பிடாரி வடக்கு வீதி,
சீர்காழி — 609 110.


முழுமையான
சமையல் எண்ணெய்
ஹார்வெஸ்ட்
HARVEST
PURE
REFINED
RICE OIL
Cether Foodoil Limited
ஹார்வெஸ்ட்
மற்ற சமையல்
எண்ணெய்களை விட
அதிகமாகக் கொலஸ்டிராலைக்
குறைக்கும் தன்மையுடையது.
Effects of edible oils in lowering the cholesterol level in human blood
Groundnut Oil
Soyabean Oil
Sesame Oil
Sunflower Oil
Corn Oil
Safflower Oil
Rice Bran Oil
+10
0
-10
-20
(Ref : study conducted by National Institute of Nutrition, Hyderabad in Nutrition News, Vol. 6, No.6 Nov. 1985 and study (by Dr. Shinjiro Suzuki in Japan Nutrition Journal, Vol. 20. No. 4, 1952)
ஹார்வெஸ்ட்டில் உள்ள ஸ்குவாலீன்,
டோகோபெரால (வைட்டமின் ஈ),
ஒரிஸினால் அனைத்து வயதினருக்கும்
தேவையான போஷாக்கையும், சக்தியையும்
அளிக்கின்றன.
ஹார்வெஸ்ட் 15 சதவிகிதத்திற்கு மேலாகவே
எண்ணெய் செலவை மீதப்படுத்துகிறது.
இன்றே வாங்கிடுவீர் ஹார்வெஸ்ட்.
ஹார்வெஸ்ட்
அளிப்பது உணவில் முழுமை.
TAKE WING A 138



கேசி—

நிழலைத் தேடி...

ஜனனி

கலையரசி தியேட்டர் உரிமையாளர் நாகலிங்கம் செட்டியார் என்னுடைய நண்பர். நான் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றுச் சும்மா இருந்தமையால், என்னைத் தன் தியேட்டருக்கு மேற்பார்வையாளராகப் போட்டிருந்தார்.

காலைக் காட்சி, மாடினி, மாலைக் காட்சி மூன்றும் என் பொறுப்பு. இரவுக் காட்சி மட்டும் செட்டியார் நேரடியாகக் கவனித்துக் கொள்வார்.

தியேட்டர் பொறுப்புகளைக் கவனிக்கத் தனியாக மானேஜர் உண்டு. நான் சும்மா அப்படி இப்படி போய் வருவேன் — அவ்வளவுதான். முதலாளிக்கு வேண்டியவன் என்ற காரணத்தால் எல்லோருக்கும் என்னிடம் கொஞ்சம் அச்சம் உண்டு.

ஊருக்குச் சற்று வெளியே அமைந்திருந்த தியேட்டர். நகரில் நூறு நாள் ஓடின படம் இங்கே பத்து நாள் — இல்லை, ஒரு வாரம் மட்டுமே ஓடும். அங்கேயே ஒரு வாரம்தான் என்றால், இங்கே இரண்டு நாள்தான்!

போன சனிக்கிழமைதான் இந்தத் தமிழ்ப் படத்தைத் திரையிட்டிருந்தோம். நகரத்தில் நூறு நாட்களை எட்டியிருந்தது. இங்கு ஒரு வாரம் ஓடும் என்ற கணிப்பு எங்களது.

ஆனால் படம் மக்களைக் கவரவில்லை.. எப்படியும் ஞாயிற்றுக் கிழமை மாலைக் காட்சி கொட்டகை நிறையும். இந்தப் படத்திற்கு அன்று கூட இடங்கள் காலி.

போன சனிக்கிழமை காலை ஆட்டம். அகஸ்மாத்தாக நான் அவனைப் பார்த்தேன். ஒல்லியான உருவம். இப்படியும் அப்படியுமாகப் பார்த்துக் கொண்டே தியேட்டருக்குள் நுழைந்தான். கியூவில் நிற்கும் போது ஒரு பதற்றம் தெரிந்தது. டிக்கெட் வாங்கிக் கொண்டு படம் பார்க்க உள்ளே புகுந்தான்.

எனக்கு அவன் மேல் சந்தேகம் வந்தது. இவன் ஏதோ தப்பான நோக்கத்துடன் தான் உள்ளே நுழைந்திருக்கிறான் என்று எண்ணினேன். அவன் உட்கார்ந்திருந்த இருக்கைக்கு நாலு வரிசை பின்னே போய் நின்று அவனையே கவனித்தேன்.

சரியாகப் பதினைந்து நிமிஷம்தான். வெளியே வந்து விட்டான். கேட் கீபரிடம் பேசி, கதவைத் திறக்கச் சொல்லிப் போய் விட்டான்.

பகல் மாட்டினி. அதே ஆள். அதே மிரட்சி! உள்ளே நுழைந்தவன், முன்பு போலவே படம் ஆரம்பித்துப் பதினைந்தாவது நிமிஷம் வெளியே போனான்.

அன்று மாலைக் காட்சிக்கும் அவன் வந்து போனான்.

இரவுக் காட்சிக்கு நான் காத்திருந்தேன். அவன் வரவில்லை.

மறுநாள், அதற்கு மறுநாள் — தொடர்ந்து ஏழு நாட்கள் — இரவுக் காட்சிகளைத் தவிர பாக்கி எல்லாக் காட்சிகளிலும் அவன் ஆஜர்.

இது யார் பேசியது? சொல்லுங்கள், பார்க்கலாம்!

''இளம் உள்ளங்களைக் கெடுக்கும் அளவிற்கு இன்று மேடைப் பேச்க்கள் ஆபாசமாய்ப் போய் விட்டன. ஒழுக்கத்தைக் கெடுக்கும் மட்டரகப் பேச்சுக்களையே மக்கள் கேட்க வேண்டி இருக்கிறது: எனவே பதினாறு வயதுக்குட்பட்ட தங்கள் குழந்தைகளைப் பொதுக் கூட்டங்களுக்குப் போகாமல் பார்த்துக் கொள்ளுமாறு பெற்றோர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.''

விடை 60ம் பக்கத்தில்.

இன்றோடு படம் கடைசி. மாலைக் காட்சிக்கு படம் பார்க்க டிக்கெட் வாங்கினவனை என்னுடைய அறைக்குக் கூட்டி வரச் சொன்னேன்.

வந்தான்.

''உட்காருங்கள்!'' என்றேன்.

''பரவாயில்லை!'' எனச் சொல்லியபடி நின்று கொண்டே இருந்தான். படம் ஆரம்பித்து விடுவார்களோ என்ற அவசரம் தெரிந்தது.

''எனக்கு ஒரு சந்தேகம். இந்தப் படத்திற்கு இதுவரை இருபத்தியோரு தரம் வந்திருக்கிறீர்கள். ஆனால் ஒரு தடவை கூட முழுப்படம் பார்க்கவில்லை..''

ஏன் அப்படிப் பார்க்கக் கூடாதா?'' என என்னையே திருப்பிக் கேட்டான்.

''பார்க்கக் கூடாது என்பதில்லை. அப்படி அந்தப் படத்தில் — தொடர்ந்து பார்க்கக் கூடிய அளவு — சிறப்பு அம்சம் என்ன என்று தெரிந்தால் தயாரிப்பாளருக்கு எழுதலாம். அவர்கள் தங்கள் படத்தை விளம்பரம் செய்ய உதவியாக இருக்கும்.''

''இந்தப் படமா! படு குப்பை. பதினைந்து நிமிஷம் உட்கார்வதே சங்கடம்!''

அதற்குள் படம் ஆரம்பிக்க மணி அடித்து விட்டார்கள். அவனுடன் போய் நானும் உட்கார்ந்தேன்.

டைட்டில்கள் முடிந்ததும் ஒரு பாட்டு.

அந்தப் பாட்டின் முடிவில் அவன் விம்முவது எனக்குக் கேட்டது.

பாட்டு முடிந்ததும் அவன் வெளியே வந்து விட்டான். கண்கள் கலங்கி இருந்தன.

''என்ன வருத்தம்?... காட்சியில் கூட யாரும் சோகமாக...''

''காட்சியில் சோகம் இல்லை... பாட்டின் கடைசியில் கதாநாயகன் வயலைப் பார்க்க வருகிறான் இல்லையா!''

''ஆமாம்.

''பின்னணியில் பெண்கள் வரிசையாக நின்று கொண்டு அறுவடை செய்கிறார்கள் இல்லையா?''

''ஆமாம்.''

''அதில் இரண்டாவது வரிசையில் முதல் பெண். சிவப்பு கண்டாங்கிச் சேலை...''

''நான் கவனிக்கவில்லை.''

''அவளைப் பார்க்கத்தான் நான் வரேன்.. என் பெண்டாட்டி.. என் குழந்தையை வயத்துலே சுமந்துக்கிட்டிருந்தா... இந்தப் படம் முடிச்ச நாலாம் நாள் வயல்லேருந்து வரப்போ — ஒரு லாரிக்காரப் பாவி மோதிக் கூழாக்கிட்டுப் போய் விட்டான். கல்யாணமான பொறகு நாங்க இரண்டு பேருமா சேர்ந்து போட்டோ எடுத்துக் கணும்னு ரொம்ப ஆசைப்பட்டோம். ஆனா, அதுக்கான பணமோ வசதியோ கிடைக்கவேயில்லை. ஐயா... அவ நிக்கறதை — பார்க்கிறதை — சிரிக்கிறதை ஒரே நிமிஷம் என் கண்ணிலே தேக்கி வச்சுக்கத்தான் நான் இந்தப் படத்துக்கு தினம் மூணு தரம் வரேன்...''

— அவன் குரல் தழுதழுத்தது. என் விழிகள் குளமாயின.



அடுத்த இதழில்......

விதியை மாற்றும் விழிதானம்

— சிறப்புக் கட்டுரை —

60 அடி உயரச் சிலை!

ஹைதராபாத்தில் இருபத்திமூன்று அடி உயரத்துக்கு ஒரு கிருஷ்ணர் சிலையைப் பார்த்ததும், தொழிலதிபர் பி. கே. பிர்லாவுக்கு ஓர் ஆசை. 'இதை விட உயரமான சிலை ஒன்றைச் செய்து நிறுவினால் என்ன?' ஹைதராபாத் சிலையைச் செய்த முத்தையா ஸ்தபதியைச் சந்தித்துப் பேசுமாறு தமது சென்னைப் பிரதிநிதி ராமானுஜத்தைக் கேட்டுக் கொண்டார். முத்தையா ,, அறுபது அடி உயரத்துக்கு ஒரு சிலை செய்யும் வாய்ப்பு தனக்குக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்து, உடனே இருபதுக்கும் மேற்பட்ட கிருஷ்ணர் படங்களை வரைந்து, பிர்லாவுக்கு அனுப்பினார். அதில் ஒரு படம் ஓ. கே. ஆனது.



''இதை எங்கு நிறுவப் போகிறார்கள்?''

''டெல்லியில்!''

''டெல்லியிலா? எப்படி கொண்டு போவார்கள்?''

''அதுதான் ஸார் கஷ்டமான காரியம்! சிலையின் எடை இரு நூற்றி ஐம்பது டன். ''நீங்கள் செய்து முடியுங்கள் டெல்லிக்குக் கொண்டு செல்வது எங்கள் வேலை'' என்று பிர்லாவைச் சேர்ந்தவர்கள் சொல்லி விட்டார்கள்.''

முத்தையா ஸ்தபதி



பீடம் பதினைந்து அடி, சிலை நாற்பத்தைந்து அடி. ஒரே கல்லில்தான் செதுக்க வேண்டும். முத்தையா பாறை தேடலானார்! வேலூருக்கு அருகில் உள்ள ஒரு குன்றில் அதைக் கண்டுபிடித்து, வேலையைத் துவங்கினார். ஆனால் துரதிர்ஷ்டம், வேலை ஆரம்பித்த சில நாட்களில், அந்தப் பாறையில் ஓட்டைகள், விரிசல்கள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. மனம் நொந்தார் ஸ்தபதி. உடனே விரைந்தார் காஞ்சிபுரத்துக்கு. விஷயத்தை விளக்கியவுடன், பரமாச்சாரியார் அவருக்கு அனுக்கிரகம் செய்ததோடு, சிலையில் சின்னச் சின்ன மாறுதல்களைச் செய்யச் சொன்னார். உற்சாகமடைந்த ஸ்தபதி மீண்டும் பாறை தேடி வ. ஆ. மாவட்டம் ஆர்க்காட்டுக்கு அருகில் கரடி மலையில் கண்டுபிடித்தார்.

மலையை நெருங்கும் போது உளியும் கல்லும் மோதும் சத்தம் லயமாகக் காதில் விழுகிறது. சுமார் இருபத்தைந்து பேர் கையில் சுத்தியும் உளியும் ஏந்தி கிருஷ்ணரை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். கம்பீரமாகப் படுத்த நிலையில் இருக்கும் சிலையில் நுணுக்கமான வேலைகள் பாக்கி இருக்கின்றன. இரண்டு வருட அவகாசம் தந்தார் பிர்லா. அதைவிட விரைவாகவே வேலை முடிந்து விடுமாம்.

சிலையைச் செய்து முடிக்க இருபத்திமூன்று லட்சம் ரூபாய் செலவாகும். இதைத் தவிர, கொண்டு போகும் செலவு என்று சில லட்சங்கள்.

கர்நாடகாவில் சிரவண பெலகுலாவில் அறுபது அடி உயர கோமதீஸ்வரர் சிலை இருக்கிறது. ஆனால் அந்தச் சிலை செதுக்கிய இடத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் முத்தையா ஸ்தபதி செய்யும் இந்தச் சிலையை இரண்டாயிரம் கி.மீ. எடுத்துச் சென்று ஸ்தாபிக்கப் போகிறார்கள்! இம் மாதிரி இதற்கு முன் நடந்ததேயில்லை.

விடை பெற்ற போது, எங்களை நிறுத்தி வைத்து ஸ்தபதி சொன்னார்:

''எல்லாம் பராமாச்சாரியாரின் அனுக்கிரகம்தான் ஸார். இந்தச் சிலை டெல்லியில் ஸ்தாபிக்கப்பட்டால் நம் நாட்டுக்காரர்கள் மட்டுமல்ல, வெளிநாட்டுக்காரர்கள் பலரும் இதைப் பார்ப்பார்கள். இந்து மதம், கலாசாரம் பற்றித் தெரிந்து கொள்ள முனைவார்கள். இதில் எனக்கும் ஒரு சிறு பங்கு கிடைத்தது என் பாக்கியம்.''

அவருடைய அடக்கம், சிலையைப் போலவே உயர்வாக அவரை மதிக்கச் செய்தது.

— ப்ரியன்.

படங்கள்: — கே. வி. ஆனந்த்.



இவர்தான் முதல்வர்

தம் நிகரில்லாத தானைத் தலைவர்

காங்கிரஸ், தி.மு.க., அ.தி.மு.க. கட்சிகளின் அமைச்சர்களை இனி தமிழக மக்கள் வரவேற்க மாட்டார்கள். இவர்கள் எல்லாரையும் பதவியில் பார்த்துப் பார்த்து ஏமாந்து விட்ட தமிழர்கள் இனி புதுத் தெம்பும் — புத்துணர்ச்சியும் — புதிய வேகமும் கொண்ட தமிழக முன்னேற்ற முன்னணியின் தலைவர் சிவாஜி கணேசன்தான் தேர்தலில் வென்று முதல்வராக வர வேண்டும் என விரும்புவார்கள்.

அவருடைய அரசியல் பாசறையாக ஆரம்பத்தில் தி.மு.க. இருந்தது. அங்கே அவருக்குப் பிடிக்காத விஷயங்களின் காரணமாக அதை விட்டு ஒதுங்கி காங்கிரஸ் கட்சியில் தம்மை இணைத்துக் கொண்டார். இருபத்தைந்து ஆண்டுகள் உழைத்தார். ஆனால் பூசல்கள் குழப்பங்கள் இருந்ததன் காரணமாக அந்தக் கட்சியையும் விட்டு வெளியேறினார்.

அவர் இன்று நினைத்திருந்தால் மீண்டும் தம்மைத் தி.மு.க.வோடு இணைத்துக் கொண்டிருக்க முடியும். அல்லது அ.தி.மு.க.வுடன் சேர்ந்திருக்கலாம். இரண்டுமே இன்று தமிழகத்தைச் சீரிய பாட்டையில் அழைத்துச் செல்ல முடியாது என்றே சுயமாகத் துணிச்சலுடன் தமிழக முன்னேற்ற முன்னணியைத் தோற்றுவித்துள்ளார்.

பழம்பெரும் அரசியல் ஞானிகளுடன் பழகி, அரசியலைப் பற்றி நன்றாகக் கற்று அறிந்தவர்.

அரசியலைப் பயன்படுத்தி இலாபம் கண்டவர்களை நாம் அறிவோம். இவரோ எவரிடமும் கை நீட்டிக் கால் காசு வாங்காமல், ''என் சொந்தச் செலவில் தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் சுற்றிச் சுழன்று சூறாவளிப் பிரச்சாரம் செய்தவன்'' என்று கூறுகிறார். இதில் அவருடைய அரசியல் தூய்மை புரிகிறது.

இதோ அவருடைய சங்கநாதம்: ''தமிழ் இனம் நாதியற்றுப் போய் விடாமல் பாதுகாக்கவும், தமிழன்னையை மீண்டும் அரியாசனம் ஏற்றிடவும் நானும், என் இதயங்களும் லட்சிய வெறியோடு தமிழ் உணர்வோடு, தேசிய உள்ளத்தோடு எங்கள் சகலத்தையும் அர்ப்பணிப்போம் என்று இந்தப் புனிதத் திருநாளில் சத்தியப் பிரமாணம் ஏற்கிறோம்'' என்று முழங்கி பன்னிரண்டு அம்சக் கொள்கைகளை வரிசைப்படுத்திக் காட்டுகிறார். அதில் ஒன்பதாவது அம்சம்: ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்ற முதுமொழிக்கேற்ப, இன்னமும் ஸ்தாபன ரீதியாகத் திரட்டப்படாத உழைக்கும் வர்க்கத்தினரையும், பாமரர்களையும், பாட்டாளிகளையும் ஒன்று திரட்டி, தொழில் வளம் பெருக்கி, வேலையில்லாத் திண்டாட்டத்தை அறவே ஒழிக்கப் பாடுபடுதல்.''

இதுதான் இன்றைய தமிழகத்திற்குத் தேவை. முந்தைய ஆட்சிகள் கவனிக்கத் தவறி விட்ட விஷயங்கள். பஞ்சம் — பசி — பட்டினி — வேலையில்லாத் திண்டாட்டம் இவை ஒழிந்த நாடு எதுவோ அதுவே, சுவர்க்க பூமி. அந்தப் பாக்கியம் தமிழ்நாடு பெற்றிட, புதியதோர் உதயமாக இந்தப் புனிதத் தமிழகம் திகழ்ந்திட, தம் நிகரில்லாத தானைத் தலைவர் சிவாஜி கணேசன் முதலமைச்சராக வர வேண்டும்!

— என். எம். அப்துர் ரஹூஃப்.

திருநெல்வேலி — 11



Yoga





daCunha/GCM/147/88/TAM

கோட்டை நிழல்

மலையாளச் சிறுகதை

நடந்து நடந்து இறுதியில் பரந்து விரிந்த அந்த மைதானத்தை வந்தடைந்தேன். வரலாற்றுப் புகழ்மிக்க சுல்தான் — கோட்டை என் முன்னே காட்சி தந்தது.

பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் நான் மறுபடியும் இந்த நகரத்திற்கு வந்திருக்கிறேன். முன்னர் ஆறாண்டு காலம் இந்த நகரத்தில் வாழ்ந்திருக்கிறேன். அப்போதெல்லாம் அன்றாடம் மாலை நேரங்களிலே நான் இவ்வழியே நடந்து செல்வது வழக்கமாயிருந்தது. அப்போதெல்லாம் கோட்டைக்குள்ளே சுற்றி நடந்த போது பட்டாளமும் ஆயுதத் தளவாடங்களும் இருந்த இடங்களிலே அரசாங்க அலுவலகங்கள் இயங்குவதைக் கண்டிருக்கிறேன்.

மணி என்ன...? நகராட்சி மண்டபத்தின் கோபுரத்திலே அமைத்திருக்கிற கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஏழரை! நான் வந்து எவ்வளவு நேரமாயிற்று? துல்லியமாக முடிவுக்கு வர இயலவில்லை.

மைதானத்தில் நிலவிய மங்கலான நிலவொளியை மின்சார ஒளி வந்து மாய்த்து விட்டது. நிலவு என்றால் அது இயற்கையின் புன்னகைதான். அந்தப் புன்னகையைக் கூட மனிதனால் மாய்த்து விட முடிகிறது.

நேரம் போனதே தெரியவில்லை. சுற்று முற்றும் பார்த்தேன். மைதானம் முழுவதும் வெறிச்சோடிக் கிடந்தது. மின்சார ஒளி பளிச்சிட்டுப் பிரகாசிக்கிற, மக்கள் அனைவரும் சென்று காலியாக இருக்கிற மைதானமும், அப்பால் இருள் சூழ்ந்து நிற்கிற கோட்டையும் ஒரு கனவுலகத்தை நினைவுபடுத்தின. கோட்டையின் கரிய நிழலிலேதான் நான் அமர்ந்திருந்தேன். சிறிது தூரத்திலே ஆழமான அகழி.

விசாலமான இந்த மைதானத்திலே, ஒரு காலகட்டத்திலே சதுரங்கசேனைகள் நிரை நிரையாய் அணிவகுத்து நின்றிருக்க வேண்டும். துப்பாக்கிக் குண்டுகளின் சீற்றமும், கரும் புகைப்படலமும், குதிரைக் குளம்படியோசையும் இந்த மைதானத்திலெங்குமே இப்போது கூட எதிரொலிப்பதாய்த் தோன்றுகிறது.

சுற்றிலுமிருந்து மூடுபனி சிறுகச் சிறுக வந்து சூழ்ந்து கொண்டது. மின் தடை ஏற்பட்டு மைதானம் இருளில் மூழ்கியது.

கெட்டி தட்டி நிற்கிற நிசப்த நிலை.

நிசப்த நிலையை வேதனைப்படுத்துகிற முறையிலே மெல்லியதொரு குரல் காற்றிலே மிதந்து வந்தது. ஒரு குருவிக் குஞ்சினுடைய அழுகைக் குரல்... இல்லை; இல்லை — நன்கு சிந்தித்துப் பார்த்துச் சொல்லுகிறேன்... அது மிகவும் மெல்லியதொரு மனிதக் குரல்! அது ஒரு கீதம். அந்தக் கீதத்தின் மெல்லிய ஒலியலைகள் என் இதயத்திலே வந்து மோதி ஒன்றாகச் சேர்ந்து அசைவற்று நின்று விட்டது போல் தோன்றியது.

''சுபைதா.....!'' எவனோ ஒருவன் என் அருகாமையிலே வந்து நீட்டியழைத்தான்.

''யார் அப்பா, அது?'' எனது நடுங்குகிற குரல்.

''சுபைதா, இது நான்தான். நீ எங்கிருக்கின்றாய்?''

''உன் மனைவி இங்கே இல்லையப்பா!'' என்று சற்று ஆத்திரக் குரலிலே சொல்ல வேண்டும் போல் தோன்றியது. ஆனால் வாயினின்று வந்த சொற்கள் இவைதாம்: ''நண்பனே, இது சுபைதா அல்ல. நான் ஒரு சர்தாரண மனிதன்!''

அந்த மனிதன் என்னை நோக்கி நெருங்கி வருவதாய்த் தோன்றியது.

காதல் பரவசம் கொண்ட இதயத்தினர் இருவர் இரவின் இருள் திரை மறைவிலே பரஸ்பரம் சந்திக்கத் தீர்மானித்திருக்கிற இடம் இதுவாக இருக்கலாம்.

''சுபைதா........!'' அவன் இன்னும் உரத்த குரலிலே திரும்பவும் அழைத்தான்.

''உனக்கு என்னப்பா, ஏதேனும் மூளைக் கோளாறு உண்டோ?'' என்றேன்.

''சுபைதா எங்கே?''

''யாரப்பா, இந்த சுபைதா?''

''பாவம்! அவளாலே நடக்க முடியாது.

எம்.டி.வாசுதேவன் நாயர்

அவள் எங்கே?''

''யாரப்பா, இந்த சுபைதா?'' மறுபடியும் கேட்டேன்.

''தெரியாதா? அவள்தான் அன்வர்கானுடைய புதல்வி!''

''அன்வர்கான்! யார் அவர்?''

''ஐயே.... அவரைத் தெரியாதா? நீ இவ்வூருக்குப் புதிது போல் தோணுதே!''

''இன்றுதான் வந்தேன். இதுக்கு முன்னரும் நான் இவ்வூரிலிருந்திருக்கிறேன்.''

''பட்டாளத்திலேயா?''

''எந்தப் பட்டாளம்?''

''நீ பட்டாளத்தைச் சேர்ந்தவன் இல்லையோ?''

''இல்லை!''

''அதனால்தான் உனக்குத் தெரியாது. அவள் வருவாள். அவளால் நடக்க முடியாது. ஆயினும் அவள் வராமலிருக்க மாட்டாள்.''

அவன் இன்னும் கொஞ்சம் என்னை நெருங்கியமர்ந்தான். இருட்டிலே அவனுடைய வெள்ளை — உடைகளையும், பளிச்சிடுகிற பெல்ட்டையும் பார்க்க முடிந்தது.

''நீ யார்?'' என்றேன்.

அதைக் காதிலே வாங்கிக் கொள்ளாதவன் போல், ''அப்போ...... நீ அவளைப் பார்க்கவில்லை?'' என்றான்.

''உனக்குப் பைத்தியம்தான்.'' என்றேன்.

''அவள் சித்தார் வாசித்ததை இப்போதுதானே, நான் கேட்டேன்? அவளுக்குப் பாடவும் தெரியும்.....''

காதலிலே தோல்வி கண்டு சோர்வடைந்திருக்கிற ஒரு காதலன். இவன் மனத்தின் சமநிலை தவறியிருக்கிறது. சுபைதா! ஆகா! எவ்வளவு அருமையான பெயர்! ஒரு வேளை சுபைதா இவனுக்குத் துரோகமிழைத்திருப்பாளோ?


''சொல், அப்பனே! சுபைதா உன்னை விட்டுப் பிரிந்து சென்றாளா?''

''அவள் இவ்வுலகினையே விட்டுப் பிரிந்து சென்றிருக்கிறாள். அவளால் என்னை மறந்து விட முடியாது — அவள் சித்தார் வாசிப்பதைத் தினசரி நான் கேட்டுக் கொண்டுதானிருக்கின்றேன்....'' என்று தன் கதையைச் சொல்லத் தொடங்கினான்.

இவன் ஒரு இராணுவ வீரன் — ஊரையும், உறவினரையும் விட்டுச் சென்று ஆண்டுகள் பல ஆகின்றன. இராணுவ முகாம்களிலும், போர்க்களங்களிலுமாகத் தனது வாலிபத்தின் சோபை மிகுந்த நாட்களைக் கழித்திருக்கிறான்.

சுல்தானிடமோ, அவருடைய படைத் தலைவனான அன்வர்கானிடமோ இவனுக்குப் பகைமை கிஞ்சித்துமிருக்கவில்லை. தான் வெள்ளைக்காரக் கம்பெனியாரின் பட்டாளத்திலே சேர்ந்து கொண்டது இவனுடைய குற்றம்தானா? பட்டாளத்திலே சேர்ந்து விட்டால் அப்புறம் மனித ஜாதி





யின் இரத்தத்தை ஆறாகப் பெருக்க வேண்டும். எதிரிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதுதான் பட்டாளத்தினரின் தொழில்!

கல்தானுடைய படைபலத்தைப் பற்றிய தகவல் அறிந்து வர வெள்ளைத் துரை அனுப்பி வைத்தது இவனைத்தான்.

கல்தானுடைய படை வீரர்கள், காட்டின் எல்லைக் கோடு தாண்டு முன்னரே இவனைக் கைது செய்தனர். தலையிலே துப்பாக்கிக் கட்டையால் அடிபட்டது நினைவிருந்தது. பின்னர் நினைவு வந்த போது, தான் பிரக்ஞையற்றுப் படுத்திருந்தது, கும்மிருட்டு கெட்டி தட்டி நிற்கிற கொட்டடியிலே என்பதை அறிந்து கொண்டான்.

இவன் சித்தாரின் ஒலியை முதன் முதலிலே கேட்டது அந்தக் கொட்டடியிலே வைத்துத் தான். கொட்டடியின் கும்மிருட்டினை நோக்கி, கானத்தின் மெல்லிய சிற்றலைகள் நீர்ப் பாம்புகள் போன்று மிதந்து வந்தன.

இவன் மறுபடியும் மயக்கமுற்றான். பின்னர் கண்ணைத் திறந்து பார்த்த போது அன்வர்கான் இவன் எதிரே நின்றான் — கரிபடர்ந்த ராந்தல் விளக்குடன் ஒரு சிப்பாய் கூட வந்திருந்தான். அன்வர்கான் குரல் கொட்டடிக்குள்ளே முழங்கியது — கேள்விகளாக.

....'வெள்ளைப் பட்டாளம் எங்கே முகாம் அமைத்திருக்கிறது? தாக்குதலை எங்கிருந்து துவக்கத் திட்டம்?'

அன்வர்கானுக்குப் பதில்கள் வேண்டும்.

ஆனால் இவன் வாய் திறக்கவில்லை.

அன்வர்கானுக்கு ஆத்திரம் வந்தது. அவனுடைய சிவந்த தாடி துடித்துக் குலுங்கியது — சிப்பாய் இவனுடைய உடைகளைக் கழற்றினான். அன்வர்கான் தனது இடுப்பினைச் சுற்றி வளைத்திருந்த தோல்பட்டையைக் கழற்றியெடுத்து இவனுடைய திறந்த புறமுதுகிலே ஓங்கியோங்கி அடித்தான்.

ஒவ்வோர் அடி விழுந்த போதும் இவன் துடிதுடித்தான். ஒன்று.... இரண்டு.... மூன்று.... எத்தனை அடிதான் விழுந்ததோ, தெரியவில்லை... இவன் வாயிலிருந்து ஒரு சொல் வெளிவர வேண்டுமே — அதுதான் இல்லை. இவனுக்கு அன்வர்கானிடம் வெறுப்பு இல்லை. கூலிக்காகத்தான் வெள்ளையர் பட்டாளத்தில் சேர்ந்திருந்தான். ஆனாலும் மனச்சாட்சி, நன்றி விசுவாசம் என்றெல்லாம் இருக்கிறதல்லவா?

சலித்துப் போன அன்வர்கான் அங்கிருந்து சென்று விட்டான்.

ஒவ்வொரு நாளும் சித்திரவதை முடிந்து கிங்கரர்கள் வெளியே சென்று கொட்டடிக் கதவை மூடிவிட்ட பின்னர் இவன் அந்தக் கல்தரை மீது கவிழ்ந்து படுத்தவாறு விம்மி விம்மியழுவான். தன் கையிலே ஓர் ஆயுதம் கிடைத்து விட்டால்.... அது கூரியதாக இருக்க வேண்டும் — ஆனந்தத்துடன் அதைத் தன் நெஞ்சிலே குத்தியிறக்கி விடலாம்.....

அன்வர்கான் இறுதி எச்சரிக்கை விடுத்தான்:

'நாளை விடியு முன்னர் வாயைத் திறந்து பேசவில்லை என்றால் நீ இந்த உலகத்திலிருந்தே விடைபெற்றுக் கொள்ளலாம்!'

மரணம் பற்றிய எண்ணம் இவனுக்கு ஆறுதலைத் தந்தது.

இருட்டைக் கிழித்துக் கொண்டு கதவு மெல்லத் திறந்தது. கொட்டடிக்குள்ளே மங்கிய வெளிச்சம் பரவியது. அதிலே வெண்மையான ஓர் உருவத்தைப் பார்த்தான். கனவு.... அல்லவே அல்ல! ஒரு பெண் உருவம். சிரம் மற்றும் மேனியை வெண்ணிற ஆடையால் மறைத்திருக்கிறாள். வெண்முகில் கீற்றுகளுக்கிடையே தோன்றுகிற சந்திர பிம்பத்தைத்தான் அவள் வதனம் நினைவுபடுத்தியது. கதவைத் தாண்டி அவள் உள்ளே வந்தாள்.

அப்போதுதான் இவனுக்குத் தெரிந்தது... அவளால் நடக்க முடியாதென்று! ஒரு காலிலே உயிரோட்டமில்லை. ஊன்று கோலின் உதவியால்தான் அவள் நகர்ந்து சென்றாள்.

''யார் அது?''

''ஒரு பேதைப் பெண்!''

''சொல்லம்மா, நீ யார்?''

''நான் சுபைதா! அன்வர்கானுடைய மகள்.''


அன்வர்கான் பெயரைக் கேட்டதும் இவன் நடுக்கமுற்றான்.

''பயப்பட வேண்டாம். நான் உங்களுக்கு உதவுகிறேன்'' — அவள் ஒரு காலை மட்டும் ஊன்றியூன்றி வைத்தவாறு அருகே வந்து இவனை உராய்ந்தவாறு அமர்ந்து கொண்டாள். உடம்பிலே ஏற்பட்டிருக்கின்ற காயங்களைக் கண்டு அவள் கண்கள் நிறைந்து விட்டன. தனது நீண்ட மெல்லிய விரல்களால் அவள் இவன் காயங்களைத் தடவியவாறு சொன்னாள்: ''நடந்தது அனைத்தும் எனக்குத் தெரியும்.''

இவனுக்கு அவளைப் பற்றி இன்னும் கூடுதலாய் அறிய வேண்டுமென்கிற அவா எழுந்தது. அவள் சொன்னாள்:

இதற்கு மிக அருகாமையிலேதான் அன்வர்கானின் கூடாரம். போர்க்களத்திற்குக் குடும்பத்தினரை அழைத்து வரக் கூடாதென்பதுதான் சுல்தானுடைய ஆக்ஞை — அன்வர்கானுக்கு மட்டும்தான் அதிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. சுபைதா பிறந்த போதே ஒரு கால் உயிரற்றதாக இருந்தது. அவளுடைய குழந்தைப் பருவத்திலேயே அம்மா இறந்து போனாள். அன்வர்கான் போகுமிடமெல்லாம் சுபைதா கூடவே இருப்பாள்.

சென்ற பதினாறு ஆண்டுகளிலே அவள் ஆயுதங்கள் மற்றும் மரணத்தின் மத்தியிலே தான் வாழ்ந்து வந்திருக்கிறாள். தனிமை தான் அவளுடைய விளையாட்டுத் தோழி





பாட சாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ. கோவிந்த தீக்ஷிதரவர்களால் 1542ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒரு நாள் உணவளிக்க சுமார் ரூ 250/— ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ 2500/— மூலதனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ 250/— அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில் உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி
D—76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம்—612 001.

இந்த நன்கொடைக்கு 80 G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு.

— சித்தாரை வாசித்தவாறே பகல் முழுவதை யும் கழித்து விடுவாள். இரவிலே தூக்கம் வரும் வரையிலும் அழுது கொண்டிருப் பாள்.

அழுகைக்குக் காரணமென்னவென்று இவன் விசாரிக்கவில்லை. தனிமையை விடக் கொடுமை உண்டா என்ன? அவள் மறுபடியும் கூறினாள்:

''என் மீது நம்பிக்கையில்லையா? நான் உங்களைக் காப்பாற்றுகிறேன்.''

இவன் அவள் முகத்தை நோக்கினான். நிலவிலே சிலிர்த்து நிற்கிற ஓர் அல்லி மலரின் சுந்தரத் தோற்றம் அந்த முகத்திற்கு இருந்தது.. .... வாழ வேண்டும்!... சுபை தாவைப் பார்த்த கணத்திலிருந்து ஆசை களின் நெருக்குதல் அதிகரித்து வந்தது!

''சுபைதா, உன் தந்தை இதை அறிந்து விட்டால்....''

''என்னைக் கொன்று விடுவார். ஆனால் அப்பா இதை அறிய மாட்டார்.''

''சுபைதா........!''

இவன் கண்களிலிருந்து சூடான கண் ணீர் அவளுடைய உயிரற்ற பாதத்திலே உதிர்ந்து விழுந்தது.

''இப்போதே தப்பித்துக் கொள்ள வேண் டும்!''

''எப்படி?''

''என்னிடம் சாவியுண்டு. கோட்டைச் சுவர் அருகே செல்ல வழியுண்டு. சுவரி லிருந்து கீழிறங்கக் கயிற்றையும் ஓர் இடத்தில் வைத்திருக்கிறேன்....''

அவள் இவனைக் காப்பாற்றுவதற்காகத் தன்னுயிரைப் பணையப்படுத்துகிறாள். இவன் உயிர் வாழ்ந்து அவளுக்கென்ன பயன்?

மங்கலான நிலவிலே அவர்கள் இருவரு டைய நிழல்களும் பரஸ்பரம் இணைந்து காணப்பட்டன.

இதயங்கள் இரண்டும் துடித்துக் கொண் டிருந்தன. .....யாராவது வந்து பார்த்தால்?.... இல்லை, எவருமில்லை! கோட்டைச் சுவர் மீது ஏறுவதற்கான இடத்தை அடைந்த போது அவள் நின்று விட்டாள்.

''உம்! போங்கள்!''

இவன் கயிற்றுச் சுருளைத் தோள் மீது போட்டு வைத்தான்.

அவள் கைகளைத் தன் நெஞ்சு மீது பிடித்து வைத்தவாறு அழைத்தான்: ''சுபைதா..........!''

அவள் இவனுடைய நெஞ்சிலே முக மழுத்தியவாறு நின்றாள். இவன் நெஞ்சு கண்ணீரினால் ஈரமாயிற்று.

காவல் கூடாரத்திலே ஓர் அசைவு.

''போங்கள்! சீக்கிரமாகப் போங்கள்!''

அவள் உச்சியை முகர்ந்த பின்னர் இவன் கோட்டைச் சுவர் மீது ஏறி விட் டான்.

''உம்! உம்! சீக்கிரம்... சீக்கிரம்!''

கயிற்றை மேலே கட்டி உறுதிப்படுத்திய பின்னர் இவன் ஊர்ந்து ஊர்ந்து கீழே இறங் கினான்.

சுதந்திரமானதோர் உலகம் இவனுக் காகக் காத்திருந்தது.

இந்தப் பக்கம் இறங்கித் தரையில் கால் வைத்ததும் இவன் ஆறுதலடைந்தான். இனி அகழியை நீந்திக் கடக்க வேண்டும். அது கஷ்டமான காரியமல்ல. கோட்டைக்குள் ளிருந்து கர்ஜனைகள், அட்டகாசங்கள் முழங்கி வந்தன.

சுபைதா தன் கூடாரத்தைச் சென்றடைந்து விட்டிருப்பாளா? சுற்று வட்டாரத்தை யெல்லாம் அதிரச் செய்யுமாறு வெடியோ சைகள் இரண்டு முறை முழங்கின. அந்தக் களேபரத்திலிருந்து தனிமைப்பட்டதொரு மெல்லிய தீனக்குரல் இவன் காதிலே வந்து விழுந்தது!

இவனுக்குத் திடீரென தனது சுதந்திரத் தையும் மீறி அதற்கு வழிவகுத்த சுபைதா பற்றிய நினைவு வந்தது. மூளைக்குள்ளே நெருப்புப் பற்றியெரிந்தது போல் தோன்றி யது. இறங்கி வந்த கயிற்றினையே பிடித்த வாறு இவன் கோட்டை மதில் மீது ஏறி நின்றான். நாடி நரம்புகளிலே இரத்தம் திளைத்தெழுந்தது. இதயத்திலே நெருப்புப் பற்றியெரிந்தது.

கோட்டைச் சுவர் மீது நிமிர்ந்து நின்ற வாறு இவன் எதிரிக்குச் சவால் விட்டான்.

மீண்டுமொருமுறை துப்பாக்கி அலறியது.

''சுபைதா........!''

அதன் பின்னர் இவன் சுபைதாவைப் பார்க்கவேயில்லை. அவள் சித்தாரை இசைத்தவாறு இவனைத் தேடி நடந்து கொண்டிருக்க வேண்டும். என்றோ ஒரு நாள் சந்திக்கத்தான் செய்வார்கள்.

வெகு தூரத்திலிருந்து அந்த மெல்லிசை மறுபடியும் மிதந்து வந்தது.

இவன் இருட்டைக் கிழித்தவாறு விரைந்து சென்றான்.

''சுபைதா......!''

இவனைப் பின் தொடர்ந்து சென்றா லென்ன? ஒன்றைக் கேட்க விட்டு விட் டேனே.... இதுவரையிலும் பேசிக் கொண் டிருந்த அவன் பெயர்?

நில்லுங்கள்!''

நான் திரும்பிப் பார்த்த போது அவன் இல்லை. மின்விளக்குகள் மீண்டும் எரிந்து இருள் பூராவும் எங்கேயோ பாய்ந்து சென்று மறைந்திருந்தது. கோட்டையும் மைதானமும் ஒரு கனவுலகம் போன்று வெறிச்சோடிக் கிடந்தன.

தமிழாக்கம்: சி. ஏ. பாலன்.

''டியூஷன் சொல்லித் தர போட்டிருக்கிற வாத்தியாரையும் பாடங் கற்றுக் கொள்ளும் பசங்களையும் எங்கே காணோம்?''

''மாடியில் குரு—சிஷ்யன் படம் வீடியோவில பார்த்துக்கிட்டிருக்காங்க''

— என். வி. ரமணி.





ஹா!!!


புதிய ஸிபாகா டாப் டூத்பேஸ்ட்...
ஒவ்வொரு சுவாசமும் புத்துணர்ச்சிமயம்.



முன்னைவிட
சிறந்த சுவை
அதிக நுரை

ஸிபாகா டாப்பில் நன்கு பரவும் விசேஷ பொருள் உண்டு. இது உடனடியாக வாய் முழுதும் பரவி, பற்சிதைவை உண்டாக்கும் நுண்கிருமிகளை அழித்து, வாய் துர்நாற்றத்தைத் தடுக்கிறது; உங்கள் வாயையும், பற்களையும் துப்புரவாக சுத்தம் செய்யும் போதே, உங்கள் சுவாசத்திற்கு முழுமையான புத்துணர்ச்சியையும் தருகிறது.

சுவாசத்தின் புத்துணர்ச்சியை சோதித்துப் பாருங்கள் இப்படி... ஹா ! ஸுப்பர் ஃப்ரெஷ்ஷ்... ஸிபாகா டூத்பேஸ்ட்.



முழுமையான புத்துணர்ச்சி
வாய்க்கு முழுப் பாதுகாப்பு

ஸிபாகா டாப்
டூத்பேஸ்ட்

இந்துஸ்தான் ஸிபா கெய்கியின் தமிழக தயாரிப்பு.

RCA/CT/141/88-TM-1

N.S.K. பில்டர்ஸ்

டெபாசிட் சேகரிப்பு காலம்!

25.5.88 முதல் 25.8.88 வரை


நில உத்திரவாதத்துடன் கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள்.

ஐந்து வருட டெபாசிட்டுகளுக்கு இலவச பரிசுகள்

	பணம் (அ) பொருள்	
ரூ. 5,000	ரூ. 150/-	டான்டி பிளாஸ்க் (1 லிட்டர்)
ரூ. 10,000	ரூ. 300/-	கேசரோல் டுவின் பேக்
ரூ. 25,000	ரூ. 750/-	வாட்டர் பில்டர்
ரூ. 50,000	ரூ. 1500/-	சுமித் கிச்சன் மிஷின்
ரூ. 1,00,000	ரூ. 3000/-	ஸ்டீல் அல்மிரா

1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
16%	17%	18%	20%

வருட வட்டிக்கு 1% கூடுதல் போனஸ் குறிப்பிட்ட காலத்துக்குள் டெபாஸிட்டை செலுத்தி பயனடையும்படி கேட்டுக் கொள்கிறோம்.



N.S.K நகர் திருநின்றவூர்

M.M.D.A. அங்கீகாரம் பெற்றது எண்: PPD/LO 10/87

அனைத்து வசதிகளும் நிறைந்த குடியிருப்புக்கு மிகச் சிறந்த இடம்.

ஒரு மனையின் விலை ரூ. 20,000/-

வங்கி ஊழியர்கள் கவனத்திற்கு!

N.S.K. நகரில் 500 சதுர அடி முதல் 800 சதுர அடிகள் அளவு உள்ள 2 படுக்கை அறைகளுடன் மிகச்சிறந்த முறையில் கட்டப்பட்ட வீடுகள் உள்ளன. விலை ரூ. 1.25 இலட்சம் முதல் ரூ. 2 இலட்சம் வரை. 1 சதுர அடி விலை ரூ. 250/- உடனே அணுகவும்.

அடுக்கு மாடி குடியிருப்புகள்:

அனைத்து நவீன வசதிகளுடன், இன்றைய நாகரீக தலைமுறைக்கேற்றவாறு கட்டப்படும், அடுக்குமாடி குடியிருப்புகள் (Flats) விசாலமான நுழைவாயில் 24 மணிநேரமும் தங்கு தடையில்லாத மின்சாரம் மற்றும் தண்ணீர் சப்ளை. 2 படுக்கை அறைகளுடன் 750 சதுர அடி உள்ளது. 1 சதுர அடி விலை ரூ. 200/- முன்பணம் செலுத்தி உங்களுக்கு தேவையான அடுக்கு மாடி குடியிருப்பை தேர்ந்தெடுத்திடுவீர்.

மாதிரி வீடுகளை (மினியேச்சர் மாடல்) எங்கள் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

N.S.K. ரியல் எஸ்டேட்ஸ்
38-B, பர்கிட் சாலை (முதல்மாடி), தி. நகர், சென்னை-600 017.
தொலைபேசி எண்: 445252, 442106



அத்தியாயம் 19
சமய சஞ்சீவி

நம்பியாண்டார் நம்பிக்கு நடந்த உபசாரத்தின் போது பினாகபாணி அந்த சபா மண்டபத்துக்குள் பிரவேசிக்க முடியவில்லை. வாசற்படிக்கு அப்பால் நின்ற கூட்டத்தில் நின்று உள்ளே பார்த்துக் கொண்டிருந்தான். வந்தியத்தேவனுடைய கவனம் வேறு இடத்தில் இருந்தது என்பதை முன்னமே பார்த்தோம். பினாகபாணியோ வந்தியத்தேவன் முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தான். இவ்வளவையும் பார்த்தும் பார்க்காதது போல் கவனித்துக் கொண்டிருந்தான் இன்னொருவன். அவன்தான் நம் பழைய தோழனாகிய ஆழ்வார்க்கடியான்.

இளவரசர் மதுராந்தகருக்கு நிமித்தம் பார்த்துச் சொல்லி அவர் மனத்தைக் கலக்கி விட்டு வந்தியத்தேவன் அரண்மனைக்கு வெளியில் வந்தான். அங்கே சற்றுத் தூரத்தில் நின்று காத்துக் கொண்டிருந்த வைத்தியர் மகன் அவனை நெருங்கி வந்து, ''அப்பனே! நீ யார்?'' என்று கேட்டான். வந்தியத்தேவன் பினாகபாணியைப் பார்த்துத் திடுக்கிட்டான். அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல், ''என்ன கேட்டாய்?'' என்றான்.

''நீ யார் என்று கேட்டேன்.''

''நான் யார் என்றா கேட்கிறாய்? எந்த நானைக் கேட்கிறாய்? மண், நீர், தேயு, வாயு, ஆகாசம் என்கிற பஞ்ச பூதங்களினாலான இந்த உடம்பைக் கேட்கிறாயா? இந்த உடம்புக்குள் மறைந்திருக்கும் உயிரைக் கேட்கிறாயா? உயிருக்கு ஆதாரமான ஆத்மாவைக் கேட்கிறாயா? ஆத்மாவுக்கும் அடிப்படையான பரமாத்மாவைக் கேட்கிறாயா? அப்பனே! இது என்ன கேள்வி? நீயும் இல்லை; நானும் இல்லை. எல்லாம் இறைவன் மயம்! உலகம் என்பது மாயை, பசு, பதி, பாசத்தின் உண்மையைத் திருநாரையூர் நம்பியைப் போன்ற பெரியோர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்!'' என்று கூறிவிட்டு வந்தியத்தேவன் அரண்மனை வாசலில் நின்ற தன் குதிரை மேல் தாவி ஏறினான். குதிரையைச் சிறிது நேரம் வேகமாகச் செலுத்திய பிறகு வைத்தியர் மகன் தன்னைப் பின் தொடரவில்லை என்று தெரிந்து கொண்டு

அமரர் கல்கி

மெள்ள மெள்ள விட்டுக் கொண்டு போனான்.

ஆனால் வைத்தியர் மகன் அவ்வளவு எளிதில் ஏமாந்து போகிறவனா? அவனுடைய சந்தேகம் இப்போது நிச்சயமாகி விட்டது. நகர் காவல் அதிகாரியிடம் சென்று செய்தியைத் தெரிவித்தான். அதிகாரி அனுப்பிய இரண்டு காவல் வீரர்களை அழைத்துக் கொண்டு அவனும் ஊரைச் சுற்றி வந்தான். அவன் எதிர்பார்த்தது போலவே வந்தியத்தேவனை ஒரு நாற்சந்தியில் சந்தித்தான்.

''இவன்தான் ஒற்றன்! இவனைச் சிறைப் பிடியுங்கள்!'' என்று கூவினான்.

''என்னடா, அப்பா! உனக்குப் பைத்தியமா?'' என்றான் வல்லவரையன்.

''யாரைப் பைத்தியமா என்று கேட்கிறாய்? இந்த உடம்பையா, இதற்குள் இருக்கும் உயிரையா, ஆத்மாவையா, பரமாத்மாவையா! அல்லது பசு, பதி, பாசத்தையா?'' என்று கூறினான் வைத்தியர் மகன் பினாகபாணி.

''நீ இப்பொழுது உளறுவதிலிருந்தே நீ பைத்தியம் என்று தெரிகிறதே?''

''நான் பைத்தியம் இல்லை; உன்னோடு கோடிக்கரை வரையில் வந்த வைத்தியன்! காவலர்களே! தஞ்சாவூர்க் கோட்டையிலிருந்து தப்பி இலங்கைக்கு ஓடிய ஒற்றன் இவன்தான்! உடனே இவனைச் சிறைப் பிடியுங்கள்!''

காவலர்கள் வல்லவரையனை நோக்கி நெருங்கினார்கள்.

''ஜாக்கிரதை! இவன் சொல்வதைக் கேட்டுத் தவறு செய்யாதீர்கள்! நான் இளவரசர் மதுராந்தகத் தேவரோடு வந்த நிமித்தக்காரன்!'' என்று கூறினான் வந்தியத்தேவன்.

''இல்லை, இல்லை! இவன் பெரும் பொய்யன். இவனை உடனே சிறைப் படுத்துங்கள்!'' என்று வைத்தியர் மகன் வாய் விட்டுக் கூவினான்.

அதற்குள் அவர்களைச் சுற்றிலும் ஒரு பெருங் கூட்டம் கூடி விட்டது. கூட்டத்தில் சிலர் வந்தியத் தேவனுடைய கட்சி பேசினார்கள். சிலர் வைத்தியர் மகனின் கட்சி பேசினார்கள்.

''இவனைப் பார்த்தால் நிமித்தக் காரனாகத் தோன்றவில்லை'' என்றான் ஒருவன்.

''ஒற்றனாகவும் தோன்றவில்லையே'' என்றான் இன்னொருவன்.

''நிமித்தக்காரன் இவ்வளவு சிறு பிராயத்தனாயிருக்க முடியுமா?''

''ஏன் முடியாது? ஒற்றன் குதிரை மேலேறி வீதியில் பகிரங்கமாகப் போவானா?''

''நிமித்தக்காரன் எதற்காக உடைவாள் தரித்திருக்கிறான்?''

''ஒற்றன் என்றால் யாருடைய ஒற்றன்? பழையாறையில் என்ன வேவு பார்ப்பதற்காக வருகிறான்?''

இதற்கிடையில் பினாகபாணி ''இவனைச் சிறைப் பிடியுங்கள்! உடனே சிறைப் பிடியுங்கள்! பழுவேட்டரையருடைய கட்டளை!'' என்று கத்தினான்.

பழுவேட்டரையர் என்ற பெயரைக் கேட்டதும் அங்கே கூடியிருந்தவர்கள் பலருக்கு வந்தியத்தேவன் மேல் அனுதாபம் உண்டாகி விட்டது. அவனை எப்படியாவது தப்புவிக்க வழி உண்டா என்று பார்த்தார்கள்.

இதற்கிடையில் ஆழ்வார்க்கடியான் அந்தக் கூட்டத்தின் ஓரத்தில் வந்து சேர்ந்தான்.

''இளவரசரோடு வந்த நிமித்தக் காரன் இங்கே இருக்கிறானா?'' என்று கூவினான்.

''இதோ இருக்கிறேன்!'' என்றான் வந்தியத்தேவன்.

''இல்லை; இவன் ஒற்றன்!'' என்று பினாகபாணி கூச்சலிட்டான்.

''இதென்ன வம்பு? நீ மதுராந்தகத் தேவருடன் வந்த நிமித்தக்காரனாயிருந்தால் என்னுடன் வா! உன்னை இளவரசி அழைத்து வரச் சொன்னார்!'' என்றான் ஆழ்வார்க்கடியான்

யான்.

வந்தியத்தேவனின் உள்ளம் துள்ளிக் குதித்தது. "அந்த நிமித்தக்காரன் நான்தான்! இதோ வருகிறேன்" என்றான்.

"விடாதீர்கள்! ஒற்றனை விட்டு விடாதீர்கள்!" என்று வைத்தியர் மகன் பினாகபாணி கத்தினான்.

ஆழ்வார்க்கடியான், "நீ நிமித்தக்காரன் தானா என்பதை நிரூபித்து விடு! அப்படியானால் தான் என்னுடன் வரலாம்!" என்று கூறிக் கொண்டே கண்ணால் சமிக்ஞை செய்தான்.

"என்ன விதமாக நிரூபிக்கச் சொல்லுகிறாய்?" என்று வந்தியத்தேவன் அவசரத்துடன் கேட்டான்.

"அதோ இரண்டு குதிரைகள் வேகமாக வருகின்றனவல்லவா? அவற்றின் மீது வருகிறவர்கள் ஏதோ அவசரச் செய்தி கொண்டு வருவதாகத் தோன்றுகிறது. அது உண்மையாயிருந்தால், அவர்கள் என்ன செய்தி கொண்டு வருகிறார்கள், சொல்!"

குதிரைகளின் பேரில் வந்தவர்களை வந்தியத்தேவன் உற்றுப் பார்த்து விட்டு, "ஓ! சொல்லுகிறேன். இராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கு ஜல கண்ட விபத்து நேர்ந்திருக்கிறது! அந்தத் துக்கச் செய்தியைத்தான் அவர்கள் கொண்டு வருகிறார்கள்!" என்றான் வந்தியத்தேவன்.

இப்படிச் சொல்லி வாய் மூடுவதற்குள் குதிரைகள் ஜனக் கூட்டத்தை நெருங்கி விட்டன. ஜனங்கள் மேலே போக வழி விடாதபடியால் குதிரைகள் நின்றன.

"நீங்கள் தூதர்கள் போலிருக்கிறது. என்ன செய்தி கொண்டு வருகிறீர்கள்?" என்று ஆழ்வார்க்கடியான் கேட்டான்.

"ஆம், நாங்கள் தூதர்கள்தான்! துக்கச் செய்தி கொண்டு வருகிறோம்! இளவரசர் அருள்மொழி வர்மர் ஏறி வந்த கப்பல் சுழற்காற்றில் அகப்பட்டுக் கொண்டதாம். இளவரசர் யாரையோ காப்பாற்றுவதற்காகக் கடலில் குதித்து முழுகிப் போய் விட்டாராம்!"

குதிரை மீது வந்தவர்களில் ஒரு



வன் இவ்வாறு கூறியதும் அந்த ஜனக் கூட்டத்தில் "ஐயோ!" "ஐயகோ!" என்ற பரிதாபக் குரல்கள் நெஞ்சு பிளக்கும்படியான சோகத் தொனியில் எழுந்தன.

எங்கிருந்துதான் அவ்வளவு ஜனங்களும் வந்தார்களோ, தெரியாது. அவ்வளவு சீக்கிரத்தில் அவர்கள் எப்படி வந்து சேர்ந்தார்கள் என்றும் சொல்ல முடியாது. ஆண்களும், பெண்களும், வயோதிகர்களும், சிறுவர், சிறுமிகளும் அந்தத் தூதர்களைப் பெருங் கூட்டமாகச் சூழ்ந்து கொண்டார்கள். பலர் அவர்களைப் பல கேள்விகள் கேட்டார்கள் பலர் அழுது புலம்பினார்கள்.

பழுவேட்டரையர்கள் அருள்மொழி வர்மரை விரும்பவில்லையென்பது அந்நகர மக்களில் பலருக்கு ஏற்கெனவே தெரியும். இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்காகப் பழுவேட்டரையர்கள் ஈழத்துக்கு ஆள் அனுப்பியிருக்கிறார்கள் என்ற பிரஸ்தாபமும் அவர்கள் காதுக்கு எட்டியிருந்தது. எனவே, கூட்டத்தில் பலர் பழுவேட்டரையர்களைப் பற்றி முதலில் முணு முணுக்கத் தொடங்கினார்கள். பிறகு உரத்த குரலில் சபிக்கவும் தொடங்கினார்கள். "பழு

வேட்டரையர்கள் வேண்டுமென்றே இளவரசரைக் கடலில் மூழ்க அடித்துக் கொன்றிருக்க வேண்டும்!'' என்றும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டார்கள். அந்த ஜனக் கூட்டத்தார் பேசிக் கொண்ட சத்தமும் அவர்கள் புலம்பிய சத்தமும் பழுவேட்டரையர்களைச் சபித்த சத்தமும் சேர்ந்து சமுத்திரத்தின் பேரிரைச்சலைப் போல் எழுந்தது.

இந்தக் கூட்டத்துக்கு மத்தியில் அகப்பட்டுக் கொண்ட தஞ்சாவூர்த் தூதர்கள் மேலே அரண்மனைக்குப் போக முடியாமல் தவித்தார்கள். ஜனங்களை விலக்கிக் கொண்டு போக அவர்கள் முயன்றும் பலிக்கவில்லை. ''எப்படி?'' ''எங்கே?'' ''என்றைக்கு?'' ''நிச்சயமாகவா?'' என்றெல்லாம் ஜனங்கள் அத் தூதர்களைக் கேட்ட வண்ணம் மேலே போக முடியாதபடி தடை செய்தார்கள்.

வைத்தியர் மகனுடன் வந்திருந்த காவலர்களைப் பார்த்து ஆழ்வார்க்கடியான், ''நீங்கள் ஏன் சும்மா நிற்கிறீர்கள்? கூட்டத்தை விலக்கித் தூதர்களை அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்!'' என்றான். காவலர்களும் மேற்படி செய்தி கேட்டுக் கதி கலங்கிப் போயிருந்தார்கள். அவர்கள் இப்போது முன்வந்து தூதர்களுக்கு வழிவிலக்கிக் கொடுக்க முயன்றார்கள். தூதர்கள் சிறிது சிறிதாக அரண்மனையை நோக்கி முன்னேறினார்கள். ஜனக் கூட்டமும் அவர்களை விடாமல் தொடர்ந்து சென்றது. மேலும் மேலும் ஜனங்களின் கூட்டம் பெருகிக் கொண்டும் வந்தது.

அவ்வளவு பெரிய ஜனக்கூட்டத்தில், ஒரே மனதாக இளவரசர் அருள்மொழிவர்மரின் கதியை நினைத்துக் கலங்கிப் புலம்பிக் கொண்டிருந்த கூட்டத்தில், ஒரே ஒரு பிராணி மட்டும், ''ஐயோ! இது ஏதோ சூழ்ச்சி! ஒற்றனைத் தப்பித்து விடச் சூழ்ச்சி!'' என்று அலறிக் கொண்டிருந்தது. அவ்வாறு அலறிய வைத்தியர் மகனை யாரும் பொருட்படுத்தவில்லை. அவனுடைய கூக்குரல் யாருடைய செவியிலும் ஏறவில்லை.

மாநதியின் பெருவெள்ளம் அதில் விழுந்து விட்ட சிறு துரும்பை அடித்துக் கொண்டு போவது போல் அந்தப் பெரும் ஜனக் கூட்டம் வைத்தியர் மகனையும் தள்ளிக் கொண்டு முன்னே சென்றது.

ஜனக் கூட்டம் சேரத் தொடங்கிய போதே வந்தியத்தேவன் குதிரை மேலிருந்து இறங்கி விட்டான். கூட்டம் நகரத் தொடங்கிய போது ஆழ்வார்க்கடியான் அவன் அருகில் வந்து அவன் கையைப் பற்றிக் கொண்டான். ''குதிரையை விட்டு விடு! பிறகு அதைத் தேடிப் பிடித்துக் கொள்ளலாம். உடனே என்னுடன் வா!'' என்று அவன் காதோடு சொன்னான்.

''அப்பனே! சமய சஞ்சீவியாக வந்து சேர்ந்தாய்! இல்லாவிடில் என் நிலைமை என்ன ஆகியிருக்குமோ, தெரியாது!'' என்றான் வல்லவரையன்.

''இதுதான் உன் தொழில் ஆயிற்றே? நீ சங்கடத்தில் அகப்பட்டுக் கொள்ள வேண்டியது; யாராவது வந்து உன்னை அந்த நெருக்கடியிலிருந்து விடுவிக்க வேண்டியது!'' என்று எகத்தாளம் செய்தான் ஆழ்வார்க்கடியான்.

இருவரும் ஜனக்கூட்டம் அவர்களைத் தள்ளிக் கொண்டு போகாத வண்ணம் வீதி ஓரமாக ஒதுங்கி நின்றார்கள். கூட்டம் போன பிறகு வந்தியத்தேவனுடைய கையை ஆழ்வார்க்கடியான் பற்றிக் கொண்டு வேறு திசையாக அவனை அழைத்துச் சென்றான்.

அரண்மனைகள் இருந்த வீதியில் முன்னொரு தடவை நாம் பார்த்திருக்



கும் பூட்டிக் கிடந்த கோடி வீட்டில் அவர்கள் புகுந்தார்கள். கொல்லைப் புறத்தில் இருந்த நந்தவனத்தில் பிரவேசித்துக் கொடி வழிகளில் நடந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் நீல நிற ஓடை தெரிந்தது. அதில் ஒரு ஓடம் மிதந்தது. ஓடத்தில் ஒரு மாதரசி இருந்தாள். அவளைக் கண்டதும் வந்தியத்தேவனுடைய உள்ளம் துள்ளிக் குதித்தது.

அத்தியாயம் 20

தாயும் மகனும்

அன்னை அழைத்து வரச் சொன்னதாகச் சேவகன் வந்து கூறியதன் பேரில் மதுராந்தகன் செம்பியன் மாதேவியைப் பார்க்கச் சென்றான். சிவ பக்தியிற் சிறந்த அந்த மூதாட்டியின் புகழ் நாடெங்கும் பரவியிருந்தது. ஒரு காலத்தில் மதுராந்தகனும் அன்னையிடம் அளவிலாத பக்தி கொண்டிருந்தான். இப்போது அந்த பக்தி கோப வெறியாக மாறிப் போயிருந்தது. பெற்ற மகனுக்குத் துரோகம் செய்து தாயாதிகளின் கட்சி பேசிய தாயைப் பற்றிக் கதைகளிலே கூடக் கேட்டதில்லையே! தனக்கு இப்படிப்பட்ட அன்னையா வந்து வாய்க்க வேண்டும்?... இதை நினைக்க நினைக்க அவன் உள்ளத்திலிருந்து அன்பு அத்தனையும் துவேஷமாகவே மாறி நாளடைவில் கொழுந்து விட்டு வளர்ந்திருந்தது.

அபூர்வமான சாந்தம் குடி கொண்ட அன்னையின் முகத்தைப் பார்த்ததும் கொஞ்சம் அவனுடைய கோபம் தணிந்தது. பழைய வழக்கத்தை அனுசரித்து நமஸ்கரித்து எழுந்து நின்றான். "சிவபக்திச் செல்வம் பெருகி வளரட்டும்!" என்று மகாராணி ஆசி கூறி அவனை ஆசனத்தில் உட்காரச் செய்தார்.

அந்த ஆசீர்வாதம் மதுராந்தகனுடைய மனத்தில் அம்பைப் போல் தைத்தது.

"மதுராந்தகா! என் மருமகள் சுகமா? உன் மாமனார் வீட்டிலும் தனாதிகாரியின்





வீட்டிலும் எல்லாரும் சௌக்கியமா?'' என்று அன்னை கேட்டார்.

''எல்லாரும் சௌக்கியமாகவே இருக்கிறார்கள். அதைப் பற்றித் தங்களுக்கு என்ன கவலை?'' என்று குமாரன் முணுமுணுத்தான்.

''தஞ்சையிலிருந்து புறப்படுவதற்கு முன்னால் நீ சக்கரவர்த்தியைப் பார்த்தாயா? அவருடைய உடல் நலம் தற்சமயம் எப்படியிருக்கிறது?'' என்று மகாராணி கேட்டார்.

''பார்த்து விடை பெற்றுக் கொண்டுதான் புறப்பட்டேன். சக்கரவர்த்தியின் உடம்பு நாளுக்கு நாள் நலிந்துதான் வருகிறது. உடல் வேதனையைக் காட்டிலும் மன வேதனை அவருக்கு அதிகமாகியிருக்கிறது!'' என்றான் மதுராந்தகன்.

''அது என்ன, குழந்தாய்? சக்கரவர்த்தி மனவேதனைப்படும்படியாக என்ன நேர்ந்தது?''

''குற்றம் செய்தவர்கள், — அநீதி செய்தவர்கள், — பிறர் உடைமையைப் பறித்து அனுபவிக்கிறவர்கள், — மனவேதனை கொள்வது இயல்புதானே?''

''இது என்ன சொல்கிறாய்? சக்கரவர்த்தி அவ்வாறு என்ன குற்றம், — அநீதி, — செய்து விட்டார்?''

''வேறு என்ன செய்ய வேண்டும்? நான் இருக்க வேண்டிய சிம்மாசனத்தில் அவர் இத்தனை வருஷங்களாக அமர்ந்திருப்பது போதாதா? அது குற்றம் இல்லையா? அநீதி இல்லையா?''

''குழந்தாய்! பால் போலத் தூய்மையாக இருந்த உன் உள்ளத்தில் இந்த விஷம் எப்படி வந்தது? யார் உனக்குத் துர்ப்போதனை செய்து கெடுத்து விட்டார்கள்?'' என்று இரக்கமான குரலில் அன்னை கேட்டார்.

''எனக்கு ஒருவரும் துர்ப்போதனை செய்து கெடுக்கவில்லை. தங்கள் மகனை அவ்வளவு நிர்மூடனாக ஏன் கருதுகிறீர்கள்? எனக்குச் சுய அறிவே கிடையாது என்பது தங்கள் எண்ணமா?''

''எத்தனை அறிவாளிகளாயிருந்தாலும் துர்ப்போதனையினால் மனம் கெடுவது உண்டு. கரைப்பவர்கள் கரைத்தால் கல்லுங் கரையும் அல்லவா? கூனியின் துர்ப்போதனையினால் கைகேசியின் மனம் கெட்டுப் போகவில்லையா?''

''பெண்களின் மனத்தை அப்படித் துர்ப்போதனையினால் கெடுத்து விடலாம் என்பதை நானும் தெரிந்து கொண்டுதானிருக்கிறேன்.''

''மதுராந்தகா! யாரைக் குறிப்பிட்டுச் சொல்கிறாய்?''

''தாயே! என்னை எதற்காக அழைத்தீர்கள்? அதைச் சொல்லுங்கள்!''

''சற்று முன் நடந்த வைபவத்தில் நீ பிரசந்நமாயிருந்தாய் அல்லவா?''

''இருந்தேன். யாரோ வழியோடு போகிற சிறுவனைப் பல்லக்கிலேற்றி அழைத்து வரச் செய்தீர்கள். சிம்மாசனத்தில் ஏற்றி வைத்து உபசரித்தீர்கள். அவன் தலை கால் தெரியாத கர்வம் கொண்டிருப்பான்.....''

''ஐயோ! அப்படி அபசாரமாய்ப் பேசாதே, குழந்தாய்! வந்திருந்தவர் வயதில் வாலிபரானாலும் சிவஞானப் பரிபக்குவம் அடைந்த மகான்.....''

''அவர் மகானாகவேயிருக்கட்டும். நான் குறைத்துப் பேசினால் அவருடைய பெருமை குறைந்து விடாதல்லவா? அந்த மகானுக்குத் தாங்கள் இராஜரீக மரியாதைகள் செய்ததையும் நான் ஆட்சேபிக்கவில்லை. என்னை எதற்காக அழைத்தீர்கள் என்று சொல்லுங்கள்!''

செம்பியன்மாதேவி ஒரு நெடிய பெருமூச்சு விட்டார். பிறகு கூறினார்:— ''உன்னுடைய குணத்தில் ஏற்பட்டிருக்கும் மாறுதல் எனக்குப் பிரமிப்பை உண்டாக்குகிறது. பழுவேட்டரையர் மாளிகையில் இரண்டு வருஷ வாசம் இப்படி உன்னை மாற்றிவிடும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. போனால் போகட்டும். என்னுடைய கடமையை நான் செய்ய வேண்டும். உன் தந்தைக்கு நான் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற என்னாலியன்ற வரையில் முயல வேண்டும். மகனே! உன்னை அழைத்த காரியத்தைச் சொல்வதற்கு முன்னால், என்னுடைய கதையை, — நான் உன் தந்தையை மணந்த வரலாற்றைக் கூற வேண்டும். சற்றுப் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிரு!''

மதுராந்தகன் பொறுமையுடன்

கேட்டுக் கொண்டிருக்கப் போவதற்கு அறிகுறியாகக் கால்களை மண்டி போட்டுக் கொண்டு கைகளைப் பீடத்தில் நன்றாய் ஊன்றிக் கொண்டு உட்கார்ந்தான்.

''நான் பிறந்த ஊராகிய மழபாடிக்கு நீ குழந்தையாயிருந்த போது இரண்டொரு தடவை வந்திருக்கிறாய். அந்த ஊரில் உள்ள சிவபெருமான் ஆலயத்தையும் பார்த்திருக்கிறாய். கோச்செங்கட் சோழ மன்னர் சிவாலயம் எடுப்பித்த அறுபத்து நாலு ஸ்தலங்களில் அதுவும் ஒன்று எனப் பெரியோர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். உன்னுடைய பாட்டனார், என்னுடைய தந்தை, மழபாடியில் பெரிய குடித்தனக்காரர். எங்கள் குலம் தொன்மையானது. ஒரு காலத்தில் மழவரையர்கள் செல்வாக்குப் பெற்ற சிற்றரசர்களாயிருந்தார்கள். விஜயாலய சோழர் காலத்தில் நடந்த யுத்தங்களில் பாண்டியர்களோடு சேர்ந்திருந்தார்கள். அதனால் சோழர்கள் வெற்றி பெற்ற பிறகு மழவரையர்களின் செல்வாக்குக் குன்றியிருந்தது. சிறு பெண்ணாயிருந்த போது அதைப் பற்றியெல்லாம் நான் குறைப்படவில்லை. என் உள்ளம் மழபாடி ஆலயத்தில் உள்ள நடராஜப் பெருமான் மீது சென்றிருந்தது. மழபாடியின் சரித்திரத்தில் நிகழ்ந்த ஒரு வரலாற்றை ஒரு பெரியவர் நான் குழந்தையாயிருந்த போது எனக்குச் சொன்னார். சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமது சீடர்களுடனே எங்களூர்ப் பக்கமாகப் போய்க் கொண்டிருந்தார். மழபர்டி சிவாலயத்தைச் சுற்றிச் செழித்து வளர்ந்து கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்கிய கொன்னை மரங்கள் ஆலயத்தை மறைத்திருந்தனவாம். ஆகையால் கோயிலைக் கவனியாமல் சுந்தரர் சென்றாராம். 'சுந்தரம்! என்னை மறந்தாயோ!' என்ற குரல் அவர் காதில் கேட்டதாம். சுந்தரர் சுற்றுமுற்றும் பார்த்து 'யாராவது ஏதேனும் சொன்னீர்களா?' என்று கேட்டாராம். சீடர்கள் 'இல்லை' என்றார்களாம். தங்கள் காதில் குரல் எதுவும் கேட்கவில்லை என்றும் சொன்னார்களாம். சுந்தரர் உடனே அருகில்

அருள்வாக்கு



அளவறிந்து எதையும் செய்பவரால்தான் பரம ஸத்யத்தை அறிய முடியும் என்பதைத்தான் திருமூலர்

கணக்கறிந்தார்க்கன்றிக் காண
வொண்ணாதது
கணக் கறிந்தார்க்கன்றிக் கைகூடாக்
காட்சி

என்று சொல்லியிருக்கிறார். அவர் பண்ணின நூலுக்குத் ''திருமந்திரம்'' என்று பெயர். அதனால் இந்த வார்த்தைகள் மந்திரம் மாதிரியானவையாகும்.

அதிகமாகப் போகாமல் எல்லாவற்றிலும் கணக்காய் இருக்க வேண்டும். பேச்சு, எண்ணம், செய்கை, உணவு, உடை, செலவு எதிலானாலும் வாழ்க்கைக்கு எவ்வளவுதான் அத்யாவசியமோ அதோடு கணக்காய் நிறுத்திக் கொள்ள வேண்டும். இப்போது பண்ணுகிற மாதிரி விரயம் செய்யக் கூடாது. கணக்காயிருப்பதுதான் இஹம்பரம் இரண்டுக்கும் நன்மை செய்வது. மனநெறி இல்லாவிட்டால் பரம் எப்படி லபிக்கும்? அந்த மனநெறி mental discipline வருவதற்கு வாழ்க்கை யம்சங்கள் எல்லாவற்றிலும் கணக்காயிருந்து கட்டுப்படுத்திக் கொள்வதே உதவும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்.

ஏதாவது ஆலயம் மறைந்திருக்கிறதா என்று விசாரித்தாராம். கொன்னை மரங்களுக்கிடையில் மறைந்திருந்த மழபாடி திருக்கோயிலைக் கண்டு பிடித்து ஓடிவந்து இறைவன் சந்நிதியில் 'பொன்னார் மேனியனே!' என்ற பதிகத்தைப் பாடினாராம். இந்த வரலாற்றைக் கேட்டது முதற் கொண்டு,

'மன்னே! மாமணியே!
மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே உன்னையல்லால்
இனி யாரை நினைக்கேனே!'

என்ற வரிகள் என் மனத்தில் பதிந்து விட்டன. கோவிலுக்கு அடிக்கடி போவேன். நடராஜ மூர்த்தியின் முன்னால் நின்று அந்த வரிகளை ஓயாது சொல்லுவேன். நாளாக ஆக, என் உள்ளத்தில் மழபாடி இறைவர் குடிகொண்டு விட்டார். சிவபெருமானையே நான் மணந்து கொள்ளப் போவதாக மனக் கோட்டை கட்டினேன். என்னை நான் உமையாகவும், பார்வதியாகவும், தாட்சாயணியாகவும் எண்ணிக் கொள்வேன். அவர்கள் சிவபெருமானைப் பதியாக அடைவதற்குத் தவம் செய்தது போல நானும் கண்ணை மூடிக் கொண்டு தவம் செய்வேன். யாராவது என் கலியாணத்தைப் பற்றிய பேச்சு எடுத்தால் வெறுப்பு அடைவேன். இவ்விதம் என் குழந்தைப் பருவம் சென்றது. மங்கைப் பருவத்தை அடைந்த போது என் உள்ளம் சிவபெருமானுடைய பக்தியில் முன்னை விட அதிகமாக ஈடுபட்டது. வீட்டாரும் ஊராரும் என்னைப் 'பிச்சி' என்று சொல்ல ஆரம்பித்தார்கள். அதையெல்லாம் நான் பொருட்படுத்தவேயில்லை. வீட்டில் உண்டு உறங்கிய நேரம் போக மிச்சப் பொழுதையெல்லாம் கோவிலிலேயே கழித்தேன். பூஜைக்குரிய மலர்களைப் பறித்து விதம் விதமான மாலைகளைத் தொடுத்து நடராஜப் பெருமானுக்கு அணியச் செய்து பார்த்து மகிழ்வேன். நெடுநேரம் கண்ணை மூடிக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்திருப்பேன். இவ்விதம் ஒரு நாள் கண்ணை மூடிக் கொண்டு மனத்தில் இறைவனையே தியானித்துக் கொண்டிருந்த போது திடீரென்று கலகலவென்று சத்தம் கேட்டுக் கண் விழித்துப் பார்த்தேன். என் எதிரே ஐந்தாறு பேர் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களில் முன்னால் நின்ற ஒருவர் மீதுதான் என் கண்களும் கருத்தும் சென்றன. நான் மனத்தில் தியானித்துக் கொண்டிருந்த சிவபெருமான் தாமே தம் பரிவாரங்களுடன் என்னை ஆட்கொள்ள வந்து விட்டார் என்று எண்ணிக் கொண்டேன். எழுந்து நின்று தலை குனிந்து வணங்கி நின்றேன். என் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் பொழிந்தது. இதை அவர் கவனித்திருக்க வேண்டும். 'இந்தப் பெண் யார்? இவள் ஏன் கண்ணீர் விட்டு அழுகிறாள்?' என்று ஒரு குரல் கேட்டது. அதற்கு என் தந்தையின் குரல் 'இவள் என் மகள். பிஞ்சிலே பழுத்தவளைப் போல் இவளுக்கு இப்போதே சிவபக்தி வந்து விட்டது. ஓயாமல் இப்படிக் கோவிலில் வந்து உட்கார்ந்து கண்ணை மூடிக் கொண்டு தியானம் செய்வதும் பதிகம் பாடுவதும் கண்ணீர் விடுவதுமாயிருக்கிறாள்!' என்று கூறிய மறுமொழி என் காதில் விழுந்தது. மறுபடி நான் நிமிர்ந்து பார்த்த போது முன்னால் நின்றவர் சிவபெருமான் இல்லையென்றும் யாரோ அரச குலத்தவர் என்றும் தெரிந்து கொண்டேன். எனக்கு அவமானம் தாங்கவில்லை. அங்கிருந்து ஒரே ஓட்டமாக ஓடிப் போய் வீட்டை அடைந்தேன். அனால் என்னை ஆட்கொண்டவர் என்னை விடவில்லை. என் தந்தையுடன் எங்கள் வீட்டுக்கே வந்து விட்டார். மகனே! அவர்தான் என் கணவர் — உன் அருமைத் தந்தையாகிய கண்டராதித்த தேவர்!''

இவ்விதம் கூறி விட்டுப் பெரிய மகாராணி சிறிது நிறுத்தினார். பழைய நினைவுகள் அவருடைய கண்களில் மீண்டும் கண்ணீர்த் துளிகளை வருவித்தன. கண்ணைத் துடைத்துக் கொண்டு மறுபடியும்

கூறினார்:—

''பிறகு உன் தந்தையைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொண்டேன். அவர் சிறிது காலத்துக்கு முன்புதான் சோழ நாட்டின் சிம்மாசனத்தில் அமர்ந்தார். அது முதல் பற்பல சிவஸ்தலங்களுக்கும் சென்று ஆலய தரிசனம் செய்து வந்தார். அவருக்குப் பிராயம் அப்போது நாற்பதாகியிருந்தது. இளம் வயதில் அவர் மணந்து கொண்டிருந்த மாதரசி காலமாகி விட்டாள். மறுபடி கலியாணம் செய்து கொள்ளும் எண்ணமே அவருக்கு இருக்கவில்லை. மீண்டும் மணம் புரிந்து கொள்வதில்லையென்று விரதம் கொண்டிருந்தார். ஆனால் அவருடைய புனித உள்ளம் இந்தப் பேதையைக் கண்டதினால் சலனமடைந்தது. என் தந்தையின் முன்னிலையில் என் விருப்பத்தை அவர் கேட்டார். நானோ, சிவபெருமானே மனித உருவங்கொண்டு என்னை ஆட்கொள்ள வந்திருப்பதாக எண்ணிப் பரவசம் கொண்டிருந்தேன். அவரை மணந்து கொள்ளப் பூரண சம்மதம் என்பதைத் தெரிவித்தேன். எங்களுக்கு விரைவில் திருமணம் நடந்தது. அதன் பயனாக உன் பாட்டனார் இழந்திருந்த செல்வாக்கை மீண்டும் அடைந்து 'மழவரையர்' என்ற பட்டப் பெயரையும் பெற்றார்....

''மகனே! எனக்கும் உன் தந்தைக்கும் திருமணம் நடந்த பிறகு நாங்கள் இருவரும் மனம் விட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வந்தோம். சிவபெருமானுடைய திருப்பணிக்கே எங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்வது என்றும், இருவரும் மகப்பேற்றை விரும்புவதில்லை என்றும் தீர்மானித்திருந்தோம். அதற்கு ஒரு முக்கிய காரணம் இருந்தது. குழந்தாய்! இதையெல்லாம் உன்னிடம் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படும் என்று நான் கனவிலும் கருதவில்லை. ஆயினும் அத்தகைய அவசியம் நேர்ந்து விட்டதனால் சொல்லுகிறேன். கொஞ்சம் செவி கொடுத்துக் கவனமாகக் கேள்!''

இவ்விதம் செம்பியன் மகாதேவி கூறி மீண்டும் ஒரு நெடு மூச்சு விட்டார். மதுராந்தகனும் முன்னைக் காட்டிலும் அதிக சிரத்தையுடன் காது கொடுத்துக் கேட்கத் தொடங்கினான்.

(தொடரும்)



அந்தப் பத்துக் காசுகள்

இராஜா பாலச்சந்தர்

கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான் கோபி. பஸ்ஸுக்கு நேரமாகி விட்டது.

அவசரப்பட்டான், ''சீக்கிரமா விலை சொல்லிக் கொடுப்பா.''

''அதான் சொன்னனே சார்,'' எனப் பரிதாபமாகக் கூறினான் கடைப் பையன். ''ரெண்டு ரூபா கொடுத்துட்டு எடுத்துக் குங்க சார். பக்கத்துக் கடையில் இதே சரக்கு ரெண்டார் ரூபா. விசாரிச்சுப் பார்த்துக்க லாம்.''

''இந்த ரெண்டு மாம்பழத்துக்கு விலை சொல்றியா, இல்ல மொத்த கடைக்குமா?''

''சீசன் போயிடுச்சு சார்! அதான்...''

''என்னனாலும் அதிகம்பா!''

''ஒரு பழத்துல எனக்குப் பத்து காசுதான் லாபம் சார். அதை வச்சுத்தான் என் வயிற் றுப்பாட்டைத் தீர்க்கணும்.''

''அதுசரி, இந்த ஒப்பாரியெல்லாம் எனக்கு எதுக்கு? ரெண்டையும் ஒரு ரூபாய்க் குத் தர முடியுமா?''

''பார்த்துக் கொடுங்க சார்'' — கெஞ்சி னான் பையன்.

''ஒண்ணார் ரூபா தருவேன்.''

''இன்னும் ஒரு இருபத்தைஞ்சு காசு சேர்த்துக் கொடுங்க சார்.''

''அதெல்லாம் முடியாது.'' எனக் கண்டிப்போடு கூறிய கோபி, ஒரு ரூபாய் ஐம்பது காசுகளை எடுத்து, பையனின் கையில் திணித்தான். இரண்டு மாம்பழங் களையும் பையில் போட்டுக் கொண்டு நகர்ந் தான்.

வேதனையோடு குரல் கொடுத்தான் பையன், ''சார், இன்னும் ஒரு பத்துக் காசு மட்டுமாவது தந்துட்டுப் போங்க சார்...''

ஆனால், அவனது கெஞ்சலை அலட்சி யப்படுத்தி, நடையை விரைவுபடுத்தினான் கோபி.

புறப்படத் தயாராக உறுமிக் கொண்டு இருந்தது பேருந்து.

ஓடிச்சென்று ஏறினான் கோபி. உள்ளே ஏக நெரிசல். தன் சாமர்த்தியத்தைப் பயன் படுத்தி, உட்கார இடம் பிடித்தான். ''உஷ்... என்ன வெயில்...''

பஸ் மெல்ல நகர்ந்து, வேகமெடுத்தது.

''விலகு சார்'' என்று இடித்துக் கொண்டு நின்ற மனிதர்களை ஊடுருவி வந்தார் கண்டக்டர்; ''டிக்கட்... டிக்கட்....

பயணிகள் காசைக் கொடுத்து, பயணச் சீட்டை வாங்கினர். வேலையில் அவசரம் காட்டினார் கண்டக்டர். ஏதோ யோசனை யில் இருந்த கோபியின் தோளைத் தட்டி னார். ''சார், டிக்கட் வாங்கியாச்சா?''

''நெல்லிக்குப்பத்துக்கு ஒரு டிக்கட்'' என்றபடி, ஐந்து ரூபாயை எடுத்து நீட்டி னான் கோபி.

டிக்கட்டையும் மீதிச் சில்லறையாக மூன்று ரூபாயையும் கோபியின் கைகளில் வைத்து விட்டு, படிக்கட்டில் நின்றபடி வந்த ஒரு கிராமவாசியைத் திட்டுவதற்காக வேக மாக நகர்ந்தார் கண்டக்டர்.

பயணக் கட்டணம் ரூ. 1.90தான். ஆனால், கண்டக்டர் கோபியிடம் மீதி தந்ததோ வெறும் மூன்று ரூபாய்கள் மட் டுமே. அப்படியானால் அந்தப் பத்துக் காசுகள்?

'கண்டக்டர், இன்னும் பத்து காசு நீங்க தரணுமே?' — என வாய்வரை வந்துவிட்ட வார்த்தைகளைக் கோபியின் 'பிரிஸ்டிஜ்' தடுத்து நிறுத்தியது.

'நான் இறங்குவதற்குள் தந்து விடுவார்,' எனத் தனக்குள் சமாதானம் செய்தபடி, பொறுமையாக அமர்ந்திருந்தான் கோபி.

ஆனால், கடைசிவரை அவன் இருந்த பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை அந்தக் கண்டக்டர்.

கோபி இறங்க வேண்டிய இடம் வந்தது.

வேறுவழியின்றி, அமைதியாக — இறங் கினான்.

வீட்டை நோக்கி நடந்த போது, பையில் பிதுங்கிய மாம்பழங்கள் வழக்கத்தைவிட அதிகமாகக் கனப்பதாக உணர்ந்தான்.

பூந்தோட்டக் காவல்காரன்

எடுத்த எடுப்பில் போலீஸ் அதிகாரி லாரியை மடக்குவதும், ஆளுக்கு ஆள் 'அந்தோணி, அந்தோணி' என்று பயத்துடன் உச்சரிப்பதும் அடடே, கடைந்தெடுத்த மசாலா படத்திற்குள் பிரவேசிக்கப் போகிறோம் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி விடுகின்றன. அதைத் தொடர்ந்து விஜய்காந்த் ஆஜராகி மொத்து, மொத்து, மொத்து, என்று மொத்துகிறாரா... மசாலா படமேதான் என்று முடிவு செய்து விடுகிறோம்.

ஆனால் கதை திடீர் என்று ட்ராக் மாறுகிறது.

அந்த இளம் காதலர்கள் ஒலிம்பிக் ஓட்டமாய் ஓடி வருகிறார்கள், ஓடி வருகிறார்கள், அப்படி ஓடிவருகிறார்கள்.

காதலிக்குப் பணக்கார அண்ணன். காதலனோ ஏழை. அவர்கள் காதலைப் பணக்கார அண்ணன் சுத்தமாக வெட்டி விடும் முயற்சியில் ஈடுபடுவதால் அவர்கள் இருவரும் அண்ணனிடமிருந்து தப்பி ஓடி வருகிறார்களாம். வந்து, சாராயம் காய்ச்சும் புனிதமான உள்ளங் கொண்ட விஜய்காந்திடம் அபயம் புகுகிறார்கள்! விஜய்காந்த் அவர்களுக்கு அடைக்கலம் தந்து, அவர்கள் இருவரையும் சேர்த்து வைக்கும் முயற்சியில் தம் உயிரை விடுகிறார்.

இரண்டு ஃப்ளாஷ்பேக்குகள்.

வாணி — ஆனந்த் ஃப்ளாஷ்பேக் முடியாதா, முடியாதா என்று ஏங்க வைத்து விடுகிறது. படத்தில் இளமை இருக்க வேண்டும் என்று கருதி இந்த ஃப்ளாஷ்பேக்கை இவ்வளவு நீட்டிவிட்டார்கள் போலும்.

நிறைமாத கர்ப்பிணி ராதிகாவை மலேஷியா வாசுதேவன் கொட்டும் மழையில் தடியால் அடிக்கும் இடத்தில் டைரக்டர் புகுந்து விளையாடி இருக்கிறார். ராதிகாவின் பாத்திரம் ஏகப்பட்ட 'உச்' 'உச்'களைச் சம்பாதித்துக் கொள்கிறது.

இனிமேல் குழந்தையே பிறக்காது என்றவுடன் விஜய்காந்தும் — ராதிகாவும் பர்ணசாலை அமைத்துக் கொண்டு துறவற வாழ்க்கையை மேற்கொண்டிருக்கிறாற் போல் காட்டியிருப்பது சரி. ஆனால் விஜய்காந்த் சாராயம் காய்ச்சும் தொழிலில் ஈடுபட்டதற்குச் சொல்லும் காரணத்திற்கு மறுபெயர் — சப்பைக்கட்டு.

லிவிங்ஸ்டன் புதிதாக அறிமுகமாகி இருக்கும் வில்லன். கடைசி வரை இறுக்கமான முகபாவத்துடன் காரெக்டருக்கு ஏற்ற மாதிரியே நடித்திருக்கிறார் என்பது பாராட்டுக்குரியதுதான். ஆனால் லிவிங்ஸ்டன் காரெக்டருக்குச் சரியான வேலை கொடுக்காததால் இடி மின்னலை எல்லாம் ஜோராகக் கொட்டும் சென்னை ஆகாயம், மழை மட்டும் பெய்யாமல் ஏமாற்றி விடுவது போல் ஆகி விட்டது.


செந்தில் இருக்கிறார். நகைச்சுவை இல்லை. எஸ். எஸ். சந்திரன் அதை ஓரளவு நிவர்த்தி செய்கிறார். இன்றைய புகழ்பெற்ற ஓர் அரசியல் தலைவரை அவர் இமிடேட் செய்து பேசுவது பரவாயில்லை என்று சிரிக்க வைக்கிறது.

பாடல்கள் இரண்டு மூன்று மறுபடி மறுபடி கேட்கிறாற் போல் இருக்கின்றன.

மெஷின் கன் போல ஏதோ ஒரு புதுமையான கன்னை வைத்துக் கொண்டு விஜய்காந்த் குருவி சுடுகிறாற் போல் போலீஸ்காரர்களைச் சுடுவது எவ்வளவு ஃபெவிகால் போட்டு ஒட்டினாலும் கதையுடன் ஒட்டவே ஒட்டாது. விஜய்காந்த் ரசிகர்களை ஏமாற்றக் கூடாது என்பதற்காக செண்டிமெண்ட் கதையில் மசாலா சேர்க்கப் போக அது என்னடாவென்றால் —

ஆற்றிலே ஒரு கால், சேற்றிலே ஒரு கால் போல் தெரிகிறது.

— ஜெயமன்மதன்.



ஆகவே, செக்ஷன் 302படி...

"அட! சொல்லேன் ஷ்யாம், என்னதான் உன் திட்டம்?" என்றான் தீபக். ஐஸ் வாட்டர் நிரம்பிய பாட்டிலை மூடி கழற்றி விட்டுக் கவிழ்த்துக் கொண்டு கடைசிச் சொட்டு வரைக் குடித்தான்.

"தீபக், முதல்லயே சொல்லிட்டேன். இந்தத் தடவை செஞ்சிட்டு அப்புறம்தான் உன்கிட்டேச் சொல்லப் போறேன்" என்றான் ஷ்யாம் சிகரெட் சாம்பலைத் தட்டி விட்டு.

"ஷ்யாம், வெளில அதிகமாத் தெரியாமதான் நீங்க ஒருத்தரை ஒருத்தர் அவமானப் படுத்திக்கிட்டீங்க. நீ எழுதின லெட்டருக்கு மதிப்பு தந்து நிவிதா பதில் எழுதினா ஆறுதலா. உன்னை மன்னிச்சு நண்பனா நினைச்சு ரெண்டு பேருமே தனித்தனியா பத்திரிகை அனுப்பியிருக்காங்க. என்ன அர்த்தம்? அவங்க நீ நடந்துக்கிட்டதை எல்லாம் மறந்துட்டாங்க. நீயும் மறந்துடேன்."

"ஆரம்பிச்சிட்டியா? வேறப் பேசு தீபக், இது தீர்மானம் ஆயிடுச்சு."

"சரி. என்னதான் செய்யப் போறே? அதையாச்சும் சொல்லு. கல்யாணத்தை நிறுத்தப் போறியா?"

"நோ! கல்யாணம் நடந்தாகணும். வேற யாராவது நிறுத்த நினைச்சாக்கூட உயிரைக் கொடுத்தாவது முறியடிப்பேன். நிவிதாவும், வினோத் குமாரும் கல்யாணம் பண்ணிக் கணும் தீபக். அதுக்கப்புறம்தான் செண்ட்டிமெண்ட் வேலை செய்யும். அவளை என் பக்கம் சாய்க்கும்."

"நான் என்ன சொன்னாலும் கேட்டுக்கப் போறதில்லை. ஒண்ணு மட்டும் சொல்றேன். நிவிதாவை நீ மறுபடி புத்திசாலித்தனத்தால ஜெயிச்சி உன் ஈகோவை நிலை நாட்டிக்கிறதோட நிறுத்திக்கோ. கல்யாணத்துக்கப்புறமும் அவ உடம்பு மேல ஆசை வேணாம். ப்ளீஸ்..."

"தீபக், வர வர நீ ரொம்ப அட்வைஸ் பண்றேப்பா. கொஞ்சம் போய்ட்டு அப்புறம் வர்ரியா? நான் என் திட்டத்தைப் பத்தி நிறைய யோசிக்க வேண்டியிருக்கு."

"வெளில போடான்னு சொல்றே. போறேன். இனிமே நான் உனக்கு அட்வைஸ் பண்ண மாட்டேன்."

தீபக் வேகமாக எழுந்து, செருப்பணிந்து வெளியேறினான்.

அவன் போனதும் கதவைச் சாத்தி விட்டு வந்து ஸோபாவில் அமர்ந்த ஷ்யாம் டீப்பாய் அடியில் இருந்த தனது டைரியை எடுத்து, எண் பார்த்துக் கொண்டு போன் செய்தான்.

"ஹலோ, மிஸ்டர் வினோத்குமார் இருக்காரா?"

"ஸ்பீக்கிங்."

"சார், நான் ஷ்யாம். ஒரு தடவை கூட நாம் சந்திச்சதில்லை. பேசினதில்லை. ஆனா மிஸ் நிவிதா மூலமா என்னைப் பத்தி கன்னா பின்னான்னு நிறையக் கேள்விப் பட்டிருப்பீங்க. ரொம்ப மோசமா நடந்துக்கிட்டவன். ஆனா இப்போ சுத்தமா மாறிட்டேன். என்னை மதிச்சு நீங்களும், மிஸ் நிவிதாவும் கல்யாணப் பத்திரிகை அனுப்பியிருக்கிறதேகூட என்னைச் செருப்பால அடிச்ச மாதிரி இருக்கு சார். குறள் சொல்வாங்களே, இன்னா செய்தாரைன்னு... அது மாதிரி.. பெருந்தன்மையா மன்னிக்கிற பக்குவம் கொண்ட மிஸ் நிவிதாகிட்டே நான் கேவலமா..."

"ஹலோ மிஸ்டர் ஷ்யாம், எதுக்காக இப்போ அதெல்லாம்? விடுங்க. நீங்க உணர்ந்திட்டீங்கங்கிறதை நாங்க உணர்ந்துட்டோம். மறந்துடுங்க. கல்யாணத்துக்கு அவசியம் வாங்க."

"நிச்சயமா வர்றேன் சார். இங்கேர்ந்து திருச்சிக்கு காரெடுத்துக்கிட்டு வர்றேன் சார். ரிசப்ஷனுக்கும் வர்றேன் சார். நீங்க ரெண்டு பேரும் நல்லா இருக்கணும். பத்தாம் தேதி கல்யாணம் முடிச்சிக்கிட்டு மெட்ராஸுக்கு எப்போ புறப்படறீங்க?"

"அன்னைக்கு ராத்திரியே புறப்பட்டுடுவோம். மறுநாள் சாயங்காலம் இங்கே ரிசப்ஷன் இருக்கே..."

"ஆமாம். எதிலே புறப்படறீங்க?"

"ராக்ஃபோர்ட் எக்ஸ்பிரஸ்ல."

"டிக்கெட்ஸ் ரிசர்வ் பண்ணிட்டீங்களா? இல்லைன்னா சொல்லுங்க. திருச்சில நம்ம ஃப்ரெண்ட் மூலம் பண்ணித் தர்றேன்."

"ஏற்கெனவே பண்ணியாச்சுங்க. தாங்ஸ்"

பட்டுக்கோட்டை பிரபாகர்

''கல்யாணம் சம்பந்தமா நான் ஏதாச்சும் உதவி செய்யணும்னா சொல்லுங்க. கட்டாயம் செய்றேன். என் மனசுக்கு ஆறுதலா இருக்கும்.''

''பரவால்லைங்க. எதுவும் செய்ய வேணாம். வந்து வாழ்த்துங்க, போதும்.''

''வாழ்த்தறதுக்குத் தகுதி இல்லை சார்.''

''இந்த காம்ப்ளெக்சை முதல்ல ஒழிங்க. பி ரியர்ஃபுல். நடந்ததையே நினைக்காதிங்க. உணர்ந்துட்டீங்க. மன்னிப்பு கேட்டுட்டீங்க. விட்டுடுங்க. பழையபடி ஆயிடுங்க.''

''முயற்சி பண்ணிக்கிட்டுதான் இருக்கேன். முடியலை சார். ஓக்கே. கல்யாணத்திலே சந்திக்கலாம்'' என்று போனை வைத்தான் ஷ்யாம்.

தேதி 10.

இடம் — திருச்சி.

அந்த அம்மன் கோவில் மிகச் சிறியதாக இருந்தது. அழைக்கப்பட்டிருந்த உறவினர்களும் மிகக் குறைவான எண்ணிக்கையில் தான் இருந்தார்கள்.

வித்யா சாகர் வேஷ்டி கட்டியிருந்தான். முகம் முழுக்க உற்சாகம் ஏந்தி பரபரப்பாக அலைந்தான். நாயனக்காரரும், மேளக்காரரும் நின்று கொண்டே வாசித்தார்கள்.

வினோத் குமார் பட்டு வேஷ்டி, பட்டுச் சட்டை அணிந்து கொண்டு தனது அம்மா, அப்பா, தம்பி இவர்களோடு நின்று கொண்டு அம்மனுக்கு நடக்கும் அர்ச்சனையைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு எதிராகப் பட்டுச் சேலையில் நிவிதா தன் அம்மா மற்றும் நெருங்கிய உறவினர்களோடு நின்று கொண்டிருந்தாள்.

கோவிலின் வாசலில் தனது அம்பாஸிடர் காரை நிறுத்தி விட்டு இறங்கினான் ஷ்யாம். பூக்காகிதம் சுற்றின பரிசுப் பார்சலைக் கையில் எடுத்துக் கொண்டு ஷூவை கழற்றிப் போட்டு விட்டு அவசரமாக உள்ளே வந்தான்.

அவன் உள்ளே வருவதை முதலில் பார்த்தவள் நிவிதாதான். என்னதான் பத்திரிகை அனுப்பியிருந்தாலும், சென்னையிலேயே நடக்கும் ரிசப்ஷனுக்குத்தான் அவன் வருவான் என்று நினைத்திருந்தாள். இங்கே பார்த்ததில் ஒரு சின்ன அதிர்ச்சி.

அதை மறைத்துக் கொண்டு, ''வாங்க சார்'' என்றாள்.

வினோத் திரும்பிப் பார்த்து, ''அடடே. வாங்க...'' என்று கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''வர்ற வழியில டயர் பங்க்சர். மாத்திக்கிட்டு வந்தேன். முகூர்த்தம் முடிஞ்சிடக் கூடாதேன்னு நினைச்சிக்கிட்டே வந்தேன்''



என்றான் ஷ்யாம்.

வினோத் குமார் அவனைத் தன் பெற்றோர்களுக்கும், வித்யா சாகருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தான்.

ஷ்யாம் சுவாமியை வணங்கி விட்டுப் பயபக்தியோடு விபூதி எடுத்து நெற்றியில் வைத்துக்கொண்டான். நிவிதாவைப் பார்ப்பதையே தவிர்த்தான்.

அர்ச்சகர் சுவாமிக்கு அர்ச்சனை முடித்து, தீபாரதனை காட்டி அனைவர்க்கும் விபூதி, குங்குமம் வழங்கி விட்டு, சுவாமியின் பாதத்தில் வைக்கப்பட்டிருந்த பித்தளைத் தட்டை எடுத்துக் கொண்டு வந்தார்.

''பெரியவங்க எல்லாம் மாங்கல்யத்தை ஆசீர்வாதம் பண்ணுங்கோ.''

நிவிதா ஒருமுறை நிமிர்ந்து ஷ்யாமைப் பார்த்த போது, அவன் பவ்யமாகக் கைகளைக் கட்டிக்கொண்டு நின்றிருந்தான்.

எதற்காக மெனெக்கெட்டு சென்னையில் இருந்து திருச்சிக்குத் திருமணத்திற்காகவே வந்திருக்கிறான்? முகத்தில் இந்தத் தாடி, இந்தச் சோகம் இதெல்லாம் உண்மை தானா? இல்லை எல்லாம் அழுத்தமானப் பாசாங்கா?

சரியாகத் தாலி கட்டப் போகும் தருணத்தில் ஏதாவது குளறுபடி செய்வது இவன் உத்தேசமாக இருக்குமா?

அர்ச்சகர் ஆசீர்வாதம் முடிந்து திரும்பி, தட்டில் இருந்து மாங்கல்யத்தை எடுத்து வினோத் குமாரின் கைகளில் கொடுத்து, மந்திரங்களை ஆரம்பித்து, ''கெட்டி மேளம்'' என்று குரல் கொடுக்க...

லேசான குழப்பத்தோடுதான் கழுத்தை நீட்டினாள் நிவிதா. வினோத் குமார் தாலி கட்டினான்– இதழ்களில் தங்கின நிரந்தரப் புன்னகையுடன். அவன் கட்டி முடித்தவுடன் தான் நிம்மதி ஏற்பட்டது அவளுக்கு. மாலைகள் மாற்றிக் கொண்டார்கள்.

அட்சதைகள் தூவப்பட்டன. பெரியவர்களின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கினார்கள்.

ஷ்யாம் இருவரையும் பொதுவாகப் பார்த்து, ''கங்கிராஜுலேஷன்ஸ்'' என்றான். வினோத் குமாரின் கைகளைப் பற்றிக் குலுக்கி விட்டு, பரிசுப் பார்சலைத் தந்தான்.

வாங்கிக் கொண்ட வினோத் குமார், ''வீட்ல சாப்பாடு ஏற்பாடு பண்ணிருக்காங்க. அவசரப்பட்டு ஓடிடாதீங்க.'' என்றான்.

''சேச்சே. நீங்களே போகலாம்னு சொல்றப்போ போறேன். சரிதானே?''

லோக்கல் புகைப்படக்காரர் மாய்ந்து மாய்ந்து பணிச் செய்து கொண்டிருந்தார். ஷ்யாம் ஓர் ஓரமாக விரிக்கப்பட்டிருந்த ஜமுக்காளத்தில் அமர்ந்தான்.

வினோத் குமாரும், நிவிதாவும் கை கோர்த்துக் கொண்டு கோயிலின் பிராகரத்தைச் சுற்றி வர ஆரம்பித்தார்கள்.

வித்யா சாகர் ஒரு தட்டில் சாக்லேட்ஸ் நிரப்பி ஒவ்வொருவரிடமும் நீட்டிக் கொண்டிருந்தான். ஷ்யாமிடம் வந்தான், ''எடுத்துக்கங்க சார்.''

வித்யா சாகர் வினோத் குமாரிடம் வந்து நீட்டினான்.

எடுத்துக் கொண்டு, ''உங்கம்மா சம்மதிக் கலைன்னா எங்கயாச்சும் கடத்திக் கொண்டு போய் வச்சு கல்யாணம் பண்ணி வைப்பேன்னு லெட்டர் எழுதினீங்களாமே....'' என்று சிரித்தான்.

''பின்னே, உங்க ரெண்டு பேருக்காக நான் செய்ய மாட்டேனா?'' என்ற வித்யா சாகரின் தலையைச் செல்லமாகக் கலைத்தாள் நிவிதா.

''அக்கா, உங்க மேனேஜர் ரொம்ப நல்ல மூட்ல இருக்கார். இப்ப நீ என் வேலைக்காகப் பேசிப் பாரேன். நான் கொச்சின் லேர்ந்து வந்துடறேன்.''

''இரு. பறக்காதே. அவர் இப்ப மேனேஜர் இல்லை. வேலையை ராஜினாமா செஞ்சிட்டார்.''

''ஏன்?''

''ஏதோ சொந்தக் காரணம்.''

அரை மணி நேரத்தில் அவர்கள் நிவிதாவின் வீட்டிற்குப் புறப்பட்டார்கள். ஷ்யாம், வித்யா சாகரை அழைத்துக் கொண்டு முன் கூட்டியே தன் காரில் சென்று கைலி கட்டிக் கொண்டு இலை போட்டு, பரிமாறும் வேலைகளில் ஈடுபட்டான்.

பின்னர் வாடகைக் காரில் வந்து இறங்

விடுமுறை மலர் 1988

* கல்கி '88 விடுமுறை மலர் கண்டேன். புதுப் பொலிவுடன் எவ்வித குறையுமின்றிப் பூரணமாய் இருந்தது. கோகுலத்திற்கு என ஒதுக்கிய பக்கங்கள் சற்று குறைவுதான்! ஆனால் 'டிஸ்னி உலகம்' படங்கள், கட்டுரைகள், பி.சி. சொர்க்காரின் தந்திரக் காட்சி விளக்கம் 'ஹாம்' ரேடியோ பற்றிய செய்திகள் — இவைகள் இக்குறையினை ஈடு செய்தன! இம்மலர் விடுமுறையிலேயே வந்திருந்தால் நன்கு பொழுது போயிருக்கும்.

குத்தாலம், அபிதா.

* உலகின் பல இடங்களைப் பற்றிய அருமையான கட்டுரைகள் (அதிலும் ஆனந்தி, எம். எஸ். உதயமூர்த்தி ஆகியோரின் கட்டுரைகள் சூப்பர்ப்); கண்ணைக் கவரும் வண்ணப் படங்கள் (அனைத்தும் எக்ஸலண்ட்); குறுநாவல்கள்; முத்தான சிறுகதைகள்; 'கோகுலம்' சிறுவர் பக்கங்கள்... மை குட்னெஸ்! இவை அனைத்துமே ரூ. 10/– க்குண்டான 'கல்கி' விடுமுறை மலரிலா! மொத்தத்தில் 'கல்கி' விடுமுறை மலர் — எங்கள் மனத்தைக் 'கொள்ளையடித்த' விடுமுறை மலர்.

தர்மபுரி, வித்யா.



கின விநோத் குமார் வந்து, "என்ன சார் இது, இங்கே நிறைய பேர் இருக்காங்க. நீங்க உக்காருங்க" என்றான்.

"நோ. என்னைத் தடுக்காதீங்க. சந்தோஷமாச் செய்யறேன்" என்ற ஷ்யாமைப் பார்க்க நிவிதாவுக்குள் ஒரு பரிதாப உணர்ச்சி பிரதானமாக எழுந்தது.

எவ்வளவோ வற்புறுத்தியும் கேட்காமல், ஷ்யாம் எல்லோருக்கும் பரிமாறி விட்டு, கடைசி பந்தியில்தான் சாப்பிட்டான்.

"ராத்திரி ஒம்போது மணிக்குத்தானே ரயில்?"

"ஆமாம்!" என்றான் விநோத் குமார்.

"நான் தஞ்சாவூர் வரைக்கும் போக வேண்டியிருக்கு. போய்ட்டு வந்துடறேன். உங்களை எல்லாம் ரயில் ஏத்தி விட்டுட்டு அதுக்கப்புறம் நான் புறப்பட்டுப் போறேன்."

"எதுக்கு சிரமம்? அதெல்லாம் வேணாம் சார், நாங்க பார்த்துக்கறோம்."

"சிரமமா? சுகம் சார். வர்றேன். அவசியம் வர்றேன்."

காரை எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போனான் ஷ்யாம். தஞ்சாவூர் வந்தான். சிவகெங்கை பூங்காவில் ஒரு புல்வெளியில் சும்மா படுத்துக் கிடந்தான். இரண்டு மணி நேரம் கழித்துப் புறப்பட்டு, ஆறு மணிக்கெல்லாம் திருச்சியில் நிவிதா வீட்டின் முன் நிறுத்தினான்.

உள்ளே வந்தான். கூடத்தில் மிகச் சொற்பமானவர்களே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். விநோத் குமார், அவன் அப்பா, வித்யா சாகர், மேலும் சிலர்.

"நான் ஒரு யோசனை சொல்லட்டுமா மிஸ்டர் விநோத்?"

"சொல்லுங்க."

"தஞ்சாவூர்ல வேலை சீக்கிரமே ஆய்டுச்சி. நான் மெட்ராசுக்குப் புறப்படறேன். அஞ்சே மணி நேரத்தில போய்டலாம். பன்னிரண்டுக்கெல்லாம் மெட்ராஸ்ல இருக்கலாம். கார்ல நான் மட்டும்தான் போறேன். நீங்களும், உங்க மனைவியும் மட்டும் என்னோட கார்ல வரலாமே... உங்களுக்கும் சௌகரியம். எனக்கும் கம்பெனி."

"நல்ல ஐடியாவாச்சே..." என்றான் வித்யா சாகர். "நாங்க எல்லாம் ட்ரெய்ன்ல வந்துடறோம். நீங்க ரெண்டு பேரும் போகலாம் மச்சான். உங்க டிக்கெட்டை கேன்சல் பண்ணிடறோம்."

"ஒரு நிமிஷம்" என்று எழுந்தான் விநோத் குமார். "நிவிதாவை ஒரு வார்த்தை கேட்டுடறேன்" என்றான்.

"அவங்களுக்குச் சங்கடமா இருந்தா வேணாம்."

விநோத் குமார் உள் அறைக்கு வந்து பெண்கள் மத்தியில் பேசிக் கொண்டிருந்த நிவிதாவைத் தனியே அழைத்து விவரத்தைச் சொன்னான்.

"எதுக்குங்க? நாம எல்லாரோடவும் சேர்ந்தே போய்டலாமே...?"

"ட்ரெய்ன்ல பெர்த் கிடைக்கலை. சிட்டிங்தான். கார்ல சௌகரியமாப் போய்டலாம். கார் ஃப்ரீயாதான் போகுது. அஞ்சு மணி நேரம்தான். நீ எதையாச்சும் மனசுல வச்சிக்கிட்டு மறுக்காதே. அவன் மாறியாச்சு. கிடைக்கிற சந்தர்ப்பத்திலே எல்லாம் உதவணும்னு விரும்புறான். இதில ஒண்ணும் தப்பில்லை நிவிதா. போகலாம்."

"இல்லைங்க... வந்து..."

"எதுவும் சொல்லாதே. புறப்படு. ஏற்கெனவே எல்லாம் பேக் செஞ்சாச்சு. நம்ம லக்கேஜை மட்டும் எடுத்துக்கோ." என்று கூறி விட்டு, விநோத் குமார் முன் ஹாலுக்கு வந்து, "சரி, போகலாம் மிஸ்டர் ஷ்யாம்" என்றதும் —

வாரே வா! — என்று மனத்திற்குள் சொல்லிக் கொண்ட ஷ்யாம், தனது ப்ரீஃப் கேசிற்குள், பேண்ட் மடிப்புக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் துப்பாக்கியை லோட் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

ஷ்யாம் வற்புறுத்தியும் கேட்காமல், நாகரிகம் கருதி விநோத் குமார் முன் சீட்டில் அமர்ந்து கொள்ள, நிவிதா பின் சீட்டில் அமர்ந்து கொள்ள... ப்ரீஃப்கேசைத் தன் அருகிலேயே வைத்திருந்த ஷ்யாம், காரைக் கிளப்பிய போது நேரம் 6.25.

— அடுத்த இதழில் கொலை மற்றும் முற்றும்.

---

* கல்கி விடுமுறை மலர் கண்டோம். ஒலிம்பிக் பற்றிய விவரங்கள் அறிந்தோம். நாகாலாந்த் வண்ணப் படக் காட்சிகள் அழகுற இருந்தன. சுற்றுலா ஆலிஸ் நல்லதொரு பொழுது போக்கு அம்சமாக இருந்தது! தெங்குமரஹட்டா ரவியின் இயற்கை எழில் கண்ணைப் பறித்தது! ஆழ்கடலின் அற்புதங்கள் காணக் கிடைக்காத தங்கம். ஓவியர் தனுஷ்-வின் வல்லக்கோட்டை படங்கள் திவ்வியமாக இருந்தன. மணியன் தர்மலிங்கத்தின் ஜோக்ஸ் மனம் விட்டுச் சிரிக்கும் படியாக இருந்தன. கோடை மலர் தாமதமாக மலர்ந்ததுதான் கொஞ்சம் வருத்தம்.

சாத்தூர். எம். செல்லையா.

* தங்கள் விடுமுறை மலர் கண்டேன். அது ஒரு கலைப் பொக்கிஷம். ரூ. 10/— ல் இப்படி ஓர் அருமையான படைப்பைக் கல்கியால் மட்டுமே கொடுக்க முடியும். விடுமுறை மலரை வாங்காமல் போயிருந்தால் அது பெரிய இழப்பாகியிருக்கும். மலரைப் புரட்டி விட்டு நான் அடைந்த மகிழ்வைக் கடிதம் மூலம் தெரிவிக்க இயலாது. உங்கள் தொண்டு எப்போதும் தொடரட்டும்.

சென்னை — 17. கே. ராமச்சந்திரன்.

* "கல்கி விடுமுறை மலரைப்" பார்த்தேன். எதைப் பாராட்டுவது, எதை விடுவது என்றே தெரியவில்லை! சிறுகதைகள், நாவல்கள், ஓவியங்கள் அனைத்தும் அருமையாக இருந்தன. வண்ணப்படங்கள் அனைத்தும் கண்களுக்குக் குளிர்ச்சியையும், கட்டுரைகள் அனைத்தும் மனத்திற்கு நிறைவையும் கொடுத்தன. இந்த விடுமுறையில் எங்கும் சுற்றுலா போகவில்லையே என்ற குறையைப் போக்கியது கல்கி விடுமுறை மலர்.

தருமபுரி. சாந்தி கந்தசாமி.

அழகு வளர்ந்தது



ஆறு நிறைந்தது

நவநாகரீக ஆடை வகைகளை முந்தித் தரும் மாருதிக்கு ஆறு வயது நிறைந்து ஏழாம் ஆண்டு தொடங்குகின்றது - 1988 ஜூன் 30 அன்று. இந்த அழகின் வளர்ச்சியுடன் இணைந்து நாகரீக உலகில் வளர்ச்சி காண வாருங்கள்.

6 ஆண்டு நிறைவு விழாவையொட்டி ஒரு வார காலத்திற்கு வாடிக்கையாளர்களுக்கு அரிய பரிசுகளை அளித்து மகிழ்கிறோம்.

பரிசுப் பொருள்	வாங்கும் தொகை
வெள்ளிக் காசு	ரூ.350/-
வெள்ளிக் கோப்பை	ரூ.750/-
வெள்ளித் தம்ளர்	ரூ.1500/-
வெள்ளித் தட்டு	ரூ.3000/-
வெள்ளிக் குத்துவிளக்கு	ரூ.5000/-
வெள்ளி பன்னீர் சொம்பு	ரூ.10,000/-

MARUTI


688, அண்ணா சாலை, சென்னை - 600 006.

போன் : 860009, 868169, 861885

GRASIM
GWALIOR SUITING
IN A CLASS OF ITS OWN

A PRODUCT OF GRASIM INDUSTRIES LTD

SHOP OPEN ON SUNDAY


குதிரைப் பந்தயம் ஒழிக்கப் பட்ட நினைவாக..
குதிரைப் பந்தயம் ஆரம்பிக்கப்பட்ட நினைவாக..

டபுள் செஞ்சுரி போட்டு விட்டு நிற்கிறது சென்னைக் குதிரைப் பந்தயச் சங்கம். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், வரிகட்ட முடியாமல் சில காலம் நின்று போயிருந்தாலும், அப்புறம் சமாளித்துக் கொண்டு, தொடர்ந்து ஜாம் ஜாம் என்று நடந்து வந்தது குதிரைப் பந்தயம்.

1974—ம் வருடம் தி.மு.க. அரசு, ரேஸ் ஒழிப்புச் சட்டத்தைத் தமிழ்நாடு சட்டசபையில் நிறைவேற்றியது. ஆனால் அந்தச் சட்டத்தை அமுலாக்கும் முன்னர், சென்னைக் குதிரைப் பந்தயச் சங்கம், சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு ரிட் மனுவைத் தாக்கல் செய்தது. அதை விசாரித்த உயர்நீதி மன்றம், குதிரைப் பந்தயத்தைத் தடை செய்யும் அதிகாரம் அரசாங்கத்துக்கு உண்டு என்று சொல்லி விட்டது. அதன்படி 1974—ம் ஆண்டு மார்ச் மாதம் 31—ம் தேதியுடன் தமிழகத்தில் குதிரைப் பந்தயம் ஒழிக்கப்பட்டு விட்டதாய்ச் சொல்லி, அண்ணா மேம்பாலம் அருகே குதிரை வீரன் சிலையும் அதன் நினைவாய் வைக்கப்பட்டது.

இதற்கிடையில் ரேஸ் கிளப், சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்தது. அங்கே, வழக்கு விசாரணை முடிந்து, தீர்ப்பு வழங்கப்படும் வரை குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டத்துக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டார்கள். இதன் காரணமாக 1975 ஜூனில் மறுபடி குதிரைகள் ஓட ஆரம்பித்தன.

75—ல் தி.மு.க. ஆட்சி, டிஸ்மிஸ் ஆன பின் ஆட்சிக்கு வந்த அ.தி.மு.க. அரசு, குதிரைப் பந்தய ஒழிப்புச் சட்டத்தை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் போடப்பட்ட வழக்கைத் துரிதப்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. எனவே அந்த வழக்கில் மேற்கொண்டு விசாரணை நடத்தப்பட்டு, தீர்ப்பு வழங்கப்படவில்லை.

ஆனால் எம்.ஜி.ஆர். அரசு, 'ரேஸ் கிளப் நிர்வாகத்தில் ஊழல் மலிந்து விட்டது' என்று கூறி, ரேஸ் கிளப்பைக் கையகப்படுத்திக் கொண்டு விட்டது! ஐ.ஏ.எஸ். அதிகாரி ஒருவரை கிளப்பின் காப்பாளராய் (கஸ்டோடியன்) நியமித்தது. இதை எதிர்த்து, குதிரைப் பந்தய கிளப் உயர் நீதிமன்றத்தில் போட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. ரேஸ் கிளப், சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனது. அங்கே வழக்கு

குதிரைகள் ஓடும், குடி கெடுக்கும்!

ஏற்றுக் கொள்ளப்பட்டது.


சுப்ரீம் கோர்ட், நீதிபதி இஸ்மாயில் தலைமையில் ஒரு கமிட்டி நியமித்து, 'ரேஸ் தொடர்ந்து நடக்கலாமா? கூடாதா?' என முடிவு செய்யச் சொன்னது. 86—ம் வருடம் நீதிபதி இஸ்மாயில், ரேஸ் தொடர்ந்து நடக்கலாம் என்று முடிவு கூற, தமிழ்நாடு அரசு கோர்ட் மூலம் அதற்கு ஒரு 'ஸ்டே' வாங்கி விட்டது. அதனால் குதிரைகள் ஓடவில்லை.

இதெல்லாம் பழைய கதை.

ரேஸ் விஷயத்தில் புதிய திருப்பங்கள் சில சமீப காலத்தில் நடந்துள்ளன. தமிழகத்தில் ஜனாதிபதி ஆட்சி வந்ததும், ரேஸ் கிளப் புள்ளிகள், ஏதாவது செய்து, குதிரைப் பந்தயத்தை மறுபடி ஆரம்பிக்கும் முயற்சியில் இறங்கினர். ஆளுனர் அலெக்ஸாந்தர், ஊட்டி சென்றிருந்த போது, ரேஸ் கிளப்பின் முக்கிய புள்ளிகள் ஊட்டிக்குப் போய், முகாமிட்டு, கவர்னரைச் சந்தித்தனர். மறுபடி ரேஸ் ஆரம்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி கோரியதாயும், ஆளுனர், தாம் இவ்விஷயத்தில் ஏதும் செய்ய முடியாதென்றும், சுப்ரீம் கோர்ட்தான் முடிவு எடுக்க வேண்டும் என்றும் சொல்லி விட்டதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. மே மாதம் முப்பதாம் தேதியன்று ரேஸ் கிளப்காரர்கள், சுப்ரீம் கோர்ட்டில், 'ரேஸ் நடத்த அனுமதி வேண்டும்' என்று புதிதாய் ஒரு மனுவைக் கொடுக்க, இதனைப் பரிசீலித்த சுப்ரீம் கோர்ட்டின் விடுமுறைக் கால நீதிபதியான கே. என். சிங், 'நீதிபதி இஸ்மாயில் தலைமையிலான கமிட்டி கூடி, ரேஸ் நடத்தலாம் என்று முடிவு எடுத்தால், சுப்ரீம் கோர்ட்டுக்கு ஆட்சேபணை ஏதும் இல்லை' என்று கூறி விட்டார்.

அதன்படி நீதிபதி இஸ்மாயில் கமிட்டி கூடுவதற்கு ஜூன் மாதம் எட்டாம் தேதி நாள் குறிக்கப்பட்டது. கமிட்டி உறுப்பினர்கள் மொத்தம் பன்னிரண்டு பேர்; இதிலே அரசு சார்பு ஆறு பேர். ரேஸ் கிளப் சார்பு ஆறு பேர். முடிவு எப்படி இருக்குமோ என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டது.

இங்கேதான் சில எதிர்பாராத திருப்பங்கள் நிகழ்ந்தன. ஆளுனர் அலெக்ஸாந்



தரிடம், 'நீதிபதி இஸ்மாயில் கமிட்டியில் அரசு சார்பானவர்களின் நிலை என்ன?' என்று கேட்ட போது, அவர் ''ரேஸ் ஒழிப்பு என்பது, இதற்கு முன்பு ஆட்சியிலிருந்த மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் எடுத்த முடிவு. இதைப் பற்றி வேறு விதமான முடிவினை வேறு ஒரு வெகு ஜன அரசுதான் எடுக்கலாம். எனவே, ஜனாதிபதி ஆட்சி நடக்கும் இந்தச் சமயத்தில், அரசாங்கத்தின் நிலை, முந்தைய அரசு எடுத்த முடிவாகத் தான் இருக்கும்'' என்றார். அதன்படி பார்த்தால், அரசுத் தரப்பின் ஆறு பேரும், ரேஸ் ஆரம்பிப்பதை எதிர்த்துத்தான் வோட்டுப் போட்டிருக்க வேண்டும்.

ஆனால் நீதிபதி இஸ்மாயில் தலைமையிலான கமிட்டி கூட்டத்தில் நடந்தது வேறு! குதிரைப் பந்தயம் ஆரம்பிக்க ஆதரவாய் ஏழு வோட்டுக்களும், எதிராக ஐந்து வோட்டுக்களும் விழுந்தன! நீதிபதி இஸ்மாயிலும் குதிரைப் பந்தயம் ஆரம்பிக்கலாம் என்று முடிவு கூறி விட்டார். அதன்படி, ஆகஸ்டு மாதத்தில் குதிரைப் பந்தயம் ஆரம்பமாகிறது — ஊட்டியில்.


இங்கே முக்கியமான விஷயம் என்னவெனில், குதிரைப் பந்தயம் ஆரம்பிப்பதற்கு ஆதரவான ஏழு வோட்டுகளில், ரேஸ் கிளப் சார்பானவர்களின் ஆறு வோட்டுகள் தவிர ஏழாவது வோட்டைப் போட்டவர் தொழிலதிபர் எம்.ஏ. சிதம்பரம். இவர் சென்னைக் குதிரைப் பந்தயச் சங்கத்தின் மிக மிக முக்கியஸ்தரான எம்.ஏ.எம். ராமசாமியின் சித்தப்பா. அரசு சார்பில், கமிட்டியில் இடம் பெற்ற இவர், அரசாங்கம் எடுத்த முடிவுக்கு எதிராய், குதிரைப் பந்தயம் நடத்த ஆதரவாய் வோட்டுப் போட்டிருப்பது எந்த விதத்தில் சரி என்று சர்ச்சை கிளம்பியுள்ளது.

இதைத் தவிர, அரசுத் தரப்பில் நியமிக்கப்பட்டவர்களில், போலீஸ் உயர் அதிகாரிகள் ஸ்ரீபால், தேவாரம், சென்னை நகர ஷெரீப் குப்புசாமி செட்டியார், அரசு செயலர் வேங்கடரமணன் ஆகிய நான்கு பேரையும் நீதிபதி இஸ்மாயில் கமிட்டி கூட்டத்துக்குச் சில நாட்கள் முன்பாக அவசரம் அவசரமாய் நீக்கி விட்டுப் புதிதாய்ப் போலீஸ் அதிகாரிகள், எஸ். ரத்ன சபாபதி, நரேந்திரபால் சிங், அரசு துணை செயலர் ஜி. ராமகிருஷ்ணன், இணை செயலர் வி. சங்கரன் ஆகிய நான்கு பேரையும் நியமித்திருக்கிறார் ஆளுனர். 'எதற்காக மாற்றினார்?' என்ற கேள்வி ஒருபுறமிருக்க, 'நான்கு பேரை மாற்றிய கவர்னர் ரேஸ் கிளப் முக்கியஸ்தரான எம்.ஏ.எம். ராமசாமியின் சித்தப்பா எம்.ஏ. சிதம்பரத்தை மட்டும் ஏன் மாற்றாமல் விட்டார்? அதன் மூலம் அவர் ரேஸுக்கு ஆதரவாய் வோட்டளிக்க ஏன் வழி வகுத்தார்?' என்றும் காட்டமாய்க் கேட்கிறார் வெகுகாலமாய் ரேஸ் கிளப் அங்கத்தினராய் இருக்கும் ஒருவர். 'ரேஸ் ஆரம்பிக்கலாமா, வேண்டாமா? என்பதை இனி வரும் வெகு ஜன அரசு முடிவு செய்யட்டும் என்று கவர்னர் கூறியது வெறும் கண் துடைப்புத்தானா?' என்றும் வினா எழுப்புகிறார்.

இதைத் தவிர, இன்னும் ஒரு சிக்கலும் உள்ளது. ஆகஸ்டு மத்தியில் ஊட்டியில் ரேஸ் ஆரம்பமாகவிருக்கிறது. ரேஸ் நடக்க, ஊட்டி நகராட்சி மற்றும் போலீஸ் துறையின் அனுமதிகள் கட்டாயம் வேண்டும். அரசாங்கத்தின் அங்கமான போலீஸும், ஊட்டி நகராட்சியும் ரேஸுக்கு அனுமதி தருமானால், அது அரசின் கொள்கைக்கு விரோதமானதாக அல்லவோ ஆகும்! ஆக, 'படிப்பது ராமாயணம்; இடிப்பது பெருமாள் கோயில்' என்பது போல் தமிழக அரசு நடந்து கொள்வதாக அல்லவோ முடிவுக்கு வரவேண்டியிருக்கும்.

— நமது நிருபர்.

சுகாசினி-



திருமணத்துக்குப் பின் நடிப்பாரா?



சுகாசினியும், டைரக்டர் மணிரத்தினமும் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள். திருமண ரிசப்ஷன் ஆகஸ்ட் மாதம் இருபத்தேழாம் தேதி. அநேகமாய் அதற்கு முந்தைய தினம் நல்ல நேரமாய்ப் பார்த்துத் திருமணப் பதிவாளரை வீட்டிற்கே வரவழைத்து, ரிஜிஸ்தர் திருமணம் பண்ணிக்கொள்ள இருக்கிறார்கள். திருமண நிச்சயதார்த்தம் நடந்துவிட்டது.

இந்தத் திருமணத்தின் பின்னணித் தகவல்கள் ருசிகரமானவை.

இது காதல் கல்யாணமா? நிச்சயமாய் இல்லை. திருமண ஐடியா உதித்ததே, இரு தரப்புப் பெரியவர்களுக்கும்தான்.

ஜி. வி. என்கிற ஜி. வெங்கடேசுவரனின் முதல் தம்பி மணிரத்தினம். அடுத்த தம்பி சீனிவாசன். சீனிவாசனுக்கு முன்பே திருமணமாகிவிட்டது!

அதேபோல, சாருஹாசனின் முதல் பெண் நந்தினி ஒரு டாக்டர். அவர் தமது டாக்டர் கணவருடன் அமெரிக்காவில் இருக்கிறார். அடுத்தவர் சுகாசினி. மூன்றாவது பெண் சுபாஷிணிக்கு முன்பே திருமணமாகிவிட்டது!

ஜி. விக்கும், சாருஹாசனுக்கும் பன்னிரண்டு வருஷப் பழக்கம். கடந்த ஓராண்டு காலமாகவே-இந்த எண்ணம் இருவருக்கும் இருந்து வந்ததாம். பல தடவைகள் இது பற்றி ஆலோசித்தபின், சில வாரங்களுக்கு முன்பு ஒரே குறிப்பிட்ட நாளில் ஜி. வி. தமது தம்பியிடமும், சாருஹாசன் தமது பெண்ணிடமும் தங்கள் எண்ணத்தை வெளிப்படுத்தி, அவர்கள் இதுபற்றி யோசித்து முடிவு செய்ய அவகாசம் தந்தனர்.

இதற்கிடையில், ஜி. வி. அயல்நாடு போய்விட்டார். ஜி. வி. ஊர் திரும்பியவுடன், மணிரத்தினமும் சுகாசினியும், சுகாசினி வீட்டிலேயே சந்தித்துச் சில மணி நேரம் மனம் விட்டுப் பேசினார்கள். கடைசியில் இரண்டு பேரும் திருமணத்துக்குச் சம்மதம் தெரிவித்தனர்.

இதன் பிறகு சாருஹாசன் தம்பதி, சம்பிரதாய முறைப்படி, குடும்பத்தில் பெரியவர் என்கிற முறையில், ஜி. வி. யின் சித்தப்பாவைச் சந்தித்துப் பேசினார்கள். திருமணம் முடிவாகியது.

திருமணத்துக்குப் பின் சுகாசினி படங்களில் நடிப்பாரா?

'திருமணத்துக்குப் பிறகு இந்த விஷயம் பற்றி ஆலோசித்து, இருவருக்கும் நல்லது எதுவோ, அதன்படி முடிவு செய்வோம்' என்கிறார்கள் இருவரும்.

— எஸ். சந்திரமௌலி

புதுத் தெம்புடன்...

ஜோதிர்லதா கிரிஜா

சுப்புசாமிக்கு நெஞ்சு திக்திக்கென்று துடித்துக் கொண்டிருந்தது. இவ்வளவு பெரிய அலுவலகமாக அது இருக்கும் என்பது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை. பெரிய கம்பெனி என்று அவன் மாமா அவனுக்குத் தெரிவித்திருந்தது உண்மைதான். ஆனாலும், அது இத்தனை பெரியது என்பது அதைப் பார்த்த பிறகுதான் அவனுக்குத் தெரிந்தது. வெளியே சுற்றுச் சுவருக்குச் சற்றுத் தொலைவில் உள்ளடங்கி இருந்த கட்டடம், வெளியே இருந்து பார்த்தபோது அவ்வளவு பெரிதாகத் தெரியாவிட்டாலும், உள்ளே புகுந்து பார்த்த போது அவனை மெய்மறக்கப் பண்ணியது. அவ்வளவு பெரிய கட்டடத்தை அவன் திரைப்படங்களில்தான் பார்த்திருந்தான்.

எதிர்ப்பட்ட இளைஞர்கள், நடுத்தர வயதுக்காரர்கள் ஆகிய எல்லார் கால்களிலும் முகம் பார்த்துப் பொட்டிட்டுக் கொள்ள முடிகிற பளபளப்புடன் காலணிகள் ஒளிர்ந்து கொண்டிருந்தன. முந்திய நாள் வார் அறுந்து போய்த் தைக்கப்பட்ட, பாதி நைந்துவிட்ட செருப்புக்களைத் தான் அணிந்திருந்தது நினைவில் நெருடியது. கால்சராயின் கால்முனைகள் நைந்து, நுனியில் நூல் பிரிந்திருந்ததைத் தன்னையும் அறியாமல் அவன் குனிந்து பார்த்துக் கொண்டான். அங்கே பணிபுரிந்து கொண்டிருந்தவர்களுக்கு நடுவில்தான் ஒரு திருஷ்டிப் பரிகாரமாக இருக்கப் போவதாக எண்ணிப் பெரிதும் அவமானப்பட்டுப் போனான்.

எதிர்ப்பட்ட பியூன் ஒருவரோடு மோதிக் கொள்ள இருந்து, தவிர்த்து, "வணக்கங்க... நான் இன்றைக்குப் புதுசா வேலைக்குச் சேர்ந்திருக்கேன். ஆபீஸ் சூப்பரின்டென்டென்ட் என்னை எஸ்டாப்ளிஷ்மென்ட் செக்ஷன்ல சேரச் சொல்லி அனுப்பினாரு. அது எங்கே இருக்குது?" என்றான்.

பியூன் அவனைத் தானே அந்தப் பிரிவுக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டார். தலைமை எழுத்தர் அவனை ஏற இறங்க இரண்டு தரமும், ஓரத்து விழிகளால் சில தடவைகளும் பார்த்துவிட்டு அவனது இருக்கையைக் காட்டி அனந்தபத்மநாபன் என்பவரை அவனுக்கு வேலை கற்றுத் தரப் பணித்தார்.

புத்தம் புதிய அம்மேசைக்கு முன்னால் அமர்ந்த போது அவனுள் புகுந்து கொண்டிருந்த அவமான உணர்ச்சி மேலும் அதிகமாயிற்று.

அனந்தபத்மநாபனின் பார்வையும் ஒரு புழுவைப் பார்ப்பது போன்ற அலட்சியத்துடன் தன்மீது படிந்து மீண்டதாகத் தான் நினைத்தது உண்மையா பிரமையா என்று உறுதியாய் ஊகிக்க முடியாமல் அவன் தவித்தான்.

தலையைக் குனிந்து கொண்டு அனந்த பத்மநாபன் கொடுத்த வேலையைச் செய்யலானான். எல்லாரும் தன்னையே முறைத்துப் பார்ப்பதாக எண்ணினான். அந்தப் பார்வைகள் தன்னை அங்கீகரிக்கவில்லை என்பதைப் பற்றிய ஐயமே அவனுக்கு இல்லை. சற்று நேரத்தில் அந்தப் பிரிவில் இருந்த பத்து எழுத்தர்களுக்கும் அனந்த பத்மநாபனால் அவன் அறிமுகம் செய்விக்கப்பட்டான். முதல் மாதச் சம்பளம் வாங்கியதும் விருந்து கொடுக்க வேண்டும் என்ற வழக்கம் அவனுக்குச் சொல்லப்பட்டது. சிரிப்பற்ற முகத்துடன் அவன் தலையை ஆட்டினான். சொன்னவன் 'ஏண்டா சொன்னோம்' என்பது போல முகம் மாறிப் போனான். மாறிய அவனது முகத்தைப் பார்த்ததும் தான் தனது மிரட்சியை முகத்தில் காட்டி இருக்கலாகாது என்று உணர்ந்து அதற்காக வருத்தமுற்றான்.

ஒரு மாதத்துச் சம்பளம் என்பது எல்லாம் சேர்த்து மொத்தத் தொகை எவ்வளவு கிடைக்கும் என்பதை யாரையேனும் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பினான். அடிப்படைச் சம்பளம் என்று ஐந்நூறு போட்டிருந்தார்கள். பஞ்சப்படி, பட்டணப்படி, வீட்டு வாடகைப் படி போன்றவை வகைக்கு இவ்விவ்வளவு என்று உத்தரவில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அனந்தபத்மநாபனையே கேட்டுப் பார்த்தால் என்ன என்று எண்ணி அடிக்கடி நாவைப் புரட்ட முயன்று தோற்றுப் போய்ச் சும்மா இருந்துவிட்டான். மாலையில் வீட்டுக்குப் போனதும் போகாததுமாய் அவன் அம்மா, 'என்னடா? கையில மொத்தம் எவ்வளவு ரூபாய் கிடைக்கும்?' என்று நிச்சயம் கேட்பாள். தெரியாது என்றுதான் சொல்ல வேண்டி இருக்கும்.

பிற்பகலில் ஒரு மணியிலிருந்து இரண்டு மணி வரையில் சாப்பாட்டு நேரம் என்று அறிந்தான். அவன் அம்மா அலுமினிய டப்பா ஒன்றில் மோர்ச் சாதம் பிசைந்து கொடுத்து அனுப்பி இருந்தாள். தொட்டுக்



கொள்ள வடு மாங்காய் ஊறுகாய் வைத்திருப்பதாய்ச் சொல்லி இருந்தான். தாளிக்கக் கூடச் செய்யாத மொட்டை மோர்ச் சாதம் — அதிலும் அலுமினிய டப்பாவில்.

சரியாக ஒரு மணிக்குக் காத்துக் கொண்டிருந்தவர்கள் போல் எல்லாருமே டக்கென்று தத்தம் சிற்றுண்டிப் பொட்டலங்கள், டப்பாக்கள் சகிதம் எழுந்து கொண்டார்கள். அனந்த பத்மநாபன், ''நீங்க கொண்டு வந்திருக்கீங்களா, இல்லே வெளியே போகலாமா?'' என்று கேட்டார்.

''நீங்க?'' என்று அவன் கவனத்துடன் விசாரித்தான்.

''நான் வெளியே போறேன்.''

''எனக்கு என்னமோ பசியே இல்லே.''

''ஒண்ணும் எடுத்தாரல்லையா?''

''வெறும் மோருஞ்சாதம் குடுத்திருக்காங்க எங்கம்மா. எனக்குப் பசியே இல்லே சார்.'' — தான் உடன் கொண்டு வந்திருந்த அழுக்குப் பையை மேசைக்கு அடியில் கவனமாகச் செங்குத்தாக நிறுத்தி வைத்தது அவரது பார்வையில் பட்டே இருக்க வேண்டும் என்று அவன் நினைத்ததால் எதுவும் எடுத்து வரவில்லை என்று அவனால் பொய் சொல்ல இயலாது போனது.

ஏதோ கேட்க அவர் வாய்திறந்து பின் மூடிக் கொண்டதும் அவனுக்கு அப்பாடா என்றிருந்தது. எங்கே இருவரும் ஆளுக்குக் கொஞ்சமாக அந்த மோர்ச் சாதத்தைப் பங்கிட்டுச் சாப்பிடலாம் என்று அவர் சொல்லி விடுவாரோ என்று அவரின் உதடுகள் இலேசாய் அசைந்த அந்தக் கணத்துக்கும் குறைவான நேரத்துக்குள் பயந்து செத்துப் பிழைத்த அவனுக்கு அவர் ஒன்றும் சொல்லாதது பெரும் நிம்மதியை விளைவித்தது.

அவனைத் தவிர யாருமே அந்தப் பிரிவில் இல்லை. ஐந்து நிமிடங்கள் போல் கடிகாரத்தை வெறித்துப் பார்ப்பதும், [illegible] அவன், பின்னர் வயிற்றுக்குள் எழுந்து வீழ்ந்த பசி யலைகளைப் பொறுக்க மாட்டாமல், டப்பாவை மெல்ல வெளியே எடுத்து வைத்தான். யாரும் வந்து விடுமுன் சாப்பிட்டு முடிக்கும் அவசரத்துடன் அள்ளி அள்ளிப் போட்டுக் கொண்டு விழுங்கத் தொடங்கினான்.

ஐந்தே நிமிடங்களில் முடித்துக் கொண்டு டப்பாவை மூடினான். அதை வெளியே எடுத்துக் கொண்டு போய்க் கழுவும் போது யாராவது பார்த்து விடக் கூடும் என்பதால் அப்படியே எடுத்துப் பைக்குள் வைத்து விட எண்ணி அவன் மேசைக்கு அடியில் குனிந்து பையை வெளியே எடுத்த நேரத்தில் எதிர் இருக்கைக்காரர்கள் இருவரும் பிரிவுக்குள் நுழைந்தார்கள். தனது நசுங்கிய அலுமினிய டப்பாவின் மீது இருவருடைய பார்வைகளும் ஒருசேரப் படிந்ததைக் கவனித்து அவனுள் தாங்க முடியாத சிறுமை பெருகியது.

இருவரும் ஒருவரை ஒருவர் சாடையாகப் பார்த்துக் கொண்டது தனது அலுமினிய டப்பாவைப் பற்றியது என்பதாக நினைத்து மேலும் அவமானமுற்றான். மாலை வீடு சென்றதும் அம்மாவிடம் சொல்லி ஓர் எவர் சில்வர் சம்படம் வாங்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணினான். முதல் மாதச் சம்பளம் வாங்கியதும் நல்ல ரகத்தில் இரண்டு ஜதை கால்சராய்களும் சட்டைகளும் வாங்கிக் கொள்ள, வேண்டும் என்றும் நினைத்தான்.

எப்போது ஐந்து மணி அடிக்கும் என்று காத்துக் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. ஒவ்வொரு நிமிடமாக நகர்ந்து கடைசியில் ஒரு வழியாகக் கெடிகார முட்கள் ஐந்து மணியைத் தொட்டதும் எல்லாருமே புறப்பட ஆயத்தமாகி விட்டதைப் பார்த்து அவனும் தயாரானான். எல்லாரும் கிளர்

பிப் போன பிறகு தன் துணிப்பையைச் சுருட்டினாற் போல் எடுத்துக் கொண்டு அவனும் புறப்பட்டான்.

தெருக்கோடியில் தலை உயர்த்திய போது அவன் அம்மா வீட்டு வாசலில் நின்றது தெரிந்தது. அவன் அம்மா அது மாதிரி வாசலில் நின்றதே இல்லை. புதிதாய் வேலைக்குச் சென்றுள்ள மகனை எதிர் கொள்ள அம்மா வாசலுக்கு வந்து நிற்கிறாள் என்று நினைத்து அவன் மனசுக்குள் பொங்கிப் போனான். 'அம்மாவுக்கு எத்தனை எதிர்பார்ப்புக்கள் இருக்கும்? அடிக்கடி நோய்வாய்ப்படும் அப்பா. சம்பாதித்த போது ஒழுங்காக இல்லாத அப்பா. குடும்பத்தைச் சரியாகக் கவனிக்காத அப்பா. குதிரைகளின் வால்களில் சம்பளத்தின் பாதியைக் கட்டிக் காசை இழந்த அப்பா. அம்மா கேட்டபோதெல்லாம் அவளை அடித்து நொறுக்கிய அப்பா. குடும்பத்துக்கு மூத்த மகனாய்ப் பிறந்திருந்த அவனை மலை போல் நம்பி இருக்கும் அம்மா. அக்கா ஜானாவுக்கு அவனால்தான் விடிவு காலம் பிறக்கப் போகிறது என்று நம்பிக் கொண்டிருக்கும் அம்மா. அண்ணா வேலைக்கு போனால்தான் தன்னால் காலேஜில் படிப்பைத் தொடர முடியும் என்று ஆசைக் கனவு கண்டு கொண்டு பன்னிரண்டாம் வகுப்பில் அடி எடுத்து வைத்துள்ள தம்பி மணி... மேலும் எட்டு, ஆறு, நான்கு என்று முறையே மூன்று வகுப்புகளில் படித்துக் கொண்டிருக்கும் தங்கை, தம்பிகள்.

ஒரு வகையில் அவனுக்குப் பெருமையாக இருந்தது. அவன் மட்டும் கண்டிக்கா விட்டால் அவன் அம்மா இன்னமும் கூட அப்பாவிடம் அடிபடக்கூடும். அம்மாவைப் பூப்போல வைத்துக் கொள்ள வேண்டும்...

"மணி ஆறரை ஆயிடுத்தே. இன்னும் காணமேன்னு கவலையா இருந்தது. அதான் வாசலுக்கு வந்து நின்னேன்..." என்றபடி வாய் முழுவதும் சிரிப்பாக அவனிடம் பேசிக் கொண்டே அம்மா உள்ளே போனாள். அவர்கள் வீட்டில் இரண்டாம் வேளைக் காப்பி கிடையாது. காலைக் காப்பி கூட நீர்த்துத்தான் இருக்கும். இன்று அவன் அம்மா யாரிடமோ காப்பிப் பொடி கடன் வாங்கி அவனுக்காகக் காப்பி போட்டு வைத்திருந்தாள்.

முகம் கழுவிய பிறகு அப்பாடா என்று அவன் சுவரோரத்தில் சரிந்த போது அவன் அம்மா காப்பித் தம்ளரை அவன் கையில் கொடுத்தாள். காப்பியிலிருந்து புறப்பட்ட அதன் ஆவி அவன் நாசியைத் தாக்கி நாக்கை நனைத்தது. அது போன்ற மணம் காப்பிக்கு உண்டு என்பதை அவன் அறிந்ததே இல்லை. அவன் அம்மா அவனுக்கென்று தனிப்பட்ட அக்கறையுடன் தயாரித்திருந்தது புரிந்தது.

எதிரே அவன் அக்கா ஜானா நின்றிருந்தாள். தான் காப்பி குடித்து முடித்ததும் எல்லாரும் தன் அலுவலகத்தைப் பற்றி விசாரிப்பார்கள் என்பது புரிந்தது. சற்றுத் தள்ளி அவனுடைய இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தார்கள். மூவரின் கண்களும் தான் பற்றி இருந்த காப்பித் தம்ளரில் பதிந்திருந்ததை அவன் உடனே கண்டு கொண்டான்.

உள்ளுணர்வாய் விஷயம் புரிய, "ஏம்மா, காப்பி எனக்கு மட்டுந்தான் போட்டியா?" என்றான். வாயருகே கொண்டு சென்ற தம்ளர் கீழே இறங்கியது.

"ஆமாண்டா. களைச்சுப் போய் வருவியேன்னு உனக்கு மட்டும் போட்டேன்..."

'ஏம்மா? அப்பா மட்டும் ஒசத்தியோ? அவருக்கு மட்டும் தினமும் டிபன் பண்ணித் தறே? எங்களுக்குன்னா மட்டும் வெறும் மோர்ச் சாதமா?' என்று தான் பல தடவை கத்தியது ஞாபகத்தில் நெருடியது. பாதிச் சம்பளத்தில் அம்மா குடித்தனம் நடத்திக் கொண்டிருந்த நிலையில் அப்பா தமக்கு மட்டும் எண்ணெயைக் கொட்டிச் சிற்றுண்டி கேட்டது தப்புதான். அவன் பார்வை திரும்பியது. சுவரோரத்தில் அவன் அப்பா கண்மூடிப் படுத்திருந்தார். அவன் அவரோடு முகங்கொடுத்துப் பேசுவதை நிறுத்தி எத்தனையோ நாளாயிற்று.

'முட்டாளுக்கு மோருஞ்சாதம்னு சொல்லுவா. அதென்ன அப்பான்னா மட்டும் ஒசத்தி?' என்று அவர் வேலையிலிருந்து

"நம்ம கட்சிக்கு உடனே ஒரு கொள்கைப் பரப்புச் செயலாளர் நியமிச்சு ஆகணும்!"


"ஏன்?"

"அப்போதான் நம்ம கட்சிக்குன்னு கொள்கை இருக்குங்கிறதை மக்கள் நம்புவாங்க!"

— கீழை. அ. கதிர்வேல்.



ஜெயசக்தியின் 10வது ஆண்டு விழா!



புதிய குருப்புகள்	அன்பளிப்புகள்
ரூ. 125 x 40 = ரூ. 5,000/-	ரூ. 25 மதிப்புள்ள கூப்பன்
ரூ. 200 x 25 = ரூ. 5,000/-	ரூ. 25 மதிப்புள்ள கூப்பன்
ரூ. 250 x 40 = ரூ. 10,000/-	ரூ. 50 மதிப்புள்ள கூப்பன்
ரூ. 400 x 25 = ரூ. 10,000/-	ரூ. 50 மதிப்புள்ள கூப்பன்
ரூ. 625 x 40 = ரூ. 25,000/- ரூ. 1000 x 25 ரூ. 25,000/-	ரூ. 125 மதிப்புள்ள கூப்பன் அல்லது 15 கி வெள்ளி காசு
ரூ. 250 x 100 = ரூ. 25,000/-	ரூ.125 மதிப்புள்ள கூப்பன் அல்லது 15 கி. வெள்ளி காசு
ரூ. 2000 x 25 = ரூ. 50,000/-	ரூ. 250 மதிப்புள்ள கூப்பன் அல்லது ஈகிள் பிளாஸ்க்
ரூ. 1250 x 40 = ரூ. 50,000/-	ரூ. 250 மதிப்புள்ள கூப்பன் அல்லது ஈகிள் பிளாஸ்க்
ரூ. 500 x 100 = ரூ. 50,000/-	ரூ. 125 மதிப்புள்ள கூப்பன் அல்லது 15 கி வெள்ளி காசு
ரூ. 4000 x 25 = ரூ. 1,00,000/-	ரூ. 600 மதிப்புள்ள கூப்பன் அல்லது 2 கிராம் தங்க காசு
ரூ. 2500 x 40 = ரூ. 1,00,000/-	ரூ. 600 மதிப்புள்ள கூப்பன் அல்லது 2 கிராம் தங்க காசு
ரூ. 1000 x 100 = ரூ. 1,00,000/-	ரூ. 250 மதிப்புள்ள கூப்பன் அல்லது ஈகிள் பிளாஸ்க்

நுழைவு கட்டணம் தனி

ஜெயசக்தி மக்களின் சக்தியால் உருவான ஒரு ஸ்தாபனம். தனது பத்தாவது ஆண்டை வெகு விமரிசையாக மகிழ்ச்சியாக கொண்டாடுகிறது. ஒவ்வொரு சீட்டு சேரும் உறுப்பினர்களுக்கும் ஒரு உபயோகமான அன்பளிப்பு. சீட்டுகள் தங்கள் வசதிக் கேற்ப ரூ. 5000 முதல் ஒரு லட்சம் வரை.

இதுவரை தங்களுடைய பேராதரவில் திளைத்து வந்த எங்களை மேலும் ஊக்குவிக்க உங்களுக்காக எங்களுடைய புதிய சீட்டு குருப்புகள். தங்கள் வாழ்வு என்றும் மகிழ்ச்சிகரமாகவே இருக்கட்டும்.

கூப்பன்கள் சென்னை STOP & SHOP chain stores ltd.-ல் மாற்றத்தக்கவை

போனஸ்

- 50,000/- வரையிலான சீட்டு துகை பட்டு வாடா தனி நபர்களின் உத்திரவாதத்திலும் ஜாமீனிலும்
- அறிமுகப் படுத்துவோருக்கும் கவர்ச்சிகரமான பரிசுகள்
- குறித்த காலத்தில் பணம் செலுத்து வோருக்கு இறுதியில் 1% போனஸ்
- இந்த அன்பளிப்புகள் ஜுலை 1 முதல் ஒரு மாத காலத்திற்கு மட்டுமே.

எமது புதிய ஈரோடு கிளை:
19, பார்க் ரோடு,
(ஸ்டார் தியேட்டர் அருகில்)
ஈரோடு-638 003
போன்: 74577

நம்பிக்கை

ஜெயசக்தி

சிட்ஸ் & பைனான்ஸ் (பி) லிட்.

39, நடேசன் தெரு, முதல் மாடி, தி.நகர், சென்னை-600 017.

போன்: 442218

கிளைகள்

கோவை
666, ராஜ வீதி
போன்:- 34369

மதுரை
41, வடக்கு வெளி வீதி,
முதல் மாடி
போன்:- 37233.

பாண்டிச்சேரி
11, துய்ப்ளெக்ஸ் செட்டி தெரு
2வது மாடி
போன்: 26493/26471

திருச்சி
22, மதுரை ரோடு
முதல் மாடி
போன்:- 33397, 31376

பெங்களூர்
24/1-A, மார்கோசா ரோடு, (10-வது கிராஸ்)
மல்லேஸ்வரம்
போன்: 366971

தூத்துக்குடி
10 & 11, விக்டோரியா
சாலை

திருநெல்வேலி
18-K, சீனன் காம்ப்ளக்ஸ்,
S.N. ஹை ரோடு,
போன்:- 25785

பட்டுக்கோட்டை
121/B, தலையாரி தெரு,
போன்:- 453

வேலூர் (N.A)
கோல்டன் பில்டிங்
(தி.மு.க. அலுவலகம் பின்புறம்) பிளாட் 1613
மக்கான் தெரு,
போன்: 26508

திருவண்ணாமலை
14/A, ஆனைக்கட்டி தெரு
போன்:- 2483

கும்பகோணம்
12, மேல சாரங்கபாணி தெரு
போன்:- 22647

தஞ்சாவூர்
எண். 2 & 3 முதல் மாடி
ரஹாக் பில்டிங்
தி.எ. கனால் ரோடு
போன்:- 21626 22286.

ஜெயசக்தி - திட்டமிட்ட வளர்ச்சிக்கு

LOTUS/JCF/48/88/Tam

ஓய்வு பெற்றதற்கு முதல் நாள் கூடத்தான் கூப்பாடு போட்டது ஞாபகத்துக்கு வந்தது.

அவன் அம்மா சிரித்து விட்டு, "மோருஞ் சாதம்னா மட்டம் இல்லேடா. மோர் குடிச்சா புத்திசாலித்தனம் அதிகமாகுமோ என்னமோ? அதனாலதான் முட்டாளுக்கு மோர் சாதம்னு சொல்றான்னு நினைக்கிறேன்", என்று விளக்கம் கொடுத்தாள்.

'அப்படின்னா அப்பாவுக்கு தினமும் மோர் சாதம் குடுத்து அனுப்பும்மா. எங்க புத்திசாலித்தனத்துக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லே,' என்று தான் அம்மாவை மடக்கியதும் நினைவில் தோன்றியது...

"என்னடா யோசனை? காப்பி ஆறிடப் போறது..."

"இந்தக் காப்பியை நாம் எல்லாருமா ஆளுக்கு ஒரு வாயா குடிக்கலாம்மா."

"நன்னாருக்குடா. அலுத்துப் போய் வந்திருக்கே. இப்ப சத்தியா உனக்கு மட்டுந்தான் ரெண்டாம் வேளை காப்பி தர முடியும். சம்பளம் வரட்டும். எல்லாருக்கும் குடுத்து ஜமாய்ச்சுடலாம்... அது கூட ஜானாவுக்குக் கல்யாணம் ஆனதுக்கு அப்புறந்தான்னு தோன்றது. சரி, சரி, நீ குடி... சம்பளம்னதும் ஞாபகம் வருது. எம்புட்டுடா கிடைக்கும்?"

"தெரியல்லேம்மா. தோராயமா ஆயிரம் வரும்னு நினைக்கிறேன்."

"உங்கப்பா என் கையில் குடுத்திண்டிருந்த ஐந்நூறு ரூபாயிலேயே குடித்தனம் நடத்தினவளாச்சே நான்?... சரி, சரி. குடி."

"இல்லேம்மா. இன்னும் கொஞ்சம் பால் சேர்த்து ஆளுக்கு ஒரு வாயாக் குடுத்துடு..." என்று அவன் கண்டிப்பாகத் தம்ளரைத் தரையில் வைத்து விட்டான்.

ஜானா, "கடைக்குப் போகணும்னு சொன்னியேம்மா?" என்று அம்மாவுக்கு ஞாபகப்படுத்தினாள்.

"நீங்க எழுதியிருக்கிற இந்த ஜோக் ஏற்கனவே வரிக்கு வரி மாறாமல் வேறொரு பத்திரிகையில் வந்துடுச்சு சார்...!"

"இருக்காதே... கடைசியில் பாருங்க.. பேரை மாத்தி என்னோட பேரைப் போட்டிருக்கேனே...?"

— சுரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.





இவர்: "என்னங்க இது தலைவர் மண மக்களை வாழ்த்திப் பேசாம, நாசமாப் போயிடுவீங்க, உருப்படமாட்டீங்க, நீங்க பூண்டோட அழியற நேரம் வந்திருச்சு அப்படியெல்லாம் பேசிக்கிட்டிருக்காரே!"

அவர்: "இப்ப அவரோட அரசியல் எதிரிகளை திட்டி பேசிக்கிட்டிருக்கார்; கடைசியிலே 'வாழ்க மணமக்கள்'ன்னு ரெண்டு வார்த்தை சொல்லிட்டு பேச்சை முடிச்சுக்குவார்."

— இரா. சம்பத்குமார்.

"ஆமா. இந்தா ஒரு ரூபா. அதுக்கு என்ன காய் கிடைக்குமோ வாங்கிண்டு வா."


"அதுக்கு என்னம்மா கிடைக்கும்? இஞ்சி பச்சை மிளகாய்தான் கிடைக்கும்," என்று ஜானா சிரித்தாள்.

அவன் தலை உயர்த்தி அவளைப் பார்த்தான். சாயம் போய்க் கழுத்துப்பட்டியில் தையல் பிரிந்து நைந்து கிடந்த இரவிக்கை. கரையில் ஆங்காங்கு தைக்கப்பட்ட, மலிவான, மிகப் பழசான வாயில் புடைவை. கழுத்தில் சிவப்புப் பாசிமணி மாலை. கைகளில் சாயம் போன இரப்பர் வளையல்கள். படித்து விட்டு வேலைக்குப் போகா விட்டாலும் அவளும்தான் தினுசு தினுசாக உடுத்திக் கொண்டு பட்டாம் பூச்சிகளாய் வளைய வரும் எத்தனையோ பெண்களைத் தெருவில் சந்திக்கிறாள். அவர்களைப் பார்க்கும் போது அவளுக்கும்தான் அவமானமாக இருக்கும்.

ஜானா பையுடன் புறப்பட்டாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். முதுகில் ஒரு சின்னக் கிழிசல் வழியாக அவளது மேனி தெரிய, "ஜானா, ரவிக்கையில கிழிசல், முதுகைப் போர்த்திண்டு போ," என்று அவன் குரல் கொடுத்தான். அவன் கண்கள் கலங்கி இருந்தன.

"அம்மா, முதல் மாசச் சம்பளம் வாங்கினதும் ஜானாவுக்கு ஒரு புதுப்புடைவை, ரவிக்கை... எல்லாருக்குமே ஆளுக்கு ஒவ்வொரு சட்டையாவது வாங்கிடணும்..." என்றான். அம்மா பெருமை வழிந்த கண்களால் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

.....மறுநாள் அலுவலகத்தில் ஒரு புதிய தெம்புடன் அவன் தனது நசுங்கிய அலுமினிய சம்புடத்தை ஒரு மணிக்கு எடுத்து வைத்துக் கொண்டு துணிவுடன் மோர்ச் சாதம் சாப்பிடத் தொடங்கினான்.



டீ உலகில் உயர் வட்டம்

சக்கரா டீ



உயர் வகுப்பினர் பாராட்டும்
தேநீர்ச் செல்வம் சக்கரா டீ.
சொகுசான சுவைமண, திட
குணங்களின் முழுமை
வட்டம். தேநீரிலே
சுக போகத்தின் உயர்
வட்டம்: சக்கரா டீ.

உயர் வட்ட ரசிகர்களுக்கு
உயர் வளமுள்ள தேயிலை

சக்கரா டீ

டாட்டா டீ லிமிடெட்
உலகிலேயே மிகப்பெரிய டீ கம்பெனி.

daCunha/TT/246/87/TM

12

பால்குண்டு என்கிற ரத்தினவேலு அலங்கார் ஹேர் டிரஸ்ஸிங் சலூனுக்குள் நுழைந்தவுடன் கத்தரிக்கோல் போட்டுக் கொண்டிருந்த பையன் ஒரு சீப்பை எடுத்து அதை பிரஷ்ஷால் சுத்தம் பண்ணி அவனிடம் கொடுக்க, பால்குண்டு தலைசீவிக் கொண்டான். கண்ணாடியில் தன்னைப் பார்த்தபடியே, ''ஏன் குரு ஏகிரா'' என்று விசாரித்தான். பால்குண்டுவுக்குப் பத்தொன்பது வயசு. படிப்படியாகத் தலை முடி வளர்த்திருந்தான். வருஷத்துக்கு இரண்டு மூன்று தடவைதான் சீவுவான் போல. அரைக்கைச் சட்டையைக் கால்கையாகச் சுருட்டின இடத்தில் தாயத்து கோத்த முறுக்குக் கயிறு அணிந்திருந்தான். தேகப் பயிற்சிகள் செய்ததால் வலுவாக இருந்த தசைகளை ஒரு முறை தடவிக் கொண்டு, ''பாபு வந்தானா?'' என்று கேட்டான்.

''இல்லைங்க.''

''மகன் வர்றதாச் சொல்லிட்டு எங்கேடா போயிட்டான்? பாபு வந்தா சொல்லு, பால்குண்டு தேடிக்கிட்டிருந்தான்னு சொல்லு!''

''சரி குரு.''

பால்குண்டு அனுமந்தநகரின் சுறுசுறுப்பான தெருவில் இறங்கி, நடந்தபோது எதிரே பாபு தென்பட்டான். ''ஏண்டா லேட்டு?'' என்று வினவினான்.

''வண்டியை விட்டே வர நேரமாயிடுச்சு, குரு!''

''ராத்திரி மறுபடி போவோமா?''

''வேண்டாம் குரு. போலீஸ்காரங்க நம்மை விசாரிக்கக் கூப்பிட்டுக்கிட்டு இருக்காங்க. மேனேஜரு சொன்னாரு! தமிழ் பேசறவங்க அத்தனை பேத்தையும் வரச் சொல்லிப் பட்டியல் கேட்டிருக்காங்களாம்?''

''அப்படியா?''

''அய்யோ, உனக்கு அக்கா தங்கச்சி இல்லையாய்யா?''

''இல்லை!''

''கொல்லாதே! கொல்லாதே!''

''கொல்றதா கண்ணு உங்கிட்ட என்ன இருக்குன்னு காட்டிர்றியா?''

''குரு! வேண்டாம் குரு!''

''கம்மார்றா ......! மவனே!''

''**எ**ன்ன யோசிக்கிறே?'' என்றான் பால்குண்டு.

பாபு ''ஒண்ணுமில்லை'' என்றான்.

''ராத்திரி வண்டி எடுத்துட்டு வா! இந்த முறை இளவயசா பார்க்கலாம்!''

''வேண்டாம் குரு! கொஞ்ச நாளைக்கு போலீஸ் விசாரணை முடியற வரைக்கும் வண்டியே எடுக்காம இருந்தா நல்லது!''

''பயப்படறியா பாபு ஆறிலயும் சாவு நூறிலயும் சாவு! தெரியுமில்லை?''

பாபுவைப் பால்குண்டு கன்னத்தில் தட்டி, ''என்ன ஆளு நீ! போய்ப் பைசா கொண்டு வா.'' என்றான்.



''பைசா இல்லை பாபு!''

''திருடிட்டு வா.''

''எங்கேன்னு திருடுவேன்? முதலாளிக்கே நூற்றைம்பது ரூபா பாக்கி!''

''ஒரு நாள்ள சம்பாதிச்சுரலாமில்லை, அப்புறம் என்னா நியூஸ் போட்டிருக்கான் நம்மைப் பத்தி பேப்பர்ல?

''கன்னடா பேப்பர்ல நிறைய வந்திருக்குதாம்.''

''யாராம் அவ?''

இருள் வரும் நேரம்

''ப்ரொபஸர் பெண்டாட்டியைப் போய்ப் புடிச்சோம் குரு.''

''அப்படியா? அதான் இங்கிலீசுல கத்திச்சாமா? சொல்லுரா எங்கெங்கெல்லாம் தொட்ட?''

பாபு மௌனமாக இருந்தான்.

''கத்தக் கத்த ஒரு மாதிரி வெறி ஏறிச்சில்லை? கொடுக்கிற மாலை உறிஞ்சிப் பாரு! அதுக்கப்புறம்இன்னும்வேகம்பொறப்படும், ரூபா மறந்துராதே!''

சுஜாதா

பாபு நாற்பத்து மூன்றாம் நம்பர் பிடித்து மைசூர் பாங்க் சர்க்கிள் சிக்னலில் இறங்கிக் கொண்டான். அவின்யூ ரோடில் நடந்து சந்தில் நுழைந்து மற்றொரு சந்தில் நுழைந்தான். புடைவைகளுக்குச் சாயம் போட்டுக் காய வைத்திருந்தார்கள். ஷெட்டில் பெண்களுக்கு உள் பாடிகளும், பையன்களுக்குப் பட்டா பட்டி டிராயர்களும் தயாரிக்கும் தொழிற்சாலையைக் கடந்து மாடிப்படி ஏறிச் சென்றான். அறைக் கதவு திறந்திருந்தது. பாபு உள்ளே

நுழைய அவன் தாய் மல்லாந்து படுத்துக் கொஞ்சம் வாய் திறந்து தூங்கிக் கொண்டிருந்தாள். அலமாரியில் பவுடர் டப்பாவுக்குள் சாமர்த்தியம் போல அவள் அடைத்து வைத்திருந்ததைத் திறந்து இரண்டு பத்து ரூபாய் எடுத்துக் கொண்ட போது அம்மா சட்டென்று எழுந்து அவன் கையைப் பிடித்தாள்., "ராஸ்கல்! திரியும் திருடத் துவங்கிட்டியா?"

"விடு விடு" என்று முரட்டுத்தனமாக அவளை நீக்கப் பார்த்தான். அம்மா விடாமல் அவன் கன்னத்தில் பட்டென்று அறைந்தாள்.

"உருப்படுவியா? என்னா கஷ்டப்பட்டுக் கண் முழிச்சுச் சம்பாதிச்சுச் சேத்து வெச்சா சூறையாடுவியா?" என்றாள்.

"இல்லை. அவசியமா செலவு இருக்குது. ஸ்பார்க் பிளக்கு வாங்கணும்!"

"பொய்யி! அந்தப் பாழாப் போற பால் குண்டு கூட சுத்தறதுக்கு! அவன் எங்கே அவன்?" என்று சன்னல் வழியாக எட்டிப் பார்த்தாள். அம்மாவைப் பார்க்க வெறுப்பாக இருந்தது. அவள் கன்னத்தில் பாளமாக இருந்த பருக்களை மறைக்கப் பலமாக பவுடர் அப்பியிருந்தாள். நெற்றிக்குப் பொட்டும் மார்பை மறைப்பதில் அலட்சியமும், காலுக்கு இந்த வயதில் கொலுசும் அவள் 'கஷ்டப்பட்டுக் கண் விழித்துச் சம்பாதிப்பது எப்படி?' என்பதை விளக்கின.

"பணம் வேணும்னா கேட்டு வாங்கிக்க."

"தா."

"எதுக்கு?"

"சொன்னேனில்ல?"

"யம்மாடி! லட்சுமி கண்ணு!"

"வாங்க பெரியப்பா!"

பெரியப்பா என்றது பாபுவின் தாய்க்குப் பெரியப்பாவும் இல்லை, சித்தப்பாவும் இல்லை. சீனிவாசலு. பாபுவைப் பார்த்து, "நல்லாருக்கியா பாபு? ரிக்ஷா எல்லாம் ஓடுதா?" என்றார்.

"உன் தலை" என்றான். அதை மதிக்காமல் சிரித்து, பாபுவின் தாயைப் பார்த்து, "வர்றியா?" என்றான்.

"இந்த வேளையிலயா?"

"இதுக்கெல்லாம் வேளையா? பார்ட்டி ஏழரை மணி பஸ்ஸைப் பிடிச்சு சிமோகா போவுதாம். அதான் அவசரம்."

"இப்பதான் தூங்கி எந்திரிச்சேன் பெரியப்பா!"

"சரி, காத்திருக்கேன்" என்று பெரியப்பா அறையிலிருந்து 'தினச்சுடரை' எடுத்து வாசிக்கத் துவங்கினார்.

"ஏம்பா, உம் மாதிரி ஆட்டோக்காரன் தான் கற்பழிப்பில சம்பந்தப்பட்டிருக்கிறதா போட்டிருக்கு?"

"உன் தலை!"

"பெரியப்பாகிட்டே அப்படியெல்லாம் பேசாதே பாபு!"

பாபுவின் தாய் அவன் முன்னால் தாவணியை அகற்றி நீக்கி உதறிவிட்டு, கருநீல நைலான் சாரிக்கு மாற்றிக் கொண்டு முகங்கழுவிக் கண்ணுக்கு மை தீட்டிக் கொண்டாள்.

"இதுக்கெல்லாம் அதிக நேரமாக்காதே லட்சுமி! பார்ட்டிக்கு இதையெல்லாம் பார்க்க நேரமில்லை!"

"எங்கே போகணும்?"

"வெங்கடேசுவரா லாட்ஜ் தான்!"

பாபுவின் அம்மா புறப்படும் போது, "பாபு, நீ பொறப்படறப்ப கதவைப் பூட்டிக்கிட்டுச் சாவியைத் தையக்காரங்கிட்ட கொடுத்துடு. அடுப்பில ரெண்டு தோசை வெச்சிருக்கேன். டிகாக்ஷன் போட்டிருக்கேன். பாக்கெட் பாலு வந்ததும் காப்பி போட்டுச் சாப்பிடு. வந்துடுவேன். ராத்திரி டூட்டிக்குப் போவியா?"

"போவலை."

"ஏன், உடம்பு ஏதாவது சரியில்லையா?"

"இல்லை... ஆமாம்..."

அம்மா ஆட்டோவில் ஏறிக் கொள்வதைப் பார்த்தான் பாபு. உள்ளே வந்து கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான். கன்னத்தில் காயம் இன்னமும் வலித்தது.

"அய்யோ, அய்யோ, அய்யோ."

"பாரு. கூப்பாடு போட்டுப் பயனே இல்லை. இன்னும் கத்து, கத்து, சொல்றேன்!"

"சும்மாயிருக்கே, வா, வந்து புடி. ரெண்டு கையையும் வச்சு அழுத்திட்டு."

"யாரோ வர்றாங்க!"

"கவலையே படாதே. ரத்தினவேலு இதுக்கெல்லாம் அஞ்ச மாட்டான்!"

பனியனைக் கழற்றிக் கழுத்தில் சுற்றிக் கொண்டு மூச்சுத் திணறுவதை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருக்கையில் தன் கையால் அவன் கைகளை அழுத்திப் பிடித்துக் கொண்டிருக்கையில் ரத்தினவேலுவின் பெரிய மூச்சுக் கேட்கையில் அந்தப் பெண்ணின் கரங்கள் மெதுவாக இறங்கி லேசான முனகலும் செத்துப் போக,

"ஏய், கொன்னுட்டியா?"

"இல்லைடா, தொட்டுப் பாரு மூச்சு கேக்குது. பாரு! தொட்டுப் பாரு! படபடன்னு இதயம் அடிக்கலை...? இப்ப உம்முறை!"

"வேண்டாம் குரு."

"ஏண்டா?"

"ஆய்டிச்சில்லை, வேண்டாம்! எனக்கு வேண்டியது கிடைச்சிருச்சு!"

பாபு தன் அலமாரியில் போய்க் குடை, இஸ்திரிப் பெட்டி, நின்று போன கடிகாரம், இவைகளுக்கு இடையில் இருந்த அந்தச் சின்னப் பெட்டியை எடுத்துத் திறந்து பார்த்தான். ஒரு சிறிய தங்க மோதிரம் அதைப் பத்திரப்படுத்திக் கொண்டான். அதில் 'ஏ' என்று எழுதியிருந்தது!





விடை: 9.6.79—ல் தஞ்சாவூர் அ.இ. அ.தி.மு.க. பொதுக் கூட்டத்தில் எம்.ஜி.ஆர். பேசியது.

ஆதாரம்: 10.6.79 தினமணி மதுரைப் பதிப்பு.

அனுப்பியது: செங்கோட்டை லெ. தங்கவேலு.

''எப்பலேர்ந்து காணோம்ங்க மோதிரத்தை?'' என்றார் தர்மராஜன்.

''சம்பவம் நடந்த தினத்திலிருந்து.''

''தங்கமா?''

''ஆமாங்க. ஒண்ணரை பவுன் இருக்கும்!''

''அம்ரு. ஆர் யூ ஷ்யூர்? நீ அதை அன்னைக்குப் போட்டுக்கிட்டு வந்தியா?''

''அன்னைக்கு நெறையவே நகை போட்டிருந்தேனில்லை! நீங்க கவனிச்சிருக்க மாட்டீங்க.''

''அதில் ஏதாவது எழுதியிருந்ததா?''

''எனாமல்ல 'ஏ'ன்னு எழுதியிருக்கும்!''

''அன்னைக்கு பரேடுல பார்த்தீங்களே, அவங்கள்ள அவன் இல்லைன்னு தீர்மானமாச் சொல்லிட முடியும்?''

''இன்ஸ்பெக்டர்! எத்தனை முறை நீங்க இந்தக் கேள்வியைக் கேட்பீங்க?''

''ப்ரொபஸர் ஸார், கொஞ்சம் பொறுமையா இருந்தீங்கன்னா குற்றவாளியைக் கண்டுபிடிக்க...''

''வீ டோண்ட் வாண்ட் தட்! குற்றவாளியைக் கண்டுபிடிக்கணும்ங்கிற அவசியமே இல்லை எங்களுக்கு!''

''உங்களுக்கு அவசியமில்லை எங்களுக்கு உண்டு ஸார்! மிஸஸ் ராம்பிரகாஷ்.''

''எனஃப் இஸ் எனஃப். அம்ரு உள்ளே போ!''

தர்மராஜன் வருத்தப்படாமல்: ''அப்ப அடுத்தது எப்ப வர்றது?''

''வராதீங்க. போங்க..

''ரொம்பச் சிக்கலாக்கறீங்க கேஸை நீங்க! என்னால உங்க மனைவியை கோர்ட் விட்னஸா அழைக்க முடியும்!''

''என்ன வேணா செய்துக்கங்க. இப்ப அவளை ஆளை விடுங்க. போதும்!''

தர்மராஜன் கொஞ்ச நேரம் அவரைப் பார்த்துவிட்டு, ''எனிவே மிஸஸ் ராம்பிரகாஷ். நான் உங்களை அதிகம் தொந்தரவு பண்ண விரும்பலை. மோதிரம் காணாமப் போனது அந்தத் தேதியிலதான்னு தீர்மானமா சொல்ல முடிஞ்சா நல்லது'' என்றார்.

''வேதாசலம், இன்ஸ்பெக்டர், கொஞ்சம் தனியா வர்றீங்களா...?''

''அப்புறம் சந்திக்கலாம், வர்றேன்'' என்று புறப்பட்டார்.

''ஏன் போலீஸ்காரங்களை ரெண்டு பேரும் சேர்ந்து விரட்டிட்டீங்க?'' என்றாள் அம்ரு அவர் போனதும். ''எனக்கு என்ன செய்யறதுன்னே புரியலை அம்ரு. அதுதான் உண்மை... நீ போலீஸ்கூட ஒத்துழைக்க விரும்பறியா?''

''ஆமாம்!''

''எதுக்கு?''

''எனக்கு அவனை வெளிச்சத்தில் பார்க்கறதுக்கு ஆசையா இருக்கு!''

வேதாசலத்தைப் பார்த்து விரக்தியுடன் சிரித்தார் ப்ரொபஸர். ''அம்ரு. இதுதான் காரணமா? அவனை நீ பார்க்க விரும்பறதுதான் காரணமா? தண்டனை ஏதும் வேண்டாமா?''

''வேண்டாம், பார்த்தா போதும்.''

''நட்கேஸ்'' என்றார்.

''பார்த்தீங்களாப்பா என்னைப் பைத்தியமாக்கறார்.''

''அம்ருதா'' வேதாசலம் அவளருகில் வந்து தலையைத் தடவிக் கொடுத்து. ''உனக்கு ரெஸ்ட்டு தேவைன்னு நானும் நெனைக்கறேன்'' என்றார்.

''அப்பா! நீங்களும் ஆரம்பிச்சீங்களா, அவர் கூடச் சேர்த்துக்கிட்டு! என்னையும் பைத்தியம் ஆக்கிறாதீங்கப்பா!''

''இல்லைம்மா. இல்லை நான் அந்த மாதிரி செய்வேனா?''

அப்போது டெலிபோன் ஒலிக்க, ராம்பிரகாஷ் அதை எடுத்தார். ''நான் சோமசேகர் பேசறேன்! தர்மராஜன் இருக்காரா, அங்கே?''

''கிளம்பிப் போயிட்டாரு.''

''நான் உங்க மிஸஸ் கூட ஒரு வார்த்தை பேசலாமா?''

''கூடாது! நோ!''

''இன்னும் கோபம் தீரலையா? ஒரு விஷயம் நீங்களே அவங்ககிட்டே கேட்டுச் சொல்ல முடியுமா?'' என்றார்.

''என்ன?'' என்றார் அலட்சியமாக.

''பாபுன்னு ஏதாவது பேரு அவங்க பேசிக்கிறப்ப காதில் விழுந்ததான்னு கேக்கறீங்களா?'' என்றார் சோமசேகர்.

(தொடரும்)

Bisleri CLUB

ஆர். ஓ எனும் நவீன சுத்திகரிப்பு முறையால், குடிதண்ணீரை மறுபடி சுத்தம் செய்து தயாரிக்கும் சோடா

"Bisleri Club Soda"

சுத்தமான முறையில் தகுந்த பாதுகாப்போடு, சிறந்த மேற்பார்வையில் தயாரிக்கப்படுகிறது.



"பிஸ்லேரி கிளப் சோடா"

200 கோடி ரூபாய் புழக்கமுள்ள சக்தி குழுவின் ஓர் அங்கம்.

தயாரிப்பாளர்:

சென்னை பாட்லிங் கம்பெனி
426, பூந்தமல்லி நெடுஞ்சாலை
சென்னை — 600 106.

தொ.பே. 420440, 420755, 425150.

வட்டமேஜை

கேட்காமல் விட்ட கேள்வி...

* **வன்னியர் சங்கத் தலைவர் பேட்டி** மூலம் அவர்களது கொள்கை லட்சியம் பற்றித் தெளிவாக அறிய முடிந்தது. ஆனால் இவர்கள் கோரிக்கையால் நாட்டில் உள்ள சாதிப் பிரச்னை அதிகமாகி விடாதா....?

சென்னை — 41. எஸ். ரவீந்திரன்.

* புதுவையில் போட்டியிடுவோம் ஆட்சியைப் பிடிப்போம் என்று அறைகூவல் விடும் டாக்டர் ராமதாஸ், தமிழக அரசியல்வாதிகளை ஒட்டு மொத்தமாக 'ஓட்டுப் பொறுக்கிகள்' எனச் சாடுவது என்ன நியாயம்?

விருத்தாசலம். சித்ரபானு.

* இரண்டு கோடி வன்னியர்கள் தமிழகத்தில் இருப்பதாகக் கூறும் டாக்டர். ராமதாஸ், தேர்தலில் நிற்கும் பலம் கிடையாது என்று கூறுவது முரண் பாடாய் இருக்கிறதே!... தேர்தலில் நின்று பலம் வாய்ந்த எதிர்க் கட்சியானால், கோரிக்கைகளை ஆளும் கட்சி முன் வைத்துப் பேசிப் பலன் கிடைக்கப் பெறலாமே! இதையெல்லாம் விடுத்துக் 'தேர்தல் பகிஷ்கரிப்பு' என்று சொல்லி மலிவான விளம்பரத்தைத் தேடிக் கொள்வானேன்.

சென்னை — 17. ஜி. சுவாமிநாதன்.

* இதுவரை பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கிடைத்த சலுகைகளைப் பெரும்பாலும் பிற்படுத்தப்பட்டவர்களில் உள்ள ஆதிக்க ஜாதிகள்தான் அதிகம் பயன் படுத்திக் கொண்டுள்ளனர்... என்று டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார். அவர் கூற்றுப்படி, வன்னியர் வகுப்பிற்கு இருபது சதவிகித இட ஒதுக்கீடு கொடுத்தாலும், அதன் முழுப் பலனையும், அந்தக் குறிப்பிட்ட வகுப்பின் முன்னணியில் இருக்கும் ஒரு சில படித்த, செல்வாக்குள்ளவர்கள் தக்க வைத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்! இந்தக் கேள்வியை உமது நிருபர் கேட்கவில்லையே...!

கோவை. தங்கவேல்.

* "தமிழக அரசின் தமிழ் மொழித் துரோகம்" உண்மையை உரசி வெளிவந்த நியாயமான தலையங்கம்! நிர்வாகத் திறன் மிக்க கவர்னர் காலத்திலாவது நியாயம் கிடைக்குமா என்று பார்ப்போம்.

சென்னை — 16. சோழபுரம் தாஹா.

* 19.6.88 கல்கியில் வெளியான தலையங்கம் நியாயமான ஒன்றுதான். நான் வேலையில் சேராமல் இருந்த சமயம் — இரண்டு ஆண்டுகள் — நூலகத்தில் தான் பெரும்பாலான நேரத்தைக் கழித்தேன். ஒதுக்கப்பட்ட நூல்களை மாவட்ட மையத்திலிருந்து எங்கள் கிராமம் கொண்டு வந்து சேர்க்கவே ஒன்பது மாதங்கள் ஆகி விட்டன. அவற்றுக்கு வரிசை எண் தந்து, மற்ற வேலைகளைச் செய்து முடிக்க மேலும் ஆறு மாதங்கள் ஆகி விட்டன. நான் புத்தகங்களைப் படிக்க முடியாமல் அவற்றின் பெயர்களை மட்டும் தெரிந்து கொண்டு ஒரு வழியாக வெளியூர் வந்து விட்டேன். அரசும் சரி, நூலகர்களும் சரி கொஞ்சம் விவேகமுடன் நடந்து கொண்டால்தான் கிராமப்புற மக்கள் பயன் பெற முடியும்.

புன்செய்புளியம்பட்டி. ஆர். ரத்தினசாமி.

* அசோகமித்திரனின் 'அலைகள் ஓய்ந்து' சிறுகதையைப் படித்து முடித்ததும், பழைய நினைவுகளில் மூழ்கி, என் கண்கள் பனித்தன. ஆனால் ஒரு சிறு குறை... சில மாதங்களுக்கு முன்பாகவே இதைப் பிரசுரித்திருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்!

விருதுநகர். கே. டி. ஆர். சேகர்.

* வையவனின் சிறுகதையில் வந்த ஜனாவும், விமலாவும் தங்களின் வித்தியாசமான உரையாடல் மூலம் என்னை யோசிக்க வைத்தார்கள்! அதற்கு நேர் மாறாக அகஸ்தியனின் சிறுகதையில் வந்த கமலா, ஆழாக்கு, வீசை, காலணா, அரையணா கணக்கு மூலம் என்னைச் சிரிக்க வைத்தான்!

கடலூர். ஆர். வேணுமணி.

* குதிரைப் பந்தயம் மீண்டும் வருவதால் எத்தனை குடும்பங்கள் அல்லாடப் போகின்றன என்பதை கார்ட்டூன் மூலமாக இடித்துரைத்த உமது செயல் பாராட்டத்தக்கது.

சென்னை — 7. சலங்கை துரை.

* போராட்டங்களுடன் எதிர்நீச்சல் போடும் தன்னம்பிக்கை மிகுந்த பாஸ்கரன் வெற்றி பெற வாழ்த்துக்கள்.

சென்னை — 35. எஸ். தங்கராஜு.

* கிருஷ்ணா டைல்ஸ் பற்றிய செய்தியைப் படித்து வேதனையடைந்தேன். இதே போல் தமிழகத்தில் பல்வேறு தொழிற் கூடங்கள் அரசின் தொந்தரவுகளைச் சகித்துக் கொண்டிருக்க வேண்டியுள்ளது. தமிழக ஆளுனர் புதிய தொழிற்சாலைகளுக்கு வரவேற்கத்தக்க வகையில் சலுகைகளை அளித்துள்ளார். அதே போல் தொழிற்சாலைகளை அரசின் நசுக்குதலிலிருந்து காப்பாற்றினால் தொழிலதிபர்கள் தங்கள் தொழிலில் கவனம் செலுத்த முடியும்... நிச்சயமாகத் தமிழகம் ஒரு தொழில் பூங்காவாக மாற வாய்ப்பு உள்ளது.

மேலக்காவேரி. ஏ. கிரி.

* இவ்வாரம் "எதிர்க்கட்சி ஒற்றுமை சீட்டுக் கச்சேரி தானா?" எனும் தலைப்பிட்ட அட்டைப்படம் படு அமர்க்களம். கல்கிக்கே உரிய குறும்பு.

சென்னை — 71. முஹம்மத் லத்தீப் ராஜா.

* எம். கல்யாண சுந்தரம் அவர்கள், தமது பேட்டியில், "ஆர்ப்பாட்டமும், 'கட்—அவுட்'களும்தான் இன்றைக்கு இருக்கின்றன. ஆகவே, ஒரு வகையான கற்பனா ஜனநாயகம்தான் இப்போது நடக்கிறது!" எனும் வரிகளில், 'இந்திய அரசியலின் இன்றைய நிலையை அற்புதமாக வருணித்திருந்தார்.'

செங்குன்றம். ரெமெண்ட்.

* விஜயவாடா மாநாடு பற்றி எம். கல்யாண சுந்தரத்தின் கூற்று மிகச் சரியே. விஜயவாடா மாநாடு வெறும் நாடகமில்லை: 'சூப்பர் நாடகம்!'

விருத்தாசலம். எஸ். தமிழ்நேசன்.



வடக்கே வாங்கிய அடி தெற்கே எதிரொலிக்குமா?

சமீபத்தில் வடமாநிலங்களில் காங்கிரஸ் இடைத் தேர்தல்களில் அடி வாங்கியது குறித்து ஜெயலலிதாதான் மிகவும் சந்தோஷமாக இருக்கிறாராம்! "வரட்டும், பாதிக்குப் பாதி கேட்டால், 'உங்கள் லட்சணம்தான் தெரிந்து விட்டதே! இன்னும் என்ன?' என்று கேட்கப் போகிறேன்!'' என்று தமக்கு நெருங்கியவர்களிடம் பேசியிருக்கிறாராம். ஆனால் பண்ருட்டி, நாவலர் போன்றவர்கள், 'காங்கிரஸை அணைத்துக் கொண்டு போவதுதான் நீண்ட கால நோக்கில் நல்லது' என்று அவர் வேகத்துக்குத் தடைபோட்டு வருகிறார்கள். இல்லையெனில் ஜெயலலிதா, காங்கிரஸ் வழிக்கு வராவிட்டால் காங்கிரஸை ஒதுக்கி விட்டுத் தனித்துத் தேர்தல் களத்தில் குதிக்கவும் தயாராக இருக்கிறார்.

வடமாநிலங்களில் காங்கிரஸ் இடைத் தேர்தல்களில் அடைந்த தோல்வி, தமிழகத் தேர்தலையும் பாதிக்கும் என்று காங்கிரஸ்காரர்கள் பலர் அஞ்சுகிறார்கள். அதனால்தான் தேர்தலைத் தள்ளிப் போட வேண்டும் என்ற கருத்துக்கு அந்தக் கட்சிக்குள் ஆதரவு பெருகியுள்ளது. ஆனால், அவர்களுக்குள்ளேயே இன்னொரு சாரார், 'தமிழக கிராம மக்களுக்கு வடக்கே நடந்த தேர்தல்கள் பற்றி அக்கறை கிடையாது; நேரு குடும்பம் என்று கூறியே வோட்டு கேட்கலாம்; போபர்ஸ் என்றால் கிலோ என்ன விலை என்று தமிழகத்தில் பாமர மக்கள் கேட்பார்கள்; அதனால் பொதுத் தேர்தலை ஒத்திப் போட அவசியமில்லை' என்று கருதுகிறார்கள். 'எம். ஜி. ஆர். மறைந்த பிறகு இரு அணியினரிடமும் ஏற்பட்டுள்ள பூசலை நமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தனித்துப் போட்டியிட வேண்டும்' என்ற கருத்துக் கொண்ட காங்கிரஸ்காரர்கள், இரு அணியினர் மீது மக்களுக்கு ஏற்பட்டுள்ள அருவருப்பு குறைவதற்குள் தேர்தல் வந்து விட்டால் நல்லது என்று எண்ணுகிறார்கள்.

காங்கிரஸுக்குள் எவ்வளவு குழப்பமும் பதற்றமும் நிலவுகிறது என்பதற்கு ஓர் அளவுகோல் வேண்டுமானால் ப. சிதம்பரம் என்ற தெர்மாமீட்டரைப் பயன்படுத்திக் கொள்ளலாம்! படபட வென்று ஜுர வேகத்தில் எதையாவது பொரிந்து கொட்டிவிட்டுப் பிறகு வாங்கிக் கட்டிக் கொள்கிறார் மனுஷர்!

முன்பு ராஜ்ய சபையிலேயே சங்கர் தயாள் சர்மாவிடம், 'நீங்கள் அமைச்சராக இல்லையென்றால், அவையை விட்டு வெளியேற்றியிருப்பேன்' என்ற ஆசீர்வாதத்தைக் கேட்டுப் பெற்றுக் கொண்டவர் சிதம்பரம். பிறகு, 'செருப்பை வேண்டுமென்றால் போட்டுக் கொள்வேன்; வேண்டாவிட்டால் கழற்றி எறிவேன்' என்று ப. சி. கூறப் போக, நெடுஞ்செழியன், 'மரியாதை தெரியாது என்றால் என்னிடம் வந்து கற்றுக் கொள்' என்றார். கருணாநிதியோ, 'சிவகங்கை சின்னப்பையன்' என்ற பட்டத்தை வழங்கி பனாசினாவைக் கௌரவித்தார்!

இப்போது மறுபடியும் ப. சி., 'தி. மு. க. தேர்தல் நிதி திரட்டியது குறித்து விசாரணை நடக்கும்' என்று கூறி 'சிறுபிள்ளைத்தனமான பேச்சு' என்ற பதிலடியைக் கருணாநிதியிடம் பெற்றுக் கொண்டிருக்கிறார். அலகாபாத் தேர்தலில் காங்கிரஸ் செலவே செய்யாமலா தோற்றது? அந்தக் கோடிக் கணக்கான ரூபாய்கள் எங்கிருந்து வந்தன? ப. சி. விசாரணை நடத்துவாரா? ஒரு வேளை அத்தனை கோடியும் விழலுக்கு இறைத்த நீராகி விட்டதே என்ற ஆத்திரம்தான் சிதம்பரத்தை இப்படிப் பேச வைத்ததோ என்னவோ!

தமிழகத் தேர்தல் எப்போது வரும் என்று பிரதமர் எப்போது எப்படி முடிவெடுப்பாரோ என்னவோ, ஆனால் தூர்தர்சன் 'நமக்கெதற்கு வம்பு' என்று தேர்தல் நெருங்கி வந்து விட்டதாகவே கருதி, பிரதமரின் தேர்தல் கூட்டங்களைக் கூட ஒளிபரப்ப ஆரம்பித்து விட்டது! வாழ்க, அதன் ராஜீவ் விசுவாசம்! வளர்க, அதன் பிரதமர் பக்தி!

— லம்பாஜி

புகைப்படங்கள் : சுபா

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3 1 5 4 3, 4 3 4 1 5 7: ஆசிரியர் குழு அலுவலகம்: 4 3 4 1 4 5.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—: வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—: விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—: வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—: விமானத் தபால் ரூ. 340/—.


உங்களுக்குத் தெரியுமா?
கோகுல் பவுடர் தூய சந்தனமும், ஸ்டார்ச் கலவையும் இணைந்துள்ளதால் வியர்க்குருவை அகற்றுகிறது. கோகுல் பவுடர் கோடையில் சருமத்தை மென்மையாக பாதுகாக்கிறது.
நாள் முழுவதும் கமழும் நறுமணக்கலவை தனித் தன்மை வாய்ந்தது. ஏனெனில் மிக உன்னதமான வாசனை திரவியங்கள் கொண்டு தயாரிக்கப்படுவது.
கோகுல் பவுடர் இனிமை !
தென்றல் போல் குளுமை !
கோகுல் - தூய சந்தனத்தில் தயாரான ஒரே உன்னதப் பவுடர்.
"GOKUL"
SANTOL
TALCUM POWDER